REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 மே 9 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN

තිනකරන්

வரு. 91 இல. 108 | Tuesday 09, May, 2023 | 12பக்கங்கள் | 50/-




**பத்தரமுல்லை படைவீரர் நினைவுத்தூபிக்கு முன்பாக**

## தேசிய படைவீரர் நினைவு தினம் இம்முறையும் பெருமையுடன்

**19ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் ஏற்பாடு – சாகல தெரிவிப்பு**



இலங்கையில் முப்பது வருடகால யுத்தத்தின் போது வீர மரணம் அடைந்த படைவீரர்களுக்கு தேசத்தின் நன்றி தெரிவிக்கும் தேசிய படைவீரர் நினைவுதின நிகழ்வு முப்படைத்தளபதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான பூர்வாங்க கலந்துரையாடல் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று (08) காலை ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான 04

## இடைநிறுத்தப்பட்டுள்ள வீடமைப்பு திட்டங்கள் மீளவும் ஆரம்பம்

**திறைசேரியினால் 751 மில். ரூபா ஒதுக்கீடு**

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*



அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட 'உங்களுக்கு வீடு – நாட்டிற்கு நாளை' வீட்டுத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளில் நிறைவு செய்யப்படாத வீடுகளுக்கான நிர்மாணப் பணிகளை மீண்டும் 04

## CTB எக்காரணம் கொண்டும் தனியார் மயமாக்கப்படாது

**இரு மாதங்களுக்குள் CTBயில் QR கட்டண முறை**



இலங்கை போக்குவரத்துச் சபை எக்காரணம் கொண்டும் தனியார் மயமாக்கப்படமாட்டாது என போக்குவரத்து அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன (07) தெரிவித்தார். எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் இலங்கை போக்குவரத்து சபை பஸ்களில் கட்டணம் செலுத்தும் முறையை QR முறைக்கு மாற்ற தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள டிப்போக்கள் சிலவற்றுக்கு புதிய பஸ்களை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். போக்குவரத்து அமைச்சரின் பங்குபற்றலுடன் 04

**மன்னாரில் மர்மமான வாகனங்களின் நடமாட்டம் அதிகரிப்பு;**

# சிறுவர்களை இலக்கு வைத்து பல கும்பல்கள் ஊடுருவல்



**அரச அதிபர் பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டு வந்தார்**

**பாடசாலை மாணவர் சிலரை இலக்கு வைத்து இனிப்பு பண்டங்களை வழங்கி கடத்த முயற்சித்த சம்பவங்கள் பதிவு. அவதானமாக இருக்க சகல தரப்புக்கும் அரச அதிபர் திருமதி ஏ. ஸ்ரான்லி டி மெல் எச்சரிக்கை**

*தலை மன்னார் விஷேட நிருபர்*

மன்னாரில் அண்மைக் காலங்களாக சந்தேகத்திற்கு இடமான வாகனங்கள் சுற்றித் திரிவதாகவும் சிறுவர்களை இலக்கு வைத்து அவர்களை கடத்தும் நோக்கில் சிலர் மன்னார் மாவட்டத்திற்குள் ஊடுருவி உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், 04

## லண்டனில் இலங்கை சாரணர்கள் ஜனாதிபதி ரணிலுடன் சந்திப்பு

**சிநேகபூர்வ உரையாடலில் பல விடயங்கள் ஆராய்வு**



ஐக்கிய இராச்சிய சாரணர் இயக்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட முடிசூட்டு விழா முகாமில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்ற இலங்கை சாரணர் இயக்கத்தின் சிரேஷ்ட சாரணர்கள் மற்றும் பெண் சாரணர்களுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் (07) லண்டனில் இடம்பெற்றது.

முடிசூட்டு விழாவிற்கு இலங்கை சாரணர் இயக்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஷலினி பெரேரா, அரிதா பண்டார, அசேல பண்டார மற்றும் 04

## கமலஹாசனை இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு

**இந்திய துணைத்தூதுவர் வெங்கடேஷ்வரன்**



மூன்றாம் சார்ள்ஸ் மன்னர் மற்றும் ராணி துணைவியாரின் முடிசூட்டு விழாவைக் கொண்டாடும் வகையில் சென்னையில் பிரிட்டிஷ் துணை உயர் ஸ்தானிகர் ஏற்பாடு செய்திருந்த இரவு விருந்தில் தென்னிந்தியாவிற்கான இலங்கையின் துணை உயர் ஸ்தானிகர் டி. வெங்கடேஷ்வரன் பங்கேற்றார். நிகழ்வின் முதன்மை விருந்தினரான பத்மஸ்ரீ கமல்ஹாசனை சந்தித்த துணை உயர்ஸ்தானிகர், எதிர்காலத்தில் இலங்கைக்கு வருமாறு அழைப்பும் விடுத்தார்.

## 05 வருடங்களாக வருமான வரி அனுமதி பத்திரத்தை புதுப்பிக்காவிடின் ஆபத்து

**கறுப்புப் பட்டியலில் அவற்றை சேர்க்க RMB தீர்மானம்**



5 வருடங்களாக வருமான அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்காத வாகனங்களை கறுப்புப் பட்டியலில் சேர்க்க மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தீர்மானித்துள்ளது. மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த விசேட அறிக்கை ஒன்றில் இதனைத் தெரிவித்துள்ளார். அவ்வாறான வாகனங்களை தகவல் அமைப்பிலிருந்து நீக்குவதற்கும் 04

**யாழில் இவ்வருடம் 600 வீட்டுத் திட்டங்கள்;**

## இறுதிப்பட்டியலை காட்சிப்படுத்த அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்து




யாழ். மாவட்டத்தில் இவ் வருடம் வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்காக 600 வீட்டு திட்டங்கள் வழங்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் முரளிதரன் (காணி) தெரிவித்த நிலையில் இறுதிப் பட்டியலை காட்சிப்படுத்த வேண்டும் என யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்துள்ளார். யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற அபிவிருத்தி 04

## அதிபர் சேவை 03ஆம் தர நேர்முகப் பரீட்சை

**இம்மாதம் 22இல் நடத்த தீர்மானம்**

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*



இலங்கை அதிபர் சேவையின் 03ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பை மேற்கொள்ளும் வகையில் அவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 22ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. அந்தவகையில் அதிபர் சேவைக்கு நியமிப்பதற்காக மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு தோற்றிய விண்ணப்பதாரிகளுக்கே 04

## மக்கள் ஆணையுடன் மீண்டும் மஹிந்த ராஜபக்ஷ பிரதமராவார்

**SLPP முழுமுயற்சி என்கிறார் சாகர காரியவசம்**



மக்கள் ஆணையுடன் மீண்டும் மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக்குவோம். அரசியல் சூழ்ச்சி, அரசியல் நெருக்கடி ஆகியவற்றின் ஊடாக மஹிந்தவை பிரதமராக்க வேண்டிய தேவை எமக்கு கிடையாது. பொதுஜன பெரமுனவின் கொள்கைகளை முழுமையாக ஏற்றுக்கொள்பவரை ஜனாதிபதி வேட்பாளராக நாம் அறிவிப்போம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார். அடுத்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ என அரசியல் களத்தில் 04

## வடக்கு, கிழக்கு பகுதிகளில் முள்ளிவாய்க்கால் கஞ்சி

**யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஏற்பாடு**

*யாழ். விசேட நிருபர்*




முள்ளிவாய்க்கால் சம்பவத்தை நினைவு கூர்ந்து இன்று 9 ஆம் திகதி முதல் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை வடக்கு, கிழக்கு பகுதிகளில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது. யாழ் பல்கலைக்கழகத்தில் 04

## கொழும்பில் மட்டும் 6,500 டெங்கு நோயாளர்

**கம்பஹாவில் அதிகமானோர் பாதிப்பு**



நாடளாவிய ரீதியில் பரவி வரும் டெங்கு நோயை கட்டுப்படுத்த சுகாதார அமைச்சு துரித நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. கம்பஹா மாவட்டத்தில் அதிகபட்சமாக 6,953 நோயாளிகளும், கொழும்பு மாவட்டத்தில் 6,500 நோயாளிகளும் பதிவாகியுள்ளனர். இந்த ஆண்டின் இது 04

## உல்லாச படகு கவிழ்ந்து 21 பேர் பரிதாப பலி

**கேரளா மாநிலத்தில் சோக சம்பவம்**



இந்தியாவின் கேரளா மாநிலத்தில் உல்லாசப் படகொன்று கவிழ்ந்ததால் குறைந்தபட்சம் 21 பேர் உயிரிழந்துள்ளனர். மலப்புரம் மாவட்டத்தின் தனூர் பரப்பனங்காடி கடற்கரையில் நேற்று இரவு இப்படகு கவிழ்ந்தது. மீட்பு நடவடிக்கைகள் நேற்று திங்கட்கிழமை 04

## அரசியலமைப்பு பேரவையில் விசேட கூட்டம் இன்று

**சுயாதீன ஆணைக்குழுக்கள் நியமனம் குறித்து ஆராய்வு**

*லோரன்ஸ் செல்வநாயகம்*



அரசியலமைப்பு பேரவையின் விசேட கூட்டமொன்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் இன்று பாராளுமன்ற கட்டடத்தில் நடைபெறவுள்ளது. சுயாதீன ஆணைக்குழுக்களை 04

## 15 கோடி ரூபா பெறுமதியான 07 Kg தங்க நகைகள் கடத்தல்

**இடுப்பில் மறைத்து நாட்டுக்குள் கடத்த முயன்றவர் கைது**



15 கோடியே 25 இலட்சம் ரூபா பெறுமதியான 7 கிலோ நிறை கொண்ட தங்கத்தை சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டு வந்த ஒருவரை பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரிகள் குழுவொன்று, கட்டுநாயக்க விமான நிலையத்தை விட்டு வெளியேறும்போது கைது செய்துள்ளது. 04

# சூடான் உள்நாட்டு போர்; இலங்கையர் 32 பேர் இதுவரை தாயகம் திரும்பியுள்ளனர்

## இலங்கைக்கான சவூதி தூதுவர் தெரிவிப்பு

**மர்லின் மரிக்கார்**

சூடானில் ஏற்பட்டுள்ள உள்நாட்டு போருக்கு மத்தியில் சிக்குண்டிருந்த இலங்கையரில் இற்றைவரையும் 32 பேர் தாயகம் திரும்பியுள்ளனர். அவர்களில் 14 பேர் கடந்த 29 ஆம் திகதி நாட்டை வந்தடைந்ததாக வெளிவிவகார அமைச்சின் அதிகாரியொருவர் நேற்றுத் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் அல்கஹ்தானி, சூடானில் ஏற்பட்டுள்ள உள்நாட்டு போருக்கு மத்தியில் சிக்குண்டுள்ள வெளிநாட்டு பிரஜைகளை பாதுகாப்பாக மீட்டு அழைத்துவரும் மனிதாபிமான நடவடிக்கைகளின் கீழ் 32 இலங்கையர், 278 சவூதி பிரஜைகள் உட்பட 110 நாடுகளைச்



சேர்நத 8498 பேரை ஜித்தாவுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

அவர்கள் தத்தம் நாடுகளுக்கு புறப்படுவதற்கு தயாராகும் வகையில் அவர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் சவூதி அரேபியா செய்து கொடுத்துள்ளது. இதேவேளை இரண்டு புனித மசூதிகளின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின் அப்துல் அசீஸ் ஆல் சவூத் மற்றும் பட்டத்து இளவரசர் பிரதமர் இளவரசர் முஹம்மது பின் சல்மான் பின் அப்துல் அசீஸ் அல் சவூத், சூடான் மக்களுக்காக, 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்பிலான பல்வேறு மனிதாபிமான உதவிகளை வழங்குமாறும், அம்மக்கள் தற்போது அனுபவித்து வரும் இன்னல்களின் விளைவுகளைத் தணிக்க 'சாஹிம்' தளத்தின் மூலம் ஒரு பாரிய பிரசாரத்தை ஏற்பாடு செய்யுமாறும், மன்னர் சல்மான் மனிதாபிமான உதவிகள் மற்றும் நிவாரண மையத்திற்கு உத்தரவிட்டுள்ளனர்.

சூடானிய மக்கள் எதிர்கொள்ளும் கடினமான நெருக்கடியின் விளைவுகளைத் தணிப்பதற்காக இம்மனிதாபிமான உதவிகளுக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதன்படி, சூடான் இடம்பெயர்ந்தவர்களுக்கு நிவாரணம் மற்றும் மனிதாபிமான உதவிகள், மருத்துவ உதவிகள் வழங்கப்படும். உலகின் எப்பகுதியிலிருந்தாலும் இன்னல்கள் படும் மக்களுக்கு உதவ முன்வருவது போன்று இவ்வுதவிகளை வழங்க இரண்டு புனித மதஸ்தலங்களின் பாதுகாவலரும் பட்டத்து இளவரசரும் அனுமதி வழங்கியுள்ளனர்.

இதேவேளை, சூடானில் இருந்து நேற்று முன்தினம் சவூதி அரேபிய மன்னருக்குச் சொந்தமான 'அபஹா' மற்றும் 'ரியாத்' என்ற கப்பல்கள் மூலம் 453 பேரும், சவூதி அரேபிய வான்படைக்குச் சொந்தமான மூன்று விமானங்கள் மூலம் 690 பேரும் ஜித்தா நகரை வந்தடைந்துள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஃபென்டனில் போதைப் பொருள்

# சீனாவில் இருந்து வருவதாக மெக்சிகோ குற்றச்சாட்டு

## சீனா மறுப்பு: இது அமெரிக்க விவகாரம் என்கிறது

மிகவும் அதிகமான போதை வீரியம் கொண்ட ஃபென்டனில் சீனாவில் இருந்து அமெரிக்காவுக்கு கடத்தப்படுவதற்கான தடயங்கள் கிடைத்திருப்பதாகவும் இது தொடர்பாக சீன ஜனாதிபதியின் ஒத்துழைப்பைக் கேட்டு தான் கடிதம் எழுதவிருப்பதாகவும் மெக்சிகோ ஜனாதிபதி தெரிவித்திருப்பதாக பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த போதைப்பொருளை ஏற்றிவந்த கப்பல் ஒன்று பசுபிக் துறைமுகமான லஸாரோ கார்டனாசில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும மெக்சிகோவுக்குள் நுழைவதற்கு முன்பாக சீன நகரான குய்ங்டாவோவில் இருந்து புறப்பட்டு தென்கொரியாவில் பூசான் வழியாக பயணித்திருப்பதாகவும் பி.பி.சி. மேலும் கூறியுள்ளது. இதேசமயம் மெக்சிகோ கடற்படை செயலாளரான ரபாயல் ஒஜேடா, 75 இறாத்தல் பைக்கட்டுகளாக போதைப் பொருட்கள் காணப்பட்டதாக தகவல் தெரிவித்துள்ளார்.

இதே சமயம் சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளரான மாலோநிங், சீனாவுக்கும் மெகஸிகோவுக்கும் இடையில் போதைப் பொருள் கடத்தல் கிடையாது என்றும் சீனாவில் இருந்து அனுப்பப்பட்ட ஃபென்டனில் கைப்பற்றப்பட்டதாக இதற்கு முன்பு மெக்சிகோ எமக்கு அறிவிக்கவும் இல்லை என்றும் பி.பி.சிக்கு தெரிவித்துள்ளதோடு, அமெரிக்காவில் ஃபென்டனில் பயன்பாடு என்பது முற்றிலும் அமெரிக்காவில் உருவான பிரச்சினையே என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதே சமயம் ஃபென்டனில் மெக்சிகோவில் தயாரிக்கப்படுவதில்லை என்றும் கடத்தல்காரர்கள் ஆசிய பிராந்தியத்தில் இருந்து கொண்டு வருவதாகவும் மெக்சிகோ ஜனாதிபதி லொபேஸ் ஒப்ராடோர் தெரிவித்துள்ளார்.

2021 இல் அதிக போதை பாவனை காரணமாக அமெரிக்காவில் மரணித்தவர்களில் 67 சதவீதமானோரின் மரணத்துக்கு ஃபென்டனில் காரணமானதாக தெரிய வந்துள்ளது.

# நகர்வலம்



## டெங்கு நோய் தாக்கம் அதிகரிப்பு

# தம்புள்ளையில் தாதியர் உள்ளிட்ட 60 ற்கும் மேற்பட்டோர் பாதிப்பு

**(தம்புள்ளை தினகரன் நிருபர்)**

தம்புள்ளை வீர டென்ஸில் கொப்பேகடுவ வைத்தியசாலை மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் டெங்குக்காய்ச்சலினால் சுமார் 60 இற்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தம்புள்ளை வைத்தியசாலையில் பணியாற்றும் தாதியர்கள்



உள்ளிட்ட சுமார் 60 பேர் டெங்குக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. இதேவேளை, தம்புள்ளை நகரத்தினூடாக வைத்தியசாலைக்கு மிகவும் சமீபமாக பெருக்கெடுத்தோடும் 'தம்மென்னா' நீரோடை மிகவும் அசுத்தமடைந்து வைத்தியசாலை கழிவறை நீருடன் கலந்தோடுவதைத் தொடர்ந்து டெங்கு நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துவருவதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

# விவசாய பசளைகளை திருடி விற்பனை செய்ய முயற்சி

## விவசாய கழக பொருளாளர் மீது குற்றச்சாட்டு

**(திறப்பனை தினகரன் நிருபர்)**

விவசாயிகளுக்கு வழங்குவதற்காக களஞ்சியப்படுத்தி வைத்திருந்த பசளைகளை திருடி விற்பனை செய்ய முற்பட்டதாக விவசாய கழக பொருளாளர் ஒருவர் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

அரசாங்கத்தினால் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு எஞ்சியிருந்த பசளைகளையே களஞ்சியசாலையிலிருந்து இவர் திருடி விற்பனை செய்ய முயற்சித்துள்ளதாக தெரியவருகின்றது.

களஞ்சியசாலையிலிருந்து பசளைகளை திருடி விற்பனை செய்யும் நோக்கில் காட்டு வழியொன்றின் ஊடாக வாகனமொன்றில் எடுத்துச் செல்லும்போதே இவர் கெப்பிதிக்கொல்லாவ பிரதேசத்தில் வைத்து சிக்கியுள்ளார்.

அதேபோன்று எஞ்சிய பசளைகள் விவசாய கழக பொருளாளரின் வீட்டிலுள்ள களஞ்சிய அறையிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவத்தில் கைப்பற்றப்பட்ட பசளை மீண்டும் விவசாய கழகத்தின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் சம்பந்தமாக கெப்பிதிக் கொல்லாவ விவசாயசேவை அதிகாரியிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## மேல் மாகாண சபை முன்னாள் அமைச்சர் சுனில் ஜயமினி காலமானார்

**(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)**



மேல் மாகாண சபையின் முன்னாள் அமைச்சரும் சபை முதல்வருமான சுனில் ஜயமினி காலமானார். கொழும்பு மாவட்ட உறுப்பினராக இருபத்தாறு வருட காலம் மேல் மாகாண சபையில் மக்கள் பிரதிநிதியாக பணியாற்றிய இவர், கெஸ்பேவ பிரதேச சபையின் முன்னாள் உப தலைவருமாவார்.

1993 ஆம் ஆண்டு இடம்பெற்ற இரண்டாவது மேல்மாகாண சபைக்கான தேர்தலில் வெற்றி பெற்று முதல் தடவையாக மாகாண சபைக்கு தெரிவானார்.

# 32 வருடகால ஆசிரிய சேவையிலிருந்து ஜெய்னுலாப்தீன் பௌஸிக் ஓய்வு



மூதூர் மத்திய கல்லூரியில் ஒரு பட்டதாரி ஆசிரியராக இணைந்து கொண்ட ஜெய்னுலாப்தீன் பௌஸிக் தனது 32 வருட கால ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெறுகின்றார்.

1999 ஆம் ஆண்டு ஒரு ஆசிரியராக பேருவளை அல் ஹுமைஸரா தேசிய பாடசாலையில் இணைந்த இவர், ஓய்வு பெறும் வரையில் 23 ஆண்டுகள் மிகவும் சிறப்பாக சேவையாற்றி மாணவர்களினதும் பாடசாலைச் சமூகத்தினதும் பாராட்டுக்களையும் பிரார்த்தனைகளையும் பெற்றுக் கொண்டார்.

அல் ஹுமைஸராவில் உதவி அதிபராக கடமையாற்றிய இவர், தரம் 8, 9 வகுப்புகளுக்கு பொறுப்பாகவிருந்து அந்தப் பிரிவை சிறப்பாக வழிநடாத்தினார். அவரது பிரிவில் மெல்லக் கற்கும் மாணவர்களுக்காக விசேட செயற்றிட்டங்களை அவர் மேற்கொண்டார்.

இக்காலத்தில் பாடசாலைகளின் பல அடைவுகளுக்கும், சாதனைகளுக்கும் உந்து சக்தியாக காணப்பட்டார். இவர் மே 02ஆம் திகதியுடன் தனது மூன்று தசாப்த கல்வி சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார்.

அவரின் ஓய்வு காலம் சிறப்பாக அமைய அதிபர், ஆசிரியர்கள் கல்விசாரா ஊழியர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள், பாடசாலை சமூகம் இறைவனிடம் பிரார்த்திப்பதாக தெரிவித்துள்ளனர்.

# சிறுகதைப் போட்டி முடிவுகள்



புதிய அலை கலை வட்டம் வருடாந்தம் நடத்திவரும் எவோட்ஸ் கலை கலாசாரப் போட்டித் தொடரின் சிறுகதைப் போட்டிக்கான முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதில் முதலாமிடத்தை உருத்திரபுரத்தைச் சேர்ந்த ஜனகா நீக்கிலஸூம் இரண்டாமிடத்தை அக்கரப்பத்தனையைச் சேர்ந்த அழகு கனகராஜாவும் மூன்றாமிடத்தை கிண்ணியாவைச் சேர்ந்த எ.எம்.கஸ்புள்ளாவும் பெற்றுள்ளனர்.



இலங்கை மற்றும் மாலைத்தீவு 2023 / 24ஆம் ஆண்டுக்கான ரோட்டரி மாவட்ட ஆளுநர் ஜெரோம் ராஜேந்த்ரவின் நியமன வைபவம் ஷங்கிரிலா ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றது. (படம்: ருஸைக் பாரூக்)

# யால தேசிய சரணாலய யானை உயிரிழந்த நிலையில் கண்டுபிடிப்பு

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

யால தேசிய சரணாலயத்தில் வாழ்ந்து வந்த மிகப் பெரிய தந்தத்தினை கொண்டிருந்த யானை லுனு கம்வெஹெரை நீர்தேக்கத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் நேற்றுமுன்தினம் (07) தெரிவித்தனர்.

யானை நீர்தேக்கத்தில் வீழ்ந்து உயிரிழந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. இந்த யானை உயிரிழக்கும் போது 40 வயது அளவில் இருக்கும் என அவ்வதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். கடந்த சில மாதங்களாக வனஜீவராசிகள் திணைக்கள வைத்தியர்களின் கண்காணிப்பில் இந்த யானை இருந்து வந்துள்ளது. சரணாலயத்திற்கு சுற்றுலா வருவோரை கவரக்கூடியதாக இந்த யானை இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## தமிழ் புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வுகள்

பசறை கல்வி வலயத்துக்குட்பட்ட பது/மீதும்பிட்டிய இல 02 தமிழ் வித்தியாலயத்தின் சிங்கள, தமிழ் புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வுகள் மிக சிறப்பாக நடைபெற்றன. இந்நிகழ்ச்சியில் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் மற்றும் சித்திரை பாரம்பரிய விளையாட்டுகளும் நடைபெற்றன. இந்நிகழ்வில் பசறை பொலிஸ் நிலைய அதிகாரிகள்,அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (படங்கள்: மடுல்சீமை நிருபர்)

பாணந்துறை வேறவத்த 'ஸம் ஸம்' பாலர் பாடசாலை வருடாந்த போட்டி நிகழ்ச்சிகள் அண்மையில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வினோத உடைப் போட்டியில் பங்குபற்றிய மாணவர்களை படத்தில் காணலாம். (படம்: பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)



# குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் தலாவ பொலிஸ்பிரிவுக்குட்பட்ட நபடவெவ இதிகஸ்பொதான வனத்திலிருந்து ஆணொருவரின் சடலம் நேற்றுமுன்தினம் (07) காலை மீட்கப்பட்டுள்ளதாக தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

தலாவ கரகஹவெவ பகுதியைச் சேர்ந்த 55 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 6ஆம் திகதி இதிகஸ்பொதான வனத்திற்கு அருகிலுள்ள விவசாய நிலத்துக்கு சென்ற அவர், மதிய உணவிற்காக வீட்டுக்கு வராத காரணத்தினால் இதுதொடர்பில் தலாவ பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

அதற்கமைய தலாவ பொலிஸார், உறவினர்கள் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து நபடவெவ இதிகஸ்பொதான வனப்பகுதியில் தேடுதல் பணிகளை முன்னெடுத்தனர்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் (07) காலை 8.30 மணியளவில் பிரதான வீதியிலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்திலுள்ள வனத்திலிருந்து அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். தலாவ இதிகஸ்பொதான வனத்திற்கு பக்கத்து வீட்டிலிருந்து உயிரிழந்த நபரின் மோட்டார் சைக்கிள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444, 0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 மே 9 செவ்வாய்க்கிழமை
தினகரன்
THINAKARAN
திනකරන්

தொழுகை நேரம்
10 முதல் 13 வரை
சுபஹ் - 05.04
லுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் சித்திரை 5
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



ஐரோப்பிய யூனியனின் GSP+ தீர்வை வரி

# நிவாரணம் தொடர்பில் புதிய கட்டளைகள் இன்று வெளியீடு

## வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஐரோப்பிய யூனியனின் GSP+ தீர்வை வரி நிவாரணம் தொடர்பான புதிய கட்டளைகள் இன்று வெளியிடப்படவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய சங்கம் இலங்கை ஒன்றிணைந்த ஆணைக்குழுவின் 25வது அமர்வின் போது புதிய கட்டளைகள் வெளியிடப்படவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்த அமர்வு இன்றைய தினம் வெளிவிவகார அமைச்சில் இடம்பெறவுள்ளதுடன் அந்த அமர்வில் பங்கேற்பதற்காக ஐரோப்பிய யூனியனை பிரதிநிதித்துவப்படுத்தி அதன் வெளிநாட்டு செயற்பாட்டு சேவையின் ஆசிய பசுபிக் பிராந்திய பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் பச்சோலா சம்பலோனி கலந்துகொள்ளவுள்ளார்.

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேதிலக்கவின் தலைமையில் இலங்கை அரசாங்கத்தின் குழு இந்த அமர்வில் பங்கேற்கவுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

# வெசாக் பண்டிகையை சிறப்பாக நடத்தியதுபோல் பொசன் பண்டிகையையும் நடத்த வேண்டும்

## சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி விசேட பணிப்புரை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பொசன் பண்டிகையை வெகு விமரிசையாக கொண்டாடுவதற்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்ட செயலாளர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன் நாடளாவிய ரீதியில் பொசன் பண்டிகை தொடர்பில் ஆராய்ந்து அந்த புண்ணிய நிகழ்வுகளை சாத்தியமாக முன்னெடுக்கும் வகையில் ஜனாதிபதி செயலகம் நேரடி அனுசரணையை மேற்கொள்ள வேண்டுமென ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விசேட பணிப்புரையை வழங்கியுள்ளார்.

அநுராதபுரம் மிஹிந்தலை புனித பூமியை மையமாகக்கொண்டு பிரதான புண்ணிய நடவடிக்கைகளை ஏற்பாடு செய்யுமாறும் அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை ஆகிய வரலாற்று புனிதத் தலங்களை கேந்திரமாகக்கொண்டு மேற்கொள்ளப்படும் மத வழிபாடுகளுக்கு அரசாங்கத்தின் அனுசரணை தலையீடு எந்தவகையில் தேவைப்படும் என்பதுதொடர்பில் அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டுள்ளார்.

அரசாங்கத்தின் அனுசரணையுடன் வெசாக் பண்டிகையை சாத்தியமானவாறு நடத்தமுடிந்துள்ளதுடன் அதேபோன்று எந்தவித குறைவுமின்றி பொசன் பண்டிகையையும் நடத்தப்படவேண்டும் என்றும் ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

# ஜனாதிபதி ரணில் நாடு திரும்பினார்

ஐக்கிய இராச்சியத்திற்கான தனது விஜயத்தை முடித்துக் கொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று நாடு திரும்பியுள்ளார்.

லண்டனில் சனிக்கிழமை நடைபெற்ற மூன்றாம் சார்லஸ் மன்னரின் முடிசூட்டு நிகழ்வுக்காக ஜனாதிபதி கடந்த வியாழன் ஐக்கிய இராச்சியம் சென்றிருந்தார்.

அங்கு, மூன்றாம் சார்லஸ் மன்னரின் பங்கேற்புடன் லண்டனில் நடைபெற்ற பொதுநலவாய தலைவர்களின் மாநாட்டிலும் ஜனாதிபதி பங்கேற்றார்.

பின்னர் கானா மற்றும் ருவண்டா ஜனாதிபதிகளுடனும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கலந்துரையாடினார். தொடர்ந்து, சனிக்கிழமை லண்டனின் வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் நடைபெற்ற மூன்றாம் சார்ல்ஸ் மன்னரின் முடிசூட்டு நிகழ்வில் பங்கெடுத்த ஜனாதிபதி, சார்ல்ஸ் மன்னரை சந்தித்தமையும் குறிப்பிடத்தக்கது.

டெலிகொம் நிறுவனத்தின் அரசின் பங்குகள்

# ஜூன் 15ஆம் திகதி வரை விற்கப்பட மாட்டாது

## நிதியமைச்சு உச்ச நீதிமன்றத்திற்கு உறுதியளிப்பு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

ஜூலை மாதம் 15ஆம் திகதிவரை டெலிகொம் நிறுவனத்தின் அரசாங்கத்திற்கு சொந்தமான பங்கு விற்பனை செய்யப்படமாட்டாது என நிதியமைச்சின் செயலாளர் உச்ச நீதிமன்றத்திற்கு உறுதியளித்துள்ளார்.

டெலிகொம் நிறுவனத்தின் பங்குகளை விற்பனை செய்வதற்கு எதிராக அந்த நிறுவனத்தின் தொழிற்சங்க பிரதிநிதிகள் இருவர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ள மனு மீதான விசாரணை நேற்று இடம்பெற்ற போதே நிதியமைச்சினால் இந்த உறுதிமொழி வழங்கப்பட்டிருந்தது.

நிதியமைச்சின் செயலாளர் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த பிரதி

சொலிசிட்டர் ஜெனரல் அது தொடர்பில் நீதிமன்றத்திற்கு விடயங்களை முன்வைத்ததுடன் அந்த பங்குகளை விற்பனை செய்யும் நடவடிக்கைகள் முழுமையாக சட்டப்படியானதே எனக் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும் இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் ஜூன் 15ஆம் திகதி வரை அப் பங்குகளை விற்பனை செய்யப் போவதில்லையென நிதியமைச்சு நீதிமன்றத்திற்கு உறுதியளித்துள்ளது.

# மஹிந்த, பெசில் ஆகியோருக்கு எதிரான மனு மீதான விசாரணை ஜூலை 05 இல்

## உச்ச நீதிமன்றம் நேற்று அறிவிப்பு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



முன்னாள் நிதியமைச்சர்களான மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மனு மீதான விசாரணையை ஜூலை மாதம் 05ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு உச்ச நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்பு கூறவேண்டிய நபர்களுக்கு எதிராக விசாரணைகளை நடத்தவேண்டுமென உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி மேற்படி அடிப்படை உரிமை மனு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அந்த மனு மீதான விசாரணை நேற்றைய தினம் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரியவின் தலைமையிலான ஐவரடங்கிய உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குழு முன்னிலையில் முன்னெடுக்கப்பட்டபோதே அந்த மனு மீதான விசாரணையை எதிர்வரும் ஜூலை 05ஆம் திகதி நடத்துவதற்கு நீதிபதிகள் குழாம் தீர்மானித்துள்ளது.

# விடைத்தாள் திருத்தும் பணிகள் இவ்வாரம் வழமைக்குத் திரும்பும்

## 12 பாடங்களுக்கான விடைத்தாள் திருத்தும் செயற்பாடுகள் ஆரம்பம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான விடைத்தாள் திருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 12 பாடங்களுக்கான விடைத்தாள் திருத்தும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

ஏனைய அனைத்துப் பாடங்களுக்குமான விடைத்தாள் திருத்தும் பணிகளை முழுமையாக முன்னெடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அந்த வகையில் இந்த வாரத்திற்குள் விடைத்தாள் திருத்தும் நடவடிக்கைகள் வழமையான முறையில் நடத்தப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் அதுதொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் தொழிற்சங்க சம்மேளனம் விடைத்தாள் திருத்தும் பணிகளுக்காக இதுவரை தமக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளது.

# பானகமுவ அந்நூர் தேசிய பாடசாலைக்கு ரூ. 08 கோடி செலவில் வகுப்பறை கட்டடம்

## அடிக்கல் நாட்டு விழாவில் பலரும் பங்கேற்பு

**(மாவத்தகம தினகரன் நிருபர்)**




குருநாகல் பானகமுவ அந்நூர் தேசிய பாடசாலையின் பழைய மாணவர்கள் மற்றும் ஊர் மக்களினால் 8 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள புதிய மூன்று மாடி வகுப்பறைக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா அதிபர் ஏ. எம். இர்சாட் தலைமையில் (07) நடைபெற்றது.

இந்நிகழ்வில் முன்னாள் வடமேல் மாகாண சபை உறுப்பினர் எம். எம். தஸ்லீம் மற்றும் பானகமுவ முன்னாள் சமாதான அமைப்பின் தலைவர் ஏ. பீ. ஏ. மலீக் ஆகியோர்களுடன் ஊர் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இதில் கொழும்பு சாஹிராக் கல்லூரியின் உப அதிபரும் வளவாளருமான றஸீன் ஹஸன் அவர்களின் விசேட உரையும் பாடசாலை மாணவர்களின் விசேட கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் உப தலைவர் எம். எம். அஹ்மட் ரஸ்மி செயலாளர், பாடசாலை அபிவிருத்தி

04

# சவுதி அரேபியாவின் மனிதாபிமான பணிகளுக்கு பாராட்டு

## உலமா சபை உதவிப் பொதுச் செயலாளர் மௌலவி தாஸீம்



சவுதி அரேபிய மன்னர் ஸல்மான் பின் அப்துல் அஸீஸ் மற்றும் முடிக்குரிய இளவரசர் முஹம்மது பின் ஸல்மான ஆகியோரின் வழிகாட்டலில் சூடான் நாட்டில் சவுதி அரேபிய அரசு மேற்கொண்டு வரும் மனிதாபிமான முயற்சிகள் மற்றும் பணிகள் பாராட்டுக்குரியவை என ஜம்இய்யதுல் உலமா சபையின் உதவிப் பொதுச் செயலாளரும் ஜம்இய்யதுஷ் ஷபாப் நிறுவன பணிப்பாளரும் தேசிய சர்வமத அமைப்பின் உறுப்பினருமான தேசமான்ய அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம். தாஸீம் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் குறிப்பிட்ட அவர், சூடான் பாதுகாப்புப் பிரிவுகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள பாரிய மோதல்களினால் பல்வேறு நாட்டு மக்கள் அங்கு சிக்கித் தவிக்கிறார்கள். அவர்களை பாதுகாப்பாக வெளியேற்றும் முயற்சியில் சவுதி அரேபிய கப்பல்கள் பாரிய முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகின்றன. இலங்கை நாட்டு பிரஜைகள் கூட பாதுகாப்பாக ஜித்தா நகருக்கு கொண்டு வரப்பட்டுள்ளனர். அது மாத்திரமன்றி அவர்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து கொடுப்பதில் சவுதி அரேபியா காட்டி வரும் ஆர்வம் போற்றத்தக்கது. அண்மையில் இலங்கைக்கான சவுதி அரேபியத் தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானியும் இந்த விவகாரம் தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்தார். இதற்கு பங்களிக்கும் அனைவருக்கும் நன்றிகள் உரித்தாகட்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (பா)

சிறுமியொருவர் துஷ்பிரயோகம்

# குற்றவாளிக்கு பத்து வருட கடூழிய சிறை

## கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**


சிறுமியொருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த சம்பவம் தொடர்பில் குற்றவாளியாக்கப்பட்டுள்ள நபர் ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் 10 வருட கடூழிய சிறைத்தண்டனையை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

அத்துடன் நீதிமன்றமானது மேற்படி குற்றவாளிக்கு 5000 ரூபா தண்டப் பணத்தை செலுத்துமாறு உத்தரவிட்டுள்ளதுடன் பாதிப்புக்குள்ளான சிறுமிக்கு 200,000 ரூபாவை நஷ்டஈடாக வழங்கவேண்டுமென்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்றைய தினம் மேற்படி வழக்கு மீதான விசாரணை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்ற

04

# யாழ். நல்லூர் விபத்தில் பெண்ணொருவர் படுகாயம்



**பருத்தித்துறை விசேட நிருபர்**

யாழ்ப்பாணம், நல்லூர் பகுதியில் நேற்று திங்கட்கிழமை (08) இடம்பெற்ற விபத்தில் பெண்ணொருவர்படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நல்லூர் ஆலயத்துக்கு முன்பக்கமாகவுள்ள பருத்தித்துறை வீதியும் செம்மணி வீதியும் இணைகின்ற முத்திரைச் சந்தியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. காரொன்று சடுதியாக திரும்ப முற்பட்ட போது, வீதியால் வந்த இந்தப் பெண்ணின் மீது மோதியதாக, பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

விபத்தில் இந்தப் பெண் படுகாயமடைந்து இரத்தம் வழிந்தோடிய நிலையில் அந்த வீதியால் சென்றவர்களும் அப்பகுதியில் உள்ளவர்களுமாக இணைந்து இவரை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

# அதிபர் சேவை ஆட்சேர்ப்புக்கான நேர்முகப்பரீட்சைக்கு 6316 பேர் தெரிவு

**அம்பாறை மாவட்ட குறூப் நிருபர்**

அதிபர் சேவை தரம் III ற்கு இரண்டாம் கட்டமாக ஆட்சேர்ப்பு செய்வதற்காக நேர்முக பரீட்சைக்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் பட்டியல் கல்வி அமைச்சினால் நேற்று (08) உத்தியோகபூர்வமாக கல்வி அமைச்சின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

உச்ச நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்ட அடிப்படை உரிமை மீறல் வழக்குகளினை (SC93/2021(F/R), (SC40/2022(F/R), (SC26/2022(F/R), (SC476/2019(F/R) முடிவுக்கு கொண்டு வரும் வகையில் 2022 மார்கழி மாதம் 12ம் திகதிய நீதிமன்ற தீர்ப்புக்கு அமையவும், இலங்கை அதிபர் சேவை பிரமாணக் குறிப்பின் பிரகாரமும் 2019 மாசி மாதம் 10ஆம் திகதி நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட போட்டி பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் பொது மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு இம்மாதம் 22 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் முதலாம் திகதி வரையில் நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

2021 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆம் திகதியினை அடிப்படையாகக் கொண்டு காணப்படுகின்ற 4718 அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்காகவே இந் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்போது வெளியிடப்பட்டுள்ள நேர்முகப் பரீட்சைக்கான பெயர் பட்டியலில் சிங்கள மொழி மூலமான பரீட்சார்த்திகள் 3784 பேரும் தமிழ் மொழிமூலமான பரீட்சார்த்திகள் 2532 பேரும் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டிப்பது அதிபர் சேவை பிரமாண குறிப்பின் அடிப்படையில் அமையப் பெற்றுள்ளது.

இதன்படி சிங்கள மொழிமூல மற்றும் தமிழ் மொழி மூலம் விண்ணப்பதாரிகள் மொத்தமாக 6316 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

குறித்த நேர்முகப் பரீட்சை கல்வி அமைச்சின் 04 ம் மாடியில் அமைந்துள்ள கேட்போர் கூடத்தில் நடைபெற உள்ளது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிற்றுக்கிழமை 2023.05.07
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

| சீட்டு | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து / இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5107 | ரூ. 17,162,008.00 | D | 2 8 0 4 2 6 |
| கொவிசெத | 3349 | ரூ. 101,298,311.84 | N | 07 64 68 71 |
| ராசி சுப பலன் (Handahana) | 416 | ரூ. 2,611,961.00 | வெற்றி இலக்கினம்: சிம்மம்; விசேட இலக்கினம்: சிம்மம் | 07 23 38 46 |
| தன நிதானய | 1137 | ரூ. 88,967,594.80 | I | 17 27 31 51 |
| மெகா பவர் | 1455 | அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 319,349,254.00; அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00; அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 | T; சுப்பர் இலக்கம் 01 | 02 45 67 79 |
| ஜாதிக சம்பத | 1562 | ரூ. 10,697,138.00 | வெற்றி இலக்கினம்: மேஷம் | 1 6 5 0 0 7 |

# அதிகார பகிர்வு குறித்து பேசும் நேரம் இதுவல்ல

## SJB அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க



அதிகாரப்பகிர்வு, காணாமலாக்கப்பட்டோர் உள்ளிட்ட பல்வேறு தீர்க்கப்படாத பிரச்சினைகள் வடக்கில் காணப்படுகின்றன என்பதை ஏற்றுக் கொள்கின்றோம்.

எனவே, இவை தொடர்பான கலந்துரையாடலுக்கு தமிழ் கட்சிகளுக்கு ஜனாதிபதியால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. ஆனால் நாட்டின் தற்போதைய நிலைமையில் பொருளாதார பிரச்சினைகளுக்கே முன்னுரிமையளிக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

வடக்கு அபிவிருத்தி , அதிகாரப்பகிர்வு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பான கலந்துரையாடலுக்கு தமிழ் கட்சிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அழைப்பு விடுத்துள்ளமை தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாட்டை வினவிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். ஜனாதிபதியினால் விடுக்கப்பட்டுள்ள இந்த அழைப்பினை நாம் எதிர்க்கவில்லை. ஆனால் நாட்டில் தற்போதைய பிரதான பிரச்சினை என்ன என்பதை ஜனாதிபதி உணர வேண்டும். எனவே அதிகாரப்பகிர்வு குறித்து பேசுவதற்கு பதிலாக , பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கே முன்னுரிமையளிக்கப்பட வேண்டும்.

இவ்வாறான முக்கியத்துவமுடைய அத்தியாவசிய காரணிகளை புறந்தள்ளி அதிகாரப்பகிர்வு குறித்து பேசுவதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமையானது , ஜனாதிபதி பிரிதொரு இலக்கை நோக்கி பயணிக்க முயற்சிப்பதாக தோன்றுகிறது. பொருளாதார நெருக்கடிகளால் மக்கள் பாரிய அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

எனவே இந்த நிலைமையிலிருந்து நாட்டை மீட்பதற்கு ஜனாதிபதி முன்னுரிமையளிப்பாரானால் அதுவே சிறந்த தீர்மானமாகும் என்பதே எமது நிலைப்பாடாகும். அதே போன்று தமிழ் கட்சிகளும் இதன் அடிப்படையிலேயே சிந்திக்க வேண்டும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் , யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினை, அதிகாரப்பகிர்வு உள்ளிட்ட தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் உள்ளன என்பதை ஏற்றுக் கொள்கின்றோம். எனவே இவை தொடர்பில் பேசுவதை பிழையென நாம் கருதவில்லை.

எவ்வாறிருப்பினும் பொருளாதார ரீதியில் நாட்டை கட்டியெழுப்புவதற்கு முன்னுரிமையளிக்கப்பட வேண்டும் என்பதையே நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றோம் என்றார்.

# மதவாச்சியில் போதைவஸ்து சகிதம் இருவர் கைது!

தலைமன்னார் விசேட நிருபர்

மன்னார், மதவாச்சி பிரதான வீதியில் விகும்புர பிரதேசத்தில் 12 மில்லியன் ரூபா பெறுமதியான ஐஸ் போதைப் பொருளுடன்சந்தேகநபர்கள்இருவரை இராணுவத்தினர் கைது செய்துள்ளதுடன், கடத்தலுக்குப் பயன்படுத்திய காரொன்றையும் கடந்த சனிக்கிழமை (06) கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பாக மன்னார் தள்ளாடி இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, மன்னாரிலிருந்து பயணித்த காரை பின்தொடர்ந்த இராணுவப் புலனாய்வுப் பிரிவினர், விகும்புர பிரதேசத்தில் அக்காரை வழிமறித்து சோதனை செய்த போது, அதில் சூட்சுமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த ஐஸ் போதைப்பொருளை கைப்பற்றியுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர். மன்னார், அடம்பனைச் சேர்ந்த 27 வயதுடையவரும் கல்பிட்டியைச் சேர்ந்த 38 வயதுடையவருமே கைது செய்யப்பட்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

# கிளிநொச்சியில் 7, 313 குடும்பங்கள் உணவு நெருக்கடியால் பாதிப்பு

பரந்தன் குறூப் நிருபர்

கிளிநொச்சி மாவட்டத்தில் 7 ஆயிரத்து 313 குடும்பங்கள் உணவு நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாக, அம்மாவட்டச் செயலகம் தெரிவித்தது.

கிளிநொச்சியில் பெரும்பாலான குடும்பங்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வரும் நிலையில், மேற்படி குடும்பங்கள் உணவு நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாகவும், அச்செயலகம் தெரிவித்தது. கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 4 ஆயிரத்து 50 குடும்பங்களும் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரத்து 546 குடும்பங்களும் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் 390 குடும்பங்களும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரத்து 327 குடும்பங்களும் உணவு நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளன. இதேவேளை, கரைச்சியில் 5 வயதுக்குட்பட்ட 54 சிறுவர்களும் 5 வயது முதல் 16 வயதுக்குட்பட்ட 1,234 சிறுவர்களும் கண்டாவளையில் 5 வயதுக்குட்பட்ட 180 சிறுவர்களும் 5 வயது முதல் 16 வயதுக்குட்பட்ட 704 சிறுவர்களும் பூநகரியில் 5 வயதுக்குட்பட்ட 261 சிறுவர்களும் 5 வயது முதல் 16 வயதுக்குட்பட்ட 507 சிறுவர்களும் பச்சிலைப்பள்ளியில் 5 வயதுக்குட்பட்ட 73 சிறுவர்களும் 5 வயது முதல் 16 வயதுக்குட்பட்ட 320 சிறுவர்களும் போசாக்கு குறைபாட்டை எதிர்நோக்கியுள்ளனர்.

## பானகமுவ அந்நூர் தேசிய... 03ஆம் பக்கத் தொடர்

குழு உறுப்பினர்கள், பாடசாலை பழைய மாணவர்கள், பெற்றோர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர். இக் கட்டிடத்தில் ஒரு கேட்போர் கூடமும் வகுப்பறைகளும் அமையப் பெறவுள்ளமை விசேட அம்சமாகும்.

## குற்றவாளிக்கு பத்து... 03ஆம் பக்கத் தொடர்

போது மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தொட்டவத்தவினால் மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி கொழும்பு மாளிகாவத்தை பிரதேசத்தில் சிறுமியொருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளமை தொடர்பில் சட்டமா அதிபரினால் பிரதிவாதிக்கு எதிராக மூன்று குற்றங்களின் கீழ் வழக்குத் தாக்கல்செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அரசியலமைப்பு....

நியமிப்பது தொடர்பில் இன்றைய தினம் அதிக கவனம் செலுத்தப்படும் என்றும் தேர்தல் ஆணைக்குழு உள்ளிட்ட ஏனைய நான்கு ஆணைக்குழுக்களுக்கும் உறுப்பினர்களை நியமிக்கும் நடவடிக்கைகளை ஓரிரு தினங்களுக்குள் நிறைவுசெய்வதற்கு எதிர்பார்த்துள்ளதாக பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள மஹிந்த யாப்பா அபேவர்தன, சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர்களை நியமிக்கும் நடவடிக்கைகள் தாமதமாவது முறையல்ல என்றும் வெகுவிரையில் பெயர்களை நியமிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். அரசியலமைப்பு பேரவையினால் இதுவரை ஐந்து சுயாதீனக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. அதேவேளை, உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பில் வேட்புமனு தாக்கல்செய்துள்ள நிலையில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு புதிய உறுப்பினர்களை நியமிப்பது சிறந்ததல்ல என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அரசியலமைப்பு பேரவைக்கூட்டத்தின்போது தொடர்ந்தும் தெரிவித்து வருகின்றார். எனினும் தேர்தல் ஒத்திப்போடப்பட்டுள்ள நிலையில் தேர்தல் ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்களை நியமிப்பதில் எந்த தடையும் கிடையாது என்றும் சபாநாயகர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கொழும்பில் மட்டும்....

வரையான காலப்பகுதியில் 31,098 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இந்நிலையில் இந்நிலைமை மோசமடைய முன்னர் பல்வேறு டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் கூறுகையில், இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு உடனடியாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நிபுணர் குழு அறிக்கையொன்றை வழங்குமாறு அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. மேலும் டெங்கு பரவுவதை கட்டுப்படுத்த தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு உள்ளிட்ட நிபுணர்களைக் கொண்ட குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

டெங்கு வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்தும் முயற்சிகளை ஒருங்கிணைக்க ஜனாதிபதி செயலணியொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

தொற்று நோய்களைத் தடுக்க தேவையான நடவடிக்கைகளை செயல்படுத்த சுகாதார அதிகாரிகளுடன் பணிக்குழு செயல்படும். டெங்கு பரவாமல் தடுக்க நுளம்பு பரவும் இடங்களை அகற்றுதல், பாதுகாப்பு ஆடை அணிதல் உள்ளிட்ட அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு பொதுமக்களை அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

## சிறுவர்களை இலக்கு...

குறித்த சம்பவம் தொடர்பாக நேற்று திங்கட்கிழமை (8) துரித விசாரணை முன்னெடுக்கப்பட்டதோடு பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள பாடசாலை மாணவர் ஒருவரை வாகனம் ஒன்றில் வந்தவர்கள் இனிப்பு பண்டங்களை வழங்கி குறித்த மாணவரை பலவந்தமாக ஏற்றிச் செல்ல முயற்சி செய்யப்பட்டதாக குறித்த மாணவர் தனது பெற்றோரிடம் தெரிவித்த நிலையில் குறித்த சம்பவம் தெரிய வந்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக குறித்த மாணவன் கல்வி கற்கும் பாடசாலைக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுக்கும் வகையில் நேற்று (8) காலை குறித்த பாடசாலைக்குச் சென்று மாணவனிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது மேலும் ஒரு மாணவன் நேற்று (8) காலை பாடசாலைக்குச் செல்லும் போது இனிப்பு பண்டங்களை வழங்கி வாகனத்தில் ஏற்ற முற்பட்டதாக தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இவ்விடயம் குறித்து மன்னார் மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதோடு, பாடசாலை பகுதிகளில் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அரச அதிபர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மாணவர்கள் கவனம் தொடர்பாக பாடசாலை அதிபர்கள்,ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் விழிப்புடன் செயல்பட வேண்டும்.

குறித்த சம்பவங்கள் குறித்து மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் தன்னுடன் தொடர்பை ஏற்படுத்தி துரித நடவடிக்கைகள் முன்னெடுப்பதாக தெரிவித்துள்ளனர்.

எனவே சந்தேகத்திற்கிடமான வாகனங்களின் நடமாட்டம் தெரிந்தால் உடனடியாக பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டு வருமாறும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

## மக்கள் ஆணையுடன்....

குறிப்பிடப்படும் விடயம் தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பிரதமர் பதவியில் மாற்றம் ஏற்படுத்த வேண்டிய தேவை தற்போது கிடையாது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர் தினேஷ் குணவர்தனவை பிரதமராக நியமிக்க கட்சி என்ற ரீதியில் முழுமையான ஒத்துழைப்பு வழங்கினோம்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அதற்கு இணக்கம் தெரிவித்தார். பெரும்பான்மை பலத்தை வைத்துக் கொண்டு கட்சி என்ற ரீதியில் நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் செயறபட்டுள்ளோம். ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரை நாங்களே தெரிவு செய்தோம். ஆகவே பிரதமர் பதவியில் மாற்றம் ஏற்படுத்த வேண்டிய தேவை ஏதும் கிடையாது. தேர்தல் ஒன்று இடம்பெற்றாமல் எமது பலத்தை மீண்டும் உறுதிப்படுத்துவோம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டுள்ளமை அவரது தனிப்பட்ட கருத்தாகும். அதற்கும் கட்சிக்கும் தொடர்பில்லை. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பொதுஜன பெரமுனவின் கொள்கைகளை முழுமையாக ஏற்றுக்கொண்டால் ஜனாதிபதி தேர்தலில் அவருக்கு ஆதரவு வழங்கலாம்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கொள்கைளை முழுமையாக ஏற்றுக் கொண்டு அதனை செயற்படுத்துபவரை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிப்போம்.

எக்காரணிகளுக்காகவும் கட்சி கொள்கைகளை விட்டுக் கொடுக்க மாட்டோம். எதிர்வரும் காலங்களில் இடம்பெறும் சகல தேர்தல்களிலும் எமது கட்சியை முன்னிலைப்படுத்தி செயற்படுவோம் எனவும் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

## வடக்கு, கிழக்கு பகுதிகளில்...

நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் இதனைத் தெரிவித்தனர்.

'வடக்கு, கிழக்கு எங்கும் பயணித்து முள்ளிவாய்க்கால் கஞ்சியை எமது உறவுகளுடன் பரிமாறி, எமது இனத்தின் வரலாற்றையும் வலிகளையும் எமது இளைய தலைமுறையினருக்கு கடத்தும் செயற்பாட்டினை முன்னெடுக்கவுள்ளோம்' என்று அவர்கள் தெரிவித்தனர். 'நாம் முன்னெடுக்கும் இச்செயற்பாட்டில் அனைத்து தமிழ் மக்களும் எல்லா வேறுபாடுகளையும் மறந்து எம்முடன் இணையுமாறு கேட்டுக் கொள்கின்றோம். உங்களின் மாவட்டத்திற்கு வரும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு கஞ்சிக்குரிய அரிசி மற்றும் இதர பொருட்களை வழங்கி பங்கெடுக்குமாறும் கேட்டுக் கொள்கிறோம்' எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

## இறுதிப்பட்டியலை...

கலந்துரையாடலில் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்ட விடையதானங்கள் தொடர்பில் மாவட்ட மேலதிக அரச அதிபர் முரளிதரன் வீட்டுத் திட்டம் தொடர்பில் விளக்கம் அளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலதிக அரச அதிபர் முரளிதரன் தெரிவிக்கையில், யாழ் மாவட்டத்தில் 10 இலட்சம் ரூபாய் வீடு திட்டங்கள் 379, ஆறு இலட்சம் ரூபாய் வீட்டு திட்டம் 221 ம் வழங்கப்படவுள்ளது. யாழ் மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலர் பிரிவிலும் முன்னுரிமைப்படுத்தப்பட்ட அதாவது நலம்புரி நிலையங்களில் இருந்தோர் விசேட தேவையுடையவர்கள், சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பெண் தலைமைத்துவங்களைக் கொண்ட குடும்பங்கள் ஆகியவை முன்னுரிமைப் படுத்தப்படுகிறது.

எனினும் இறுதிப் பட்டியல் தயாரிக்கப்படாத நிலையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்திருந்தார். இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் தேவானந்தா, இறுதிப் பட்டியல் தயாரிக்கப்பட்டதும் அதனை உரிய இடங்களில் காட்சிப்படுத்துமாறு வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அதிபர் சேவை....

எதிர்வரும் 22ம் திகதி முதல் நேர்முகப் பரீட்சை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த அதிபர்களுக்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 22ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு ஜூன் மாதம் 01ம் திகதிவரை கல்வியமைச்சில் இடம்பெறுமென்றும் அமைச்சு தெரிவித்துள்ளது. அதிபர் சேவையின் 03ஆம் தரத்திற்கு ஆட்சேர்க்கும் வகையிலான போட்டிப் பரீட்சை கடந்த 2019 பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி நடத்தப்பட்டுள்ளது. அந்தவகையில் மேற்படி நேர்முகப்பரீட்சை தொடர்பில் மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு www.moe.qov.lk என்ற இணையத்தளத்தை பார்வையிடுமாறும் கல்வியமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது.

## தேசிய படைவீரர்...

சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவின் தலைமையில் இடம்பெற்றது.

எதிர்வரும் மே 19 ஆம் திகதி பத்தரமுல்லை படைவீரர் நினைவுத்தூபிக்கு முன்பாக தேசிய படைவீரர் நிகழ்வு நடைபெறவுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகள், பிரதமர்கள்,சபாநாயகர், இராஜாங்க அமைச்சர்கள், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உட்பட முப்படைகளின் தளபதிகள், பொலிஸ் மா அதிபர் உட்பட பாதுகாப்பு பிரதானிகள், போரில் காயமடைந்த படைவீரர்களின் பங்களிப்புடன் நடைபெறும் இந்த படைவீரர் நினைவு தின நிகழ்வில் பங்குபற்றுவதற்காக யுத்ததில் காயமடைந்த படைவீரர்கள், வீரமரணம் அடைந்த படை வீரர்களின் உறவினர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் ஆகியோருக்கும் அழைப்பு விடுக்கப்படவுள்ளது. இந்த ஆண்டும் பெருமைக்குரிய வகையில் படைவீரர் நினைவு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், நாட்டின் ஆள்புல ஒருமைப்பாட்டையும் இறைமையையும் பாதுகாப்பதற்கு உயிர்த்தியாகம் செய்த இராணுவம், விமானம்படை, கடற்படை, பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புப்படை வீரர்களின் நித்திய நினைவுகளையும், வீரத்தையும் போற்றும் வகையில் விசேட படைமேள தாளமும், மலர் அஞ்சலியும் இடம்பெறவுள்ளதாக பாதுகாப்பு செயலாளர் ஜெனரல்( ஓய்வுபெற்ற) கமல்குணரத்ன தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன், முப்படைகளின் தளபதிகள் மற்றும் பொலிஸ் மா அதிபர் உட்பட பாதுகாப்பு பிரிவு பிரதானிகள் கலந்து கொண்டனர்.

## இடைநிறுத்தப்பட்டுள்ள....

ஆரம்பிப்பதற்காக திறைசேரியிலிருந்து தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு 751 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

மேற்படி வீடமைப்புத் திட்டம் நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தால் கடந்த சில மாதங்களுக்கு முன் இடைநிறுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் வீடமைப்பு நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அரசாங்கத்திடம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க திறைசேரி அதற்கான நிதியை அதிகார சபைக்கு பெற்றுக் கொடுத்துள்ளது.

அந்த நிதி மூலம் 2265 வீடுகளை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளை விரைவாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்று வீடமைப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது. அதற்கிணங்க 2021ஆம் ஆண்டு 12231 வீடுகளை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் அவற்றில் 6039 வீடுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் 2022ஆம் ஆண்டு 1465 வீடுகளுக்கான நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் அவற்றில் 25 வீடுகளே நிறைவு செய்யப்பட்டுள்ளன என்றும் அந்த அதிகார சபை தெரிவித்துள்ளது. மேற்படி வீடமைப்பு திட்டத்தின் கீழ் நாட்டிலுள்ள 14022 கிராம சேவை அலுவலர் பிரிவுகளிலும் ஒரு பிரிவுக்கு ஒரு வீடு என்ற வகையில் 14022 வீடுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் அதிகார சபை தெரிவித்துள்ளது.

## CTB எக்காரணம்...

இரத்தின புரி, எம்பிலிப்பிட்டிய, கொடகவெ ல, பலாங்கொட மற்றும் கலவான ஆகிய டிப்போக்களுக்கு சுமார் 23 பஸ்கள் இதன்போது அமைச்சரினால் வழங்கி வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் அமைச்சர்கள் மற்றும் பா ராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்காரவும் கலந்துகொண்டனர்.

## லண்டனில் இலங்கை...

சரித் பெர்னாண்டோ ஆகிய சாரணர்கள் கலந்துகொண்டனர்.

அவர்களுடன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, உலகளாவிய காலநிலை மாற்றம் உள்ளிட்ட தேசிய மற்றும் சர்வதேச நலன்களில் தீவிரமாக ஈடுபடுமாறு சாரணர்களை ஊக்குவித்தார்.

நாட்டின் எதிர்கால தலைமைத்துவத்தை பொறுப்பேற்க இளைஞர்கள் எவ்வாறு தயாராக இருக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி இங்கு மேலும் சுட்டிக்காட்டினார். இலங்கை சாரணர் இயக்கத்தின் பிரதம ஆணையாளர் சட்டத்தரணி ஜனபிரித் பெர்னாண்டோவின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## 05 வருடங்களாக வருமான...

தீர்மானித்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் தற்போது 83 இலட்சம் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. எனினும், 60 இலட்சம் வாகனங்கள் மட்டுமே QR குறியீட்டு முறைமை மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளன. எனவே, 5 வருடங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக வருமானவரி அனுமதிப்பத்திரம் பெறாத வாகனங்கள், மாவட்ட மோட்டார் வாகன பரிசோதகரின் உதவியுடன் தகவல் அமைப்பில் இருந்து நீக்கப்படும் என மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

## உல்லாச படகு....

காலையும் தொடர்ந்தன. இரண்டு அடுக்குகளைக் கொண்ட இந்த சுற்றுலா படகில் சுமார் 50 பேர் பயணம் செய்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். அதிக எண்ணிக்கையானோர் பயணம் செய்தமையே இச்சம்பவத்துக்கு காரணம் என பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## 15 கோடி ரூபா...

43 வயதுடைய வர்த்தகரான இவர், கொழும்பு மருதானை பிரதேசத்தில் வசித்து வருவதுடன் அடிக்கடி வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்பவர் எனவும் தெரிய வந்துள்ளது.

சந்தேக நபர் நேற்று திங்கட்கிழமை (08) காலை 09.20 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

விமான நிலையத்தில் அனைத்து விசாரணைகளையும் முடித்துவிட்டு அங்கிருந்து விமான நிலையத்துக்கு வெளியே செல்லும்போதே இவர் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபர் தனது இடுப்பு பகுதியில் 8 பொட்டலங்களாக மறைத்து வைத்திருந்த 4 கிலோ 400 கிராம் எடையுடைய 42 தங்க பிஸ்கட், அரை தங்க பிஸ்கட் மற்றும் 2 கிலோ 600 கிராம் எடை கொண்ட நகைகளை மறைத்து வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. சந்தேக நபர் மேலதிக விசாரணைக்காக விமான நிலைய சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.


Capital TRUST Research (Pvt) Ltd
A Capital TRUST Group Company
42, Sir Mohammed Macan Markar Mawatha, Colombo 3.
Hotline: 0705 666 777
WhatsApp: 0777 233 633

## Stock Market opens the week on a positive note...

Daily Market Watch
08th May 2023

### Market Commentary

The Stock Market opened the week on a positive note with the All Share Price Index rising by 1.09% to close the trading session at 8,926.58. This was mainly due to gains in banking stocks such as Sampath Bank, Commercial Bank and HNB which rose by 7.2%, 3.7% and 4.0% respectively. Turnover continued to remain low at LKR 885.2 mn with trading in HNB and Expolanka Holdings accounting for 19% and 10% of the total. With clarity on the debt restructuring expected soon, stock market activity is likely to gather momentum. At present, the stock market is trading at historically low valuations and provides attractive investment opportunities in selected stocks.


### Top Gainers and Loosers




### Market Performance

| | 08.05.2023 | 04.05.2023 | %Chg. |
|---|---|---|---|
| All Share Price Index | 8,926.6 | 8,830.4 | 1.09 |
| S&P SL 20 Index | 2,593.4 | 2,558.7 | 1.36 |
| Turnover (LKR mn) | 885.2 | 252.4 | 250.7 |
| Foreign Purchases (LKR mn) | 20.7 | 32.7 | -36.6 |
| Foreign Sales (LKR mn) | 22.5 | 6.9 | 224.5 |
| Market Cap (LKR bn) | 3,781.8 | 3,759.4 | 0.6 |
| Market Cap (US$ bn) | 11.8 | 11.8 | 0.6 |
| Traded Companies | 245 | 204 | 20.1 |
| Market PER (x) | 4.9 | 4.8 | 0.6 |
| Price to Book (x) | 0.9 | 0.9 | 1.1 |
| Dividend Yield (%) | 4.2 | 4.2 | -0.7 |


### Relative Strength Index (RSI)




### Contributors to ASPI




### Turnover Breakdown




### Key Rates

| | 08.05.2023 |
|---|---|
| Prime Lending Rate (Avg. Weighted) | 20.84% |
| Fixed Deposit Rate (Avg. Weighted) | 19.80% |
| Treasury Bill Rate (364 Days) | 23.14% |
| Consumer Price Inflation - CCPI (YoY % change) | 35.50% |

### Market Benchmarks




### Largest Trades




### Corporate News

CASH DIVIDENDS

Union Chemicals Lanka PLC (UCAR) - LKR 17.00. XD date - 13.06.2023.

Malwatte Valley Plantation PLC (MAL) - LKR 0.16. XD date - 26.06.2023.

ON'ALLY Holdings PLC (ONAL) - LKR 2.30. XD date - 09.05.2023.

PGP Glass Ceylon PLC (GLAS) - LKR 1.66. XD date - 20.07.2023.

Sri Lanka Telecom PLC (SLTL) - LKR 0.25. XD date - 12.05.2023.

Ceylinco Insurance PLC (CINS) - LKR 45.00. XD date - 29.05.2023.

Company PLC (CTC) - LKR 20.30. XD date - 29.05.2023.

Nestle Lanka PLC (NEST) - LKR 75 .00. XD date - 06.06.2023.

SCRIP DIVIDENDS

National Development Bank PLC (NDB) - 1 share for 17.9160004596 Shares.

*Disclaimer - The information contained in this material has not been independently verified. No representation or warranty express or implied is made as to, and no reliance should be placed on, the fairness, accuracy, completeness or correctness of the information or opinions contained herein and nothing in this presentation is, or shall be relied upon as, a promise or representation by the Company.*

# கடவுள் மீதான நம்பிக்கையும் அதன் ஊடான ஆசீர்வாதமும்

கடவுளின் வார்த்தையை சீனாவிற்கு முதன்முதலில் கொண்டு சென்றவர் ஹட்சன் டெய்லர். இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவரான இவர் சீனாவிற்கு நற்செய்தி அறிவிக்கச் செல்வதற்கு முன்பதாக ஒரு மருத்துவரிடம் உதவியாளராகப் பணியாற்றி வந்தார்.

கப்பலில் இவர் சீனாவிற்குச் செல்வதற்கான நாள் நெருங்கிக்கொண்டே வந்தது. இவரது கையில் சொற்ப அளவில்தான் பணம் இருந்தது. அந்தப் பணத்தையும் ஒருநாள் இவர் தன் வேலையை முடித்துக் கொண்டு வீட்டிற்குத் திரும்பி வரும்போது ஒரு குடும்பம் பணமின்றி மிகவும் துன்பப்படுவதைப் பார்த்துவிட்டு, அந்தக் குடும்பத்திடமே கொடுத்துவிட்டார்.



'கையில் இருந்த பணமும் போய்விட்டதே! இப்போது சீனாவிற்கு எப்படிச் செல்வது?' என்று இவர் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கவில்லை; மாறாக கடவுள் தனக்கு வேண்டிய பணத்தை நிச்சயம் தரும் என்ற நம்பிக்கையோடு இருந்தார்.

இவர் சீனாவிற்குச் செல்வதற்கு முந்தைய நாள், யாரிடம் இவர் உதவியாளராகப் பணிபுரிந்து வந்தாரோ, அந்த மருத்துவர் இவரை அழைத்து, "இதுவரைக்கும் நான் உனக்குச் சரியாகவே ஊதியம் கொடுத்ததில்லை. காரணம் என்னிடம் சிகிச்சைக்காக அவ்வளவாக யாரும் வருவதில்லை. இது உனக்கு நன்றாகத் தெரியும். சிறிது நேரத்திற்கு முன்பாக என்னிடம் சிகிச்சை பெற்றுவந்த செல்வந்தர் ஒருவர் ஒரு பெரிய தொகையைக் கட்டணமாக என்னிடம் கொடுத்துவிட்டுப் போயிருக்கின்றார். அந்தப் பணத்தை ஊதியமாக நீயே வைத்துக்கொள்" என்று சொல்லி பணத்தை அவரிடம் கொடுத்தார்.

அதைப் பெற்றுக்கொண்டதும் இவர், 'கடவுளை நான் நம்பியிருந்தேன்; அவர் என்னைக் கைவிடவில்லை' என்று அவருக்கு நன்றி கூறினார்.

மிகப்பெரிய நற்செய்திப் பணியாளரான ஹட்சன் டெய்லரைப் போன்று, நாம் கடவுளை நம்பியிருக்கும்போது அவர் நம்மைக் கைவிடுவதில்லை. அதனால் நாம் எதற்கும் பதற்றமடையத் தேவையே இல்லை. பாஸ்கா காலத்தின் ஐந்தாம் ஞாயிறான கடந்த ஞாயிறு நாம் வாசித்த இறைவார்த்தை, "நம்பிக்கை கொண்டோர் பதற்றமடையார். முதல் திருமுகத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ள இன்றைய இரண்டாம் வாசகம் இயேசுவின்மீது நம்பிக்கை வைத்து வாழ்வதன் முக்கியத்துவத்தைப் பற்றிப் பேசுகின்றது. இறைவாக்கினர் எசாயா நூலில் இடம்பெறும், "இதோ சீயோனில் நான் ஒரு மூலைக்கல் நாட்டுகின்றேன். அது தேர்ந்தெடுக்கப்பட்ட, விலையுயர்ந்த மூலைக்கல். அதில் நம்பிக்கை கொண்டோர் பதற்றமடையார்" (எசா 28: 16) என்ற இறைவார்த்தையை மேற்கோள் காட்டிப் பேசும் பேதுரு, "நம்பிக்கை கொண்ட உங்களுக்கு அது இயேசு உயிர் மதிப்புள்ளதாக விளங்கும்" என்கிறார்.




நற்செய்தியில் இயேசு சொல்வதுபோல பாறையின்மீது கட்டப்பட்ட வீடு உறுதியாய் இருக்கும். அதற்கேற்ப எவர் ஒருவர் இயேசுவின்மீது நம்பிக்கை வைத்து வாழ்கின்றாரோ அவர் எதற்கும் கலங்கிடத் தேவையில்லை.

பொதுவாழ்விலும் தனிப்பட்ட வாழ்விலும் பல பிரச்சினைகளும் இடர்களும் நமக்கு வரலாம். அப்போது நாம் அவற்றை எப்படி எதிர்கொள்வது எனக் கலங்கித் தவிக்கவேண்டிய தேவையில்லை. மாறாக நாம் ஆண்டவர் இயேசுவின்மீது நம்பிக்கை வைத்து வாழ்ந்தால் எதற்கும் பதற்றமடையத் தேவையில்லை.

கடவுளின் மேன்மைமிக்க செயல்களை அறிவிப்போம்

ஆண்டவர் இயேசு கலங்கித் தவிக்கும் நமக்கு நம்பிக்கை அளிக்கின்றார் என்றால் நாம் சந்திக்கும் பிரச்சினைகளை விவேகத்தோடு எதிர்கொள்வதற்கான ஆற்றலை அவர் அளிக்கின்றார் எனில், அவர் நம்மீது இரக்கம் காட்டுகின்றார் எனில், அதற்குக் கைம்மாறாக நாம் அவரது மேன்மை மிக்க செயல்களை அறிவிக்க வேண்டும். அது நமது கடமையும் நம்மீது சுமத்தப்பட்ட பொறுப்பும்


இரண்டாம் வாசகத்தின் இறுதியில் பேதுரு, "உங்களை இருளினின்று தமது வியத்தகு ஒளிக்கு அழைத்துள்ளவரின் மேன்மைமிக்க செயல்களை அறிவிப்பது உங்கள் பணி" என்கின்றார். பேதுருவும் சரி, ஏனைய திருத்தூதர்களும் சரி, இயேசு கைது செய்யப்பட்டுச் சிறையில் அறையப்பட்டுக் கொல்லப்பட்டபோது அவரை விட்டு ஓடிப் போனார்கள்; ஆனாலும் இயேசு அவர்களை மன்னித்து, அவர்களுக்கு நம்பிக்கையூட்டினார்.

இதனால் அவர்கள் இயேசுவைப் பற்றி எல்லாருக்கும் துணிவுடன் எடுத்துரைத்தார்கள். இயேசுவின் சீடர்களைப் போன்று நாமும் அவரிடமிருந்து ஏராளமான நன்மைகளை அடைந்திருக்கலாம். அதற்குக் கைம்மாறாக நாம் அவரது மேன்மை மிக்க செயல்களை சகலருக்கும் அறிவிக்கவேண்டும். அதுவே நாம் இயேசுவுக்குச் செய்யும் மிகப்பெரிய கைம்மாறாக இருக்கும்.

**அருட்பணி மரிய அந்தோனிராஜ்**

## வாரம் ஒரு புனிதர்

## அப்போஸ்தலரான புனித அருளப்பர்



புனித அருளப்பர்நமதாண்டவர் இயேசுவின் 12 அப்போஸ்தலர்களில் ஒருவரும் வயதில் குறைந்தவருமாவார்.

அப்போஸ்தலர்கள் வேதசாட்சிகளாய் மரித்தபின் 95 வருடத்தில் இவர் மாத்திரம் ஆசியா தேசத்திலுள்ள கிறிஸ்தவர்களைக் கவனித்துவந்தார்.அக்காலத்தில் இவர் எபேஸ் பட்டணத்தில் வேதத்தின் பேரில் பிடிபட்டு உரோமைக்கு அனுப்பப்பட்டார்.

வயோதிகரான இவரைத் தொமிசியான் இராயன் பார்த்தபோது சற்றும் மனமிரங்காமல் வேதத்திற்காக அவரைக் கொதிக்கும் எண்ணெய்க் கொப்பரையில் போட்டுகொல்லும்படிக் கட்டளையிட்டான்.

அருளப்பர் இக்கொடிய தீர்ப்பைக் கேட்டு சற்றும் அஞ்சாமல், தான் சிறுவயதிலிருந்து அன்புடன் நேசித்து வந்த தன் தேவ குருவைப் பார்க்கப் போவதால் சந்தோஷமாய் கொலைக் களத்திற்குச் சென்றார்.

கொதிக்கும் எண்ணெய்க் கொப்பரையில் அவர் போடப்பட்டபோது, அற்ப சேதமும் வேதனையுமின்றி குளிர்ந்த நீரில் இருப்பதுபோல் காணப்பட்டதைப் பார்த்த இராயன் அதிசயித்தானே தவிர, அவனுடைய கல்நெஞ்சம் இளகவில்லை .

ஆயினும் அவன் வேதசாட்சியைக் கொல்லாமல் பாத்மாஸ் என்னும் தீவுக்கு அனுப்பி வைத்தான்.

அவர் அந்தப் பரதேசத்தில் பல துன்பங்களை அனுபவித்துகாட்சியாகமம் என்னும் புத்தகத்தை எழுதினார்.

கொடுங்கோலன் மாண்டபின் அருளப்பர் எபேஸ் பட்டணத்திற்கு திரும்பிப் போய் அவ்விடத்தில் தமது ஞான வேலையைத் தொடர்ந்து நடத்தினார்.

**-எல்.ஜேம்ஸ்**

# விடியற்காலத்தின் நட்சத்திரம்

## இயேசு என்ற ஆதவனின் வருகையை முன்னறிவிக்கும் விடிவெள்ளியாக உலக வரலாற்றில் அன்னை மரியாள்

'விடியற்காலத்தின் நட்சத்திரம்' அல்லது 'விடிவெள்ளி' என்பது அதிகாலையில் வானில் தோன்றும் 'வெள்ளி' கோளைக் குறிக்கின்றது. கிழக்குத் திசையில் காட்சியளிக்கும் இந்தக் கோள்சூரிய உதயத்தை முன்னறிவிப்பதாக உள்ளது.



பழங்காலத்தில் கடல் பயணம் மேற்கொண்டவர்கள் விடிவெள்ளியைக் கொண்டே திசையை அறிந்ததால்இது 'கடலின் விண்மீன்' என்றும் அழைக்கப்படுகிறது. இதுவே, மரியாள் என்றப் பெயரின் பொருளாகும். எனவே இயேசுவின் தாய் மரியாளை 'விடிவெள்ளி' என்று அழைப்பதுநேரடியாக அவரது பெயரையே குறித்து நிற்கிறது.

அதேநேரம்இது கடவுளால் வழங்கப்பட்ட காரணப் பெயராகவும் விளங்குகிறது. ஏனெனில் இயேசு என்ற ஆதவனின் வருகையை முன்னறிவிக்கும் விடிவெள்ளியாகவே உலக வரலாற்றில் மரியாள் தோன்றினார்.

சூரியனின் கதிர்களால் பிரகாசிக்கும் விடிவெள்ளியைப் போன்று, மரியாளும் இயேசுவின் ஒளியால் பிரகாசிக்கிறார். கதிரவனின் பண்பு நலன்களை விடிவெள்ளி பிரதிபலிப்பது போல, இயேசுவின் மாட்சியைப் பிரதிபலிப்பவராக மரியாள் திகழ்கிறார். "இதனால் தான் திருச்சபையின் உயரியசிறப்புப்பெற்ற, முற்றிலும் தனித்தன்மை வாய்ந்த உறுப்பாகவும்நம்பிக்கை மற்றும் அன்பின் முன்குறியாகவும் மரியாள் போற்றப்பெறுகின்றார்.

கத்தோலிக்கத் திருச்சபையும் பரிசுத்த ஆவியினால் கற்பிக்கப் பெற்று, பிள்ளைக்குரிய வாஞ்சையோடும் பற்றோடும் அன்பு நிறை தாயாக அவரை ஏற்கின்றது." (திருச்சபை எண். 53) "இவர் கிறிஸ்துவின் தாய், மக்களின் தாய், சிறப்பாக நம்பிக்கை கொண்டோரின் தாய்." (திருச்சபை எண். 54) எனவே, நமக்கு இறையாட்சியின் விடியலைக் காட்டும் விடிவெள்ளியாக மரியாள் விளங்குகிறார் என்பதில் சந்தேகமில்லை.

கீழ்த்திசை அடிவானத்தில் தோன்றும் விடிவெள்ளிகடல் பயணத்தை நம்பிக்கையுடன் தொடர வழி செய்கிறது. நீண்ட நெடிய கடல் பயணத்தில் நம்பிக்கைச் சுடராக விடிவெள்ளி திகழ்கிறது. அவ்வாறே, மரியாளும் மனிதகுலத்தின் நெடும்பயணத்தில் நம்பிக்கை தரும் விடிவெள்ளியாக ஒளி வீசுகிறார். முதிர்ந்த வயதில் கருவுற்ற எலிசபெத்துக்கும், கானா ஊர் திருமண வீட்டினருக்கும் தேவையறிந்து உதவி செய்ததன் மூலம் மரியாள் நம்பிக்கையின் நட்சத்திரமாகத் திகழ்ந்தார். நமது வாழ்வில் இருள் சூழும் நேரங்களிலும்நம்பிக்கை தரும் விடிவெள்ளியாக வழிகாட்டவும் உதவி செய்யவும் மரியாள் தயாராக இருக்கிறார். "இவ்வுலகில் ஆண்டவரது நாள் வரும்வரை, பயணம் செய்யும் இறைமக்கள் முன்பு உறுதியான நம்பிக்கையின் அடையாளமாக மரியாள் ஒளிர்கின்றார்."

**- எல்.எஸ்**

# இயேசு எனும் நல்லாயன்

பல்வேறு வேறுபாடுகளைக் கடந்து பலதரப்பட்ட மக்களையும் கவர்ந்த ஓவியம் இயேசு நல்லாயனாக சித்தரிக்கப்பட்டுள்ள ஓவியமாகும்.

இயேசுவைப் பல பெயர்களில் மக்கள் அழைத்தாலும் இயேசு தமக்குத் தாமே சூட்டிக் கொண்ட பெயர்களில் ஒன்று ஆயன். "நானே நல்ல ஆயன்" என யோவான் 10:11 இல் அவர் குறிப்பிடுகிறார்.

நமக்காக மரித்து உயிர்த்த இயேசுவின் உயிர்ப்பு விழா மகிழ்ச்சியைக் கொண்டாடும் இக்காலங்களில் நல்லாயனாம் இயேசுவைப் பற்றி தியானிப்பது சிறப்பானதாகும்.

ஆடுகளுக்கு நல்ல ஆயன் யார்? இயேசு எவ்வாறு நல்ல ஆயனாக செயற்படுகிறார் என்பது பற்றி சிந்திக்கும் முன், ஆடுகளைப் பற்றியும் அதன் குணநலன்களைப் பற்றியும் அறிவது அவசியம். ஆடுகள் ஒன்றை ஒன்று சார்ந்து கூட்டமாக வாழும். அவற்றால் சுயமாக செயல்பட முடியாது. வழி தவறி விடும். ஒன்றை ஒன்று எப்போதும் பின் தொடரும். அவை மிகவும் பலவீனமானவை என்பதால் எளிதில் பிற விலங்குகளுக்கு இறையாகி விடும்.



இந்த கூற்றுக்களை நோக்கும்போது இயேசுவும் இம் மக்கள் வலக்கைக்கும் இடக்கைக்கும் வேறுபாடு அறியாமல் செய்கிறார்கள் என்ற தந்தை கடவுளின் ஆதங்கத்தை அறிந்தவராய் சுயமாய் செயற்பட முடியாத ஆடுகளோடு மக்களையும் ஒப்புமைப்படுத்தி தம்மை நல்ல ஆயனாகவும் மக்களை ஆடுகளாகவும் உருவகப்படுத்துகின்றார்.

நல்ல ஆயன் எப்படிப்பட்டவர்? அவரது குணநலன்கள் என்ன? என்பதை திருப்பாடல் 23 மற்றும் யோவான் 10லும் காணலாம்.

நல்லஆயன் திருடனைப்போல் வேறுவழியாக வராமல் உரிமையுடையவராய் வாயில் வழியே ஆட்டுப்பட்டிக்குள் நுழைவார். நல்லஆயன் தம் ஆடுகளுக்கு பெயரிட்டு அழைக்கிறார். பழக்கமான ஆயனின் குரலை ஆடுகளும் அறியும். ஆடுகளைப் பசும்புல் உள்ள இடங்களைக் கண்டறிந்து அங்கு மேய்ச்சலுக்கு அழைத்து செல்வார். ஆடுகளின் முன்னே சென்று வழி நடத்துவார். அப்போதுதான் காட்டு விலங்குகள் வருவதை முன்னறிந்து, அவற்றிலிருந்து ஆடுகளை மீட்க முடியும்.

தேவையனில் ஆயன் தன் உயிரையும் கொடுப்பார். ஆனால் கூலியாள் சொந்த ஆயனைப் போல ஆடுகளைக் காப்பாற்றுவதில்லை. தனக்கு இடர் வரும் என அறிந்தால் ஆடுகளை விட்டுவிட்டு ஓடிவிடுவார். நல்ல ஆயன் தம் மந்தையில் ஒரு ஆடு காணமற் போனாலும் அதை கண்டுபிடித்து மீண்டும் மந்தையில் சேர்க்கும் வரை ஓயமாட்டார்.

இயேசுவும் நல்ல ஆயனாக திகழ்கிறார். நம் இதயமென்னும் வாசல் வழியே ஆடுகளாகிய நம்முள் நுழைந்து நம்மை ஆள்கிறார். நாள்தோறும் தம் வார்த்தை எனும் உணவைத் தருகிறார். தூய ஆவி எனும் நீரைத்துந்து இளைப்பாற்றுகிறார்.

சாவின் இருள் சூழ்ந்த பள்ளத்தாக்கு போல துன்பங்கள் வரும்போதும் உடன் இருந்து வழி நடத்துகிறார். ஆறுதல் தருகிறார். ஆடுகளாகிய நம்மை மீட்க தம்மையே சிலுவையில் பலியாக்கினார். அதை நாள்தோறும் திருப்பலியில் நிகழ்த்துகிறார்.

தாம் தேர்ந்தெடுத்த மக்களுக்காக மட்டும் அன்று எல்லா மக்களுக்காகவும் பலியாகிறார். இதனால் ஒரே மந்தையும் ஒரே ஆயனும் எனும் நிலையை ஏற்படுத்துகிறார். ஆடுகளாகிய நாமும் அவரது குரலுக்கு செவிசாய்த்து அவரின் வழி நடத்துதலை பின்பற்றும் போது வழி தவறாமல் நிலைவாழ்வை சென்றடைவோம்.

**திருமதி ஜெபா றொபர்ட்**

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 5ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷவ்வால் பிறை 22

### குறள் தரும் சிந்தனை



பேணாது பெண்விழைவான் ஆக்கம் பெரியதோர்
நாணாக நாணுத் தரும்

ஏற்றுக்கொண்ட கொள்கையினைப் பேணிக் காத்திடாமல், பெண்ணை நாடி அவள் பின்னால் திரிபவனுடைய நிலை வெட்கித்தலைகுனிய வேண்டியதாக ஆகிவிடும்.

# கொவிட் தொற்று அதிகரிப்பதால் இனிமேலும் அலட்சியம் கூடாது!

சீனாவின் வூஹான் நகரில் 2019 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் தோற்றம் பெற்ற கொவிட் 19 தொற்று குறுகிய காலப்பகுதிக்குள் முழுஉலகிலும் பரவியதோடு, இலட்சக்கணக்கானோரின் உயிரிழப்புகளுக்கும் பெரும் பாதிப்புக்களுக்கும் காரணமாக அமைந்தது. இத்தொற்றின் பாதிப்புகளும் தாக்கங்களும் மக்களைப் பெரும் அச்சத்திற்கும் பீதிக்கும் உள்ளாக்கி இருந்தன.

இந்நிலையில் இத்தொற்றின் சவாலை முறியடிக்கும் வகையில் மருத்துவ விஞ்ஞான உலகம் கடும் அர்ப்பணிப்பின் ஊடாக 2020 ஆம் ஆண்டின் இறுதிக்குள் அவசர தேவையின் நிமித்தம் பயன்படுத்தவென கொவிட் 19 தடுப்பூசியைப் பயன்பாட்டுக்குக் கொண்டு வந்தது. அதன் ஊடாக மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கையும் எதிர்பார்ப்புகளும் உருவாகின.

கொவிட் 19 தொற்றின் பரவுதலைக் கட்டுப்படுத்துவதற்கான அடிப்படை சுகாதார பழக்கவழக்கங்களும் கொவிட் 19 தடுப்பூசியும் இத்தொற்றின் தாக்கங்களைப் பலவீனப்படுத்துவதற்கு முக்கிய பங்களிப்பு நல்கியுள்ளன.

இந்த நிலையில் பெரும்பாலானவர்கள், 'தாம் தடுப்பூசி பெற்றுவிட்டோம்' என்றும் 'கொவிட் 19 தொற்றைத் தவிர்த்துக் கொள்வதற்கான அடிப்படை சுகாதார பழக்கவழக்கங்களைப் பின்பற்றத் தேவையில்லை' என்றும் கருதத் தொடங்கினர். அதன் விளைவாக இத்தொற்று தவிர்ப்புக்கான அடிப்படை சுகாதார பழக்கவழக்கங்களில் இருந்து மக்கள் தூரமாக ஆரம்பித்தனர். ஆனால் இது முற்றிலும் தவறான செயற்பாடாகும்.

ஏனென்றால் கொவிட் 19 தொற்று வைரஸ் உலகில் முழுமையான கட்டுப்பாட்டு நிலையை அடையவில்லை. அது பலவீன நிலையையே அடைந்திருக்கிறது. மீண்டும் தலைதூக்குவதற்கான வாய்ப்பையும் சந்தர்ப்பத்தையும் அது எதிர்பார்த்த வண்ணமே உள்ளது. இந்த நிலையில் இத்தொற்று தவிர்ப்புக்கான அடிப்படை சுகாதார பழக்கவழக்கங்களைப் பின்பற்றுவதில் ஏற்படுகின்ற பலவீனங்களைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பை இவ்வைரஸ் எதிர்பார்த்த வண்ணமே இருக்கிறது.

அந்த வகையில் இந்தியாவிலும், இப்பிராந்திய நாடுகள் சிலவற்றிலும் கடந்த சில வாரங்களாக கொவிட் 19 தொற்றுக்கு உள்ளானவர்களாகப் பதிவாகின்றவர்களின் எண்ணிக்கையில் மீண்டும் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கிறது. இலங்கையிலும் கூட கடந்த சில தினங்களாக இத்தொற்றுக்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்படுபவர்களும் அதிகரித்துள்ளனர். இதனை தொற்றுநோய் தடுப்பு பிரிவுத் தரவுகளும் உறுதிப்படுத்திக் கொண்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக கடந்த 07 ஆம் திகதி இத்தொற்றுக்கு உள்ளான மூவர் உயிரிழந்துமுள்ளனர். இது நாட்டின் பல மட்டங்களினதும் அவதானத்தை ஈரத்துள்ளது. இந்நிலையில் முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணுதல் உள்ளிட்ட அடிப்படை சுகாதார பழக்கவழக்கங்களை ஒழுங்குமுறையாகப் பின்பற்றுவதன் அவசியம் குறித்து மீண்டும் கவனம் செலுத்தப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இத்தொற்று பரவுதலைத் தவிர்ப்பதற்கான அடிப்படை சுகாதாரப் பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிப்பதில் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அசிரத்தையும் பலவீனங்களுமே இத்தொற்றுக்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படக் காரணமாக அமைந்துள்ளது. அதுவே மருத்துவர்களின் கருத்தாகும்.

கடந்த காலங்களிலும் இத்தொற்று தவிர்ப்புக்கான பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிப்பதில் ஏற்பட்ட அசிரத்தையும் கவனயீனங்களும் இத்தொற்று தீவிரமடையவே வழிவகுத்திருக்கின்றன. இது மறைக்க முடியாத உண்மையாகும்.

அதனால் இத்தொற்றின் பரவுதல் குறித்து தொடர்ந்தும் விழிப்புணர்வுடனும் முன்னெச்சரிக்கையுடனும் செயற்பட வேண்டும். கொவிட் 19 தடுப்பூசியும் இத்தொற்றின் பரவுதலைத் தவிர்ப்பதற்கான அடிப்படை சுகாதாரப் பழக்கவழக்கங்களும் இத்தொற்றினைப் பலவீனப்படுத்தியுள்ளனவே அன்றி, அதனை இன்னும் முழுமையான கட்டுப்பாட்டு நிலைக்கு கொண்டு வரவில்லை. அதனையே இத்தொற்றுக்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கையில் தற்போது ஏற்பட்டுவரும் அதிகரிப்பு எடுத்துக்காட்டுகிறது. அதனால் இத்தொற்று தவிர்ப்பு தொடர்பில் தொடர்ந்தும் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும்.

இல்லாவிடில் கடந்த காலங்களைப் போன்று இத்தொற்றின் பரவுதலைக் கட்டுப்படுத்தவென முடக்கங்களையும் தனிமைப்படுத்தல்களையும் முன்னெடுக்க வேண்டிய நிலையே ஏற்படும். அது நாட்டின் பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் தாக்கங்களையும் பாதிப்புக்களையும் ஏற்படுத்தும். அவ்வாறான நிலைமை ஏற்பட்டுவிடக் கூடாது என்பதுதான் அனைத்து தரப்பினரதும் எதிர்பார்ப்பாகும்.

ஆகவே கொவிட் 19 தொற்று மீண்டும் தலைதூக்கத் துணைபோகாத வகையில் ஒவ்வொருவரும் தமது செயற்பாடுகளை அமைத்துக்கொள்ள வேண்டும். அதுவே இன்றைய தேவை.

editor.tkn@lakehouse.lk

# சுற்றுலாப் படகு நதியில் கவிழ்ந்ததால் குழந்தைகள் உட்பட 22 பயணிகள் பலி!

## கேரளாவில் இடம்பெற்ற பரிதாபம்!



இந்தியாவின் கேரளா மாநிலம் மலப்புரத்தில் நேற்றுமுன்தினம் இரவு படகு கவிழ்ந்ததால் இடம்பெற்ற விபத்தில் 22 பேர் பலியாகியுள்ளனர். அச்சம்பவம் கேரளா வரலாற்றில் நடந்த மிக மோசமான படகு விபத்துகளில் ஒன்றாகக் கூறப்படுகின்றது.

கேரளா மாநிலம் மலப்புரத்தை அடுத்த தானூர் அருகே ஓட்டும்புரத்தில் நேற்றுமுன்தினம் இரவு தூவல் தீர்த்தம் ஆற்றில் 40 பேருடன் அப்படகு சென்று கொண்டிருந்தது. அப்போது அந்த படகு கடலும் ஆறும் சங்கமிக்கும் இடமான பரப்பனங்காடி கடற்கரை பகுதி அருகே சென்ற போது திடீரென தலைகுப்புறக் கவிழ்ந்தது.

இந்த விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 22 ஆகுமென்று நேற்றுப் பிற்பகல் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. ஆனால் மரணமடைந்தோரின் எண்ணிக்கை மேலும் உயருமென்று அஞ்சப்படுகின்றது. உயிரிழந்தோரில் 7 பேர் குழந்தைகள் ஆவர். படகு கவிழ்ந்ததும் அங்கிருந்த மீனவர்கள் சிலர் நீச்சல் அடித்து சிலரைக் காப்பாற்றியுள்ளனர்.

கேரளாவில் கோடை விடுமுறைக்காக சுற்றுலாப் பயணிகள் சென்ற படகே விபத்துக்குள்ளாகியுள்ளது. அச்சம்பவமானது அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டவர்கள் கோட்டக்கல்லில் உள்ள மருத்துவமனையில் செயற்கை சுவாசக் கருவியுடன் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கடற்படை, கடலோர பாதுகாப்புப் படை, தேசிய பேரிடர் மீட்பு படை உள்ளிட்டவை இணைந்து மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டன. இந்தச் சம்பவம் தொடர்பாக தானூரை சேர்ந்த படகு உரிமையாளர் நாசர் என்பவர் மீது பொலிஸார் கொலை வழக்குப் பதிவு செய்துள்ளனர். படகுப் பயணம் விதிமுறைகளை மீறி உள்ளதாக பொலிஸார் உறுதி செய்துள்ளனர்.

படகு உரிமையாளர் மீன்பிடிப் படகை சுற்றுலா சேவைக்காக மாற்றியதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. சுற்றுலாப் படகுகளுக்கு வழங்கப்படும் தகுதிச் சான்றிதழ் இல்லாமல் படகு இயக்கப்பட்டதையும் அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

கடந்த 1924 ஆம் ஆண்டுப ஜனவரி 24 ஆம் திகதி பல்லனா ஆற்றில் கவிஞர் குமரன் ஆசான் உள்ளிட்ட 151 பயணிகளுடன் சென்ற படகு விபத்தில் சிக்கியதில் 23 பேர் பலியாகியிருந்தனர்.

2007ஆம் ஆண்டு பெப்ரவரி 20 ஆம் தேதி தட்டேகாடு பறவைகள் சரணாலயத்தில் சுற்றுலா பயணிகளை ஏற்றிக் கொண்டு சென்ற 3 படகுகளில் ஒன்று விபத்தில் சிக்கியதால் 18 பேர் பலியாகினர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு இடுக்கி மாவட்டம் தேக்கடியில் மணிக்கவலா பகுதியில் ஜலகன்யகா என்ற படகு விபத்தில் சிக்கியதில் 45 பேர் பலியாகினர். இவர்கள் 7 பேர் குழந்தைகள், 23 பேர் பெண்கள். இந்த விபத்து ஏற்பட்டதற்கு காரணம் படகு முறையாக கட்டமைக்கப்படவில்லை, அதிக பாரம் ஏற்றிச் சென்றது, லைப் ஜாக்கெட் கொடுக்காதது என கண்டறியப்பட்டது.

இந்த கோர விபத்துகளை தொடர்ந்து தானூர் அருகே நேற்றுமுன்தினமிரவு நடந்த விபத்தில் கூட 20 பயணிகளை ஏற்றும் படகில் 40 பயணிகளை ஏற்றியதே விபத்துக்குக் காரணம் என குற்றம் சாட்டப்படுகிறது.

இதேவேளை கேரளாவில் படகு விபத்தில் பத்து அல்லது அதற்கு மேற்பட்டோர் பலியாகலாம் என்று பேரிடர் மீட்பு நிபுணர் டொக்டர் முரளி தும்மருக்குடி ஒரு மாதத்திற்கு முன்பே கணித்திருந்தார்.

முரளி தும்மருகுடி இது தொடர்பாக முகநூல் பதிவு ஒன்றையும் செய்து இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இஹல புளியங்குளம் அந் -நஹ்லா அஹதிய்யா பாடசாலையின் பரிசளிப்பு, கலைவிழா

அநுராதபுரம் மரதன்கடவல இஹல புளியங்குளம் அந் நஹ்லா அஹதிய்யா பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் கலைவிழாவும் அண்மையில் அஹதிய்யா பிரதான மண்டபத்தில் அதன் தலைவர் பீ. ஜாயிஸ் (உஸ்தி ) தலைமையில் நடைபெற்றன.

மாணவி எம்.ஐ.எப்.பஹ்மா கிராத் ஓதி நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டதுடன். அஹதிய்யா மாணவர்களின் அஹதிய்யா கீதமும் வரவேற்பு கீதமும் இசைக்கப்பட்டன. அஹதிய்யா பாடசாலையின் தலைவர் பீ.ஜாயிஸ் (உஸ்தி ) வரவேற்புரை நிகழ்த்தினார்.

2009 ஆம் ஆண்டு மூன்று ஆசியர்களுடனும் 28 மாணவர்களுடனும் அரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இன்று 13 ஆசிரியர்களுடனும் 168 மாணவர்களுடனும் இயங்குகின்றது. கல்வி, கலை, கலாசாரம் மற்றும் விளையாட்டுத்துறைகளில் சிறந்த பங்களிப்பை மேற்கொண்டு வருவதுடன், அறிவுக்களஞ்சியம், ஆசிரியர்களுக்கான வழிகாட்டல் மற்றும் சாதாரண தர மாணவர்களுக்கான மேலதிக வகுப்புக்களையும் நடத்தி வருகின்றது. 2009 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை பீ.ஜாயிஸ் (உஸ்தி) தலைவராக பணியாற்றி வருகின்றார்.

அஹதிய்யா இடைநிலை தேசிய சான்றிதழ் பரீட்சை _2022 இல் ஏ.எம்.பீ.எப்.அக்சா, ஏ.எப்.இபா,கே.அமால், எம்.எச்.எப்.ஹனா, எம்.ஐ.எப்.பஹ்மா, எம்.கே.எப்.லுபைனா, எம்.கே.எப்.மின்ஹா, எம்.எம்.ஆய்ஷா, ஆர்.எப்.ஹபாஸ், எ.என்.எம்.அம்ஹர் ஆகியோர் 3 ஏ , சித்திகளையும் என்.எப்.சம்ரா, எம்.பி.எம். ஆதிப் ஆகியோர் ஏ ,1பி சித்திகளையும், எம்.ஏ.அஹமத் 3 சீ சித்திகளையும் பெற்றுக் கொண்டனர்.

புளியங்குளம் அஹதிய்யா சங்கத்தினதும் ஊர்மக்களினதும் அனுசரணையுடன் இந்நிகழ்வு நடத்தப்பட்டது. பெற்றோரினால் 70 ஆயிரம் ரூபா பெறுமதிமிக்க கதிரைகள் வழங்கி வைக்கப்பட்டன. .சமூக சேவையாளர் வை. அறூஸ் பாடசாலையின் குறைபாடுகளை பூர்த்தி செய்வதற்கான சீமெந்தினை பெற்றுக் கொள்ள 25 ஆயிரம் ரூபா வழங்கி வைத்தார். மாணவர்களுக்கான சான்றிதழ்களை கெக்கிராவ நகரில் அமைந்துள்ள NPA Mobll house உரிமையாளர் மஜிதே முனாப் வழங்கியிருந்தார்.

ஐந்தாம் தர மாணவர்களினால் மரநடுகையும் சுற்றுச் சூழல் தொடர்பிலும் குழு நாடகம் அரங்கேற்றப்பட்டதுடன், தரம் 3, 4 மாணவர்களின் கஷீதா, தரம் 6, 7 மாணவர்களின் பெற்றோரை மதிப்போம் குழு நாடகம் ஆகியன சிறப்பாக அமைந்திருந்தன. தரம் 09 மாணவர்களின் சிறந்த நண்பர் தொடர்பிலான குழு நாடகம் அரங்கேற்றப்பட்டது.



அதிதியாக கலந்து கொண்ட அனுராதபுரம் மாவட்ட அஹதிய்யா சம்மேளன தலைவர் எம்.ஏ.எம். தில்ஷான் அஹதிய்யா கல்வி தொடர்பிலும், அந் நஹ்லா அஹதிய்யா பாடசாலை அதிபர் ஆர்.எம்.றனீஸ் அஹதிய்யாவின் வளர்ச்சியில் நலன்விரும்பிகளின் பங்களிப்பு தொடர்பிலும், தொழிலதிபர் தேசமான்ய ஏ.ஆர்.எம். தாரிக் அஹதிய்யாவின் ஆரம்பம் மற்றும் அதன் வளர்ச்சி தொடர்பிலும் உரையாற்றினர்.





மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் வெற்றிபெற்ற அணிக்கான சம்பியன் கிண்ணத்தை தேசமான்யஏ.ஆர்.எம். தாரிக் குழுவினரும், இரண்டாம் இடத்தை பெற்றுக்கொண்ட அணிக்கான கிண்ணத்தை ஊர் பிரமுகர்களும் வழங்கி வைத்தனர்.

சான்றிதழ்களை உலமாக்கள், பிரதம விசேட அதிதிகள் மற்றும் முஸ்லிம் சமய திணைக்கள அநுராதபுரம் மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.சிபான், ஊடகவியலாளர்களான ஏ.ஆர்.றபியுதீன், எம்.ரீ.ஆரிப், இஹல புளியங்குளம் பள்ளிவாசல் தலைவர், ஜனாஸா சங்க தலைவர் உட்பட ஊர்ப்பிரமுகர்கள் வழங்கி வைத்தனர்.

அந்நஹ்லா அஹதியா பாடசாலை மாணவிகளான எம்.எச்.எப்.ஹனா மற்றும் எம்.கே.எப்.லுபைனா ஆகியோர் இணைந்து நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கியிருந்தனர்.

இறுதியாக அந் நஹ்லா அஹதிய்யா பாடசாலை செயலாளர் எச்.எம்.எம்.நளீம் (மௌலவி ) நன்றியுரை ஆற்றியதுடன் பாடசாலை செயலாளர், மாணவர்கள், அதிதிகள், பெற்றோரின் ஸலவாத்துடன் நிகழ்வு நிறைவுபெற்றது.

மதார் தம்பி ஆரிப்
அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

# 'கல்விக்கு கரம் கொடுப்போம்' திட்டத்தின் கீழ் அட்டாளைச்சேனையில் மாணவருக்கு உதவிகள்

அட்டாளைச்சேனை அல்நஜா விளையாட்டு கழகத்தின் 'கல்விக்கு கரம் கொடுப் போம்' எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அல்நஜா விளையாட்டுக் கழகத்தினர் வருடா வருடம் உதவித் திட்டமொன்றை முன்னெடுத்து வருகின்றனர். தந்தையை இழந்த நிலையில் குடும்ப வறுமையில் வாடுகின்ற மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை அக்கழகத்தினர் வழங்கிவருகின்றனர்.

அந்த வகையில் 2023 ஆம் கல்வியாண்டுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் முதலாவது நிகழ்வு பாலமுனை அல்ஹிதாயா மகளிர் கல்லூரியில் அண்மையில் பாடசாலை அதிபர் பி. முஹாஜிரின் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சித் திட்டத்தினை அல்நஜா கழகத்தின் தலைவர் எ.எம்.றிஸ்வான் ஒழுங்குபடுத்தியதுடன், கழகத்தின் உபதலைவர் எஸ்.எம். இத்ரீஸ் நெறிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது

மேற்படி கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.எம்.றியாஸ் கலந்து சிறப்பித்ததுடன், கௌரவ அதிதிகளாக அட்டாளைச்சேனை பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் இம்றுபாஸ் கான், கழகத்தின் உபசெயலாளர் எ.எம். ஹசன் ஆகியோருடன் கழகத்தின் சிரேஷ்ட வீரர்கள் மற்றும் நிருவாகிகளும் கலந்து கொண்டனர்.







தெரிவு செய்யப்பட்ட மாணவ மாணவிகளுக்கு 3000 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

குறித்த செயற்றிட்டத்திற்கு பல வழிகளிலும் உதவி செய்த கழகத்தின் பதவிநிலை நிருவாகிகள், வெளிநாட்டு வாழ் உறுப்பினர்களுக்கு நன்றிகளையும், பாராட்டுக்களையும் கழகத்தின் உறுப்பினர்கள், பாடசாலை நிருவாகத்தினர் என பலரும் தெரிவித்திருந்தனர்.

றிசாத் ஏ.காதர்
ஒலுவில் மத்திய விசேட நிருபர்

# Dialog அறிமுகப்படுத்தும் இலங்கையின் முதலாவது Metaverse ஓவியக்கண்காட்சி

*தனித்துவமான டிஜிட்டல் ஓவியங்களை 'Futureverse' இல் காட்சிப்படுத்தும் இலங்கையின் முதல் Metaverse ஓவியக்கண்காட்சியான 'Divinci' ஐ Dialog Axiata PLC அறிமுகப்படுத்துகிறது. 'Futureverse' உங்களை புது உலகில் மூழ்கடிக்கும், ஊடாடல்மிக்க, அனுபவங்கள் நிறைந்த நாட்டின் முதல் Metaverse ஆகும்.*

*ஊடாடல் மிக்க, மெய்நிகர் நிகழ்வுகளை mixed reality சூழலில் தொடர்ந்து நடத்துவதன் மூலம் அனுபவங்களின் புதிய எல்லைகளை கடக்கும் விதமாக நடைபெறும் இந்த முன்னெடுப்பினூடாக எதிர்காலத்துக்கு தயாராகி வரும் நாட்டின் படைப்பாளர் சமூகத்தின் அபிவிருத்திக்கு கைகொடுப்பதும், டிஜிட்டல் ஓவிய ரசிகர்களுக்கு இதுவரை இல்லாத புதியதொரு அனுபவத்தை வழங்குவதுமே Dialog இன் நோக்கமாகும்.*

*ஓவியத்துறையில் புதியதொரு புரட்சிக்கு வித்திடும் Divinci, டிஜிட்டல் ஓவிய வெளியில் வளர்ச்சிக்கும் புத்தாக்கத்திற்கும் தளமமைப்பதன் மூலம் இலங்கையர்களுக்கு தொழில்நுட்பத்தின் எல்லையில்லா சக்தியை கற்றுக் கொள்ளவும் வாய்ப்பை வழங்குகிறது.*

*Dialog இனால் வெளியிடப்பட்ட 'Futureverse', உங்களை புது உலகில் மூழ்கடிக்கும், ஊடாடல்மிக்க, அனுபவங்கள் நிறைந்த நாட்டின் முதல் Metaverse ஆகும். இது ஒரு மெய்நிகர் உலகம், பயனர்கள் இங்கே விருப்பத்திற்கேற்ப தமது avatar (மெய்நிகர் உரு) ஐ வடிவமைக்க முடியும்.*

*அத்துடன் Dialog இன் பொருட்கள் மற்றும் சேவைகளை அணுகுதல், நண்பர்களுடன் அளவளாவுதல், நிகழ்வுகளுக்கு செல்லுதல், விளையாடுதல் மற்றும் இன்னும் பல விடயங்களை இங்கே செய்யலாம்.*

*VR மற்றும் XR ஆகிய மெய்மறக்க செய்யும் தொழில்நுட்பங்களின் உதவியுடன் இது முன்னெடுக்கப்படுகின்றது.*

*Divinci ஐ அணுக இத்தளத்தை பார்வையிடுக https://divinci.dialog.lk/frame.html*

# யாழ். பலாலி வடக்குக்கு அமைச்சர் டக்ளஸ் விஜயம்

## மீள்குடியேற்றத்தின் போது பலாலி அன்ரனிபுரம் மக்களுக்கு முன்னுரிமையளிக்க கோரிக்கை

அண்மையில் விடுவிக்கப்பட்ட யாழ். பலாலி வடக்கு, அன்ரனிபுரம் பிரதேசத்திலுள்ள காணிகளில் மீள்குடியேற்றம் செய்யும் போது அந்தப் பிரசேத்தை பூர்வீகமாகக் கொண்ட, தற்போது நலன்புரி முகாம்களில் வாழ்ந்து வருகின்ற மக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பலாலி வடக்குக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் பலாலி வடக்கு கடற்றொழிலாளர்களுக்கும் இடையில் அண்மையில் நடைபெற்ற சந்திப்பின் போதே, இந்தக் கோரிக்கையை பலாலி வடக்கு



கடற்றொழிலாளர்கள் முன்வைத்துள்ளனர்.

இந்தக் கோரிக்கை தொடர்பாக கவனம் செலுத்தப்படுமென்று கடற்றொழில் அமைச்சர் உறுதியளித்துள்ளதுடன், மீள்குடியேற்றம் செய்யவுள்ள அன்ரனிபுரம் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களின் பட்டியலை சமர்ப்பிக்குமாறும் அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை, கடற்றொழிலாளர்களின் தொழில் நடவடிக்கைகளை விஸ்தரிக்கும் வகையில் இறங்குதுறையை ஆழப்படுத்துதல், நூலகம் அமைப்பதற்கான காணியொன்றை பெற்றுத்தருதல் உட்பட மேலும் சில கோரிக்கைகளையும் அமைச்சரிடம் கடற்றொழிலாளர்கள் முன்வைத்துள்ளனர்.

இந்தக் கோரிக்கைகள் தொடர்பாகவும் கவனத்தில் கொள்ளப்படுமெனத் தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆழப்படுத்தப்பட வேண்டிய இறங்குதுறையையும் பார்வையிட்டுள்ளார்.

# செல்வச்சந்நிதி கதிர்காமம் பாதயாத்திரை ஆரம்பம்



யாழ். விசேட நிருபர்

வரலாற்றுச் சிறப்பு மிக்க கதிர்காமம் ஆடி பெருவிழாவுக்கான பாதயாத்திரை நூற்றுக்கணக்கான பக்தர்களுடன் பாதயாத்திரைக் குழுத் தலைவர் ஜெயா வேல்சாமியின் தலைமையில் யாழ். செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து கடந்த சனிக்கிழமை (06) ஆரம்பமாகியது.

செல்வச்சந்நிதி ஆலயத்தில் அன்றையதினம் காலை நடைபெற்ற விசேட பூஜையைத் தொடர்ந்து, வேலாயுதத்தை ஜெயா வேல்சாமியிடம் மோகன் சுவாமி சம்பிரதாயபூர்வமாக வழங்கி வைத்த நிலையில், பாதயாத்திரை ஆரம்பமாகியது.

வடக்கு, கிழக்கு, ஊவா ஆகிய மாகாணங்களிலும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மொனராகலை ஆகிய மாவட்டங்களிலும் உள்ள 98 ஆலயங்களை பாதயாத்திரைக் குழுவினர் தரிசித்து, 46 நாட்களில் 815 கிலோமீற்றர் தூரத்தைக் கடந்து சென்று கதிர்காமம் ஆலயத்தைச் சென்றடையவுள்ளனர்.

# தவசிகுளம் பிரதேசத்தில் கஞ்சாவுடன் இருவர் கைது

சாவகச்சேரி விசேட நிருபர்

யாழ். கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தவசிகுளம் பிரதேசத்தில் 7 கிலோ 720 கிராம் கஞ்சாவை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் இருவரை விசேட அதிரடிப்படையினர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (07) கைது செய்துள்ளனர்.

இது தொடர்பாக விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து மன்னாரிலிருந்து வந்த அதிரடிப்படையினர் இந்தக் கைதை மேற்கொண்டனர்.

இந்நிலையில், சந்தேகநபர்களை கொடிகாமம் பொலிஸாரிடம் விசேட அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ளனர்.

சந்தேகநபர்களிடம் கொடிகாமம் பொலிஸார் விரிவான விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

# மன்னாரில் முருகப்பெருமான் சிலையுடன் மூவர் கைது!

மன்னார் குறூப் நிருபர்

தொல்பொருளுக்குரியதெனச் சந்தேகிக்கப்படும் சிறிய முருகப் பெருமான் சிலையொன்றை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் இரு பெண்கள் உட்பட மூவர், மன்னார் பிரதான பாலத்தடி சோதனைச் சாவடியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை (07) கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார், எருக்கலம்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த முருகப்பெருமான் சிலையை சந்தேகநபர்கள் தமது உடைமையில் வைத்திருந்த போதே கைது செய்யப்பட்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த 3 சந்தேகநபர்களையும்



மேலதிக விசாரணைக்காக மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

# மன்னார் பெரிய பாலத்தில் வாகன விபத்து; சாரதி காயம்

மன்னார் குறுப், தலைமன்னார் விசேட நிருபர்கள்



மன்னார் மாவட்டத்தின் தள்ளாடிப் பிரதேசத்துக்கும் பெரிய பாலத்துக்குமிடையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (07) அதிகாலை 2.00 மணியளவில் கெப் ரக வாகனமொன்று வீதியோர பாதுகாப்புக் கல்லில் மோதி விபத்துக்குள்ளானதால், அவ்வாகனத்தின் சாரதி காயமடைந்துள்ளார்.

இதில் காயமடைந்த சாரதி, மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

சிலாவத்துறை, வேப்பங்குளம் பிரதேசத்திலிருந்து கடல் உணவு ஏற்றிக்கொண்டு பயணித்த வாகனமே வீதியோரத்தில் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்ட கல்லில் மோதி குடைசாய்ந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாகனத்தின் சாரதி உறக்கக் கலக்கத்தில் இருந்தமையால் இவ்விபத்து ஏற்பட்டிருக்கலாமென பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இவ்விபத்துத் தொடர்பாக பொலிஸார் விரிவான விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியின் 200 ஆண்டு நிறைவு விழா



யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியின் 200ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வும் கல்லூரி நாள் நிகழ்வும் அக்கல்லூரியின் அதிபர் தலைமையில் கல்லூரியின் பீற்றோ மண்டபத்தில் நேற்று திங்கட்கிழமை (08) நடைபெற்றது.

இதன்போது, 'கல்லூரியை அறிவோம்' எனும் தொனிப்பொருளின் கீழ் மாணவர்களுக்கு இடையே நடத்தப்பட்ட போட்டிக்கான பரிசளிப்பு நிகழ்வும் நடைபெற்றது.

வணபிதா யோசப் நைற்றினால் 1823ஆம் ஆண்டில் அங்கிலிக்கன் திருச்சபை சார்ந்து நல்லூரில் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட நாளே கல்லூரி நாளாகவும் நிறுவுனர் தினமாகவும் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இந்நிகழ்வுக்கு முன்னதாக சென். ஜோன்ஸ் சிற்றாலயத்தில் விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் அதிபரும் சென். ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவருமான சந்திரமௌலீசன் லலீசன் கலந்து கொண்டார்.

# நுவரெலியாவை சுற்றுலாத் தளமாக மாற்றும் செயற்பாடுகளுக்கு விசேட குழு

நுவரெலியா நகரை, சுற்றுலாத் தளமாக மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்க சிறப்புக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தலைமையில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் பங்கேற்புடன் நேற்று (08.) நடைபெற்ற கூட்டத்திலேயே இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பிரகாரம்,நுவரெலியா நகரை சுற்றுலாத்தளமாக



மாற்றுவதற்கான ஏற்பாடுகள் மும்முரப்படுத்தப்படவுள்ளன.

இதற்கான வேலைகளை முன்னெடுக்கவே இக்குழு நியமிக்கபட்டுள்ளது.

நுவரெலியா மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன், நுவரெலியா மாவட்ட அரச அதிபர், நகர அபிவிருத்தி அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்டோரும் பங்கேற்றனர்.

இதன்போது நுவரெலியா நகரை சிறப்பானதொரு சுற்றுலா தளமாக மாற்றுவதற்கு தேவையான விடயங்கள் தொடர்பில் கருத்தகளும், ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டன. இவை தொடர்பில் ஆராய்ந்து, உரிய ஆய்வுகளின் பின்னர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென குழுவொன்றும் அமைக்கப்பட்டது.

# மலைச்சாரல்



வெசாக் தினத்தை முன்னிட்டு மாத்தளை நகரில் பிரபல வர்த்தகர் ஒருவரால் ஏற்பாடு செய்யப்பட்ட அன்னதான நிகழ்வில்,விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோகன திசாநாயக்க கலந்து கொண்டார். இங்கு, அன்னதான நிகழ்வை இராஜாங்க அமைச்சர் ஆரம்பித்துவைத்து, தானம் வழங்கிய போது பிடிக்கப்பட்ட படம். (படம், மாத்தளை சுழற்சி நிருபர்)



பசறை கல்வி வலயத்துக்குட்பட்ட பது/மீதும்பிட்டிய இல _02 தமிழ் வித்தியாலயத்தில், சிங்கள, தமிழ் புத்தாண்டு நிகழ்வுகள் மிகச்சிறப்பாக இடம்பெற்றன. இதில், பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் மற்றும் சித்திரைப் பாரம்பரிய விளையாட்டுகளும் நடைபெற்றன. பசறை பொலிஸ் நிலையத்தின் அதிகாரிகள், அயல் பாடசாலைகளின் அதிபர்கள் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் எனப்பலரும் இந்நிகழ்வில் பங்கேற்றனர். (மடுல்சீமை நிருபர்)



வெசக் வாரத்தை முன்னிட்டு, இனங்களுக்கிடையில் நல்லுறவை ஏற்படுத்தும் அன்னதான நிகழ்வு இடம்பெற்றது.பண்டாரவளை மாளிகாதென்ன தோட்ட மக்கள் இதனை ஏற்பாடு செய்திருந்தனர்.நேற்று முன்தினம் (07) நிகழ்ந்த இந்த அன்னதான வைபவத்தில்,அட்டம்பிட்டிய பொலிஸ் அதிகாரி எஸ்.கே.பீ. சஞ்ஜீவ விஷேட அதிதியாகக் கலந்து கொண்டார்.இந்நிகழ்வுக்கு வருகை தந்த அவரை, தோட்ட இளைஞர் அமைப்பின் தலைவர் வேலு யோகேஸ் (போல்ராஜ்) வரவேற்றார்.இதில், பங்கேற்ற மூவின மக்களையும் படத்தில் காணலாம். (படம்.ஊவா சுழற்சி நிருபர்.)

# பிறந்த பிள்ளை மீது தந்தை சந்தேகம்; அச்சத்தில் சிசுவை கைவிட்ட தாய் கைது

எம்.ஏ.அமீனுல்லா

பிறந்த பிள்ளை தன்னுடையதல்லவென கணவன் சந்தேகம் தெரிவித்ததால், மனைவி தனது ஐந்து நாள் சிசுவை கைவிட்டுச் சென்றார்.

இத்தாயை பொலிஸார் கைது செய்துள்ளனர். அலவத்துகொட, எலகடுவ வீதியிலுள்ள புத்தர் சிலைக்கருகாமையில் இப் பெண் தனது சிசுவை கைவிட்டுச் சென்றுள்ளார். இவரைக் கைது செய்த பொலிஸார் நீதிமன்றத்தில் தாயை ஆஜர்படுத்தினர். இதையடுத்து, எதிர்வரும் (11) வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சிசுவை கொடுமைப்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் தாயார் நீதிமன்றத்தில் பீ அறிக்கை சமர்ப்பித்திருப்பதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தாயை சிறைச்சாலை வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்து குழந்தைக்கு தாய்ப்பாலை வழங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு மேலதிக நீதவான் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார்.

வெசாக் போயாதினத்திற்கு முந்திய தினம், லொறியில் வந்த பெண், தனது ஐந்து நாட்களேயான குழந்தையை, புத்தர் சிலைக்கைக்கு அருகில் கைவிட்டுச் சென்றிருந்தார்.

சிசிடிவி கமெராவில் பதிவாகியிருந்த காட்சிகளை கண்டெடுத்த பொலிஸார், லொறியின் சாரதியிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில், தாயைக் கைது செய்தனர்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 37 வயதுடைய இப்பெண்ணுக்கு மேலும் இரண்டு பிள்ளைகள் இருப்பதாக பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

மூன்றாவது குழந்தை தன்னுடையதில்லையென, கணவர் தெரிவித்ததாலேயே, குழந்தையை கைவிட்டுச் செல்ல முடிவு செய்ததாக, பொலிஸாரிடம் குறித்த பெண் தெரிவித்துள்ளார்.

# மாணவர்கள் கௌரவிப்பு

தலவாக்கலை குறூப் நிருபர்

மஸ்கெலியா பிரதேசத்தில் 2021 ம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த மாணவர்கள் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வு மஸ்கெலியா இலங்கை வங்கி கிளையின் ஏற்பாட்டில் நடைபெற்றது. மஸ்கெலியா இலங்கை வங்கி கிளையின் முகாமையாளர் திருமதி எ.எம்.சி.ப.அபேகோன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், இலங்கை வங்கியின் பிராந்திய முகாமையாளர் பி.விஸ்வநாதன் அதிதியாக கலந்து கொண்டு மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினார்.

# குப்பை, கூளங்கள் கொட்டப்படுவதால் கிணற்று நீர் மாசடைவதாக கவலை

ஊவா சுழற்சி நிருபர்

பண்டாரவளை மாநகரத்தில் தினமும் சேகரிக்கப்படும் குப்பை, கூளங்கள் லியோ மார்கா ஆசிரமத்தை அண்மித்த

சூழலில் கொட்டப்படுவதால் பிரதேசம் எங்கும் துர்நாற்றம் வீசுவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசத்தில் அமைந்துள்ள பிரதான ஆசிரமமான லியோ மார்கா ஆசிரமத்துக்கு அருகில் குப்பைகள் கொட்டப்படுவதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ள பொதுமக்கள், இவ்வாசிரமத்தின் தற்போதைய நிலைமை குறித்தும் கவலை தெரிவிக்கின்றனர். பண்டாரவளை,சென் தோமஸ் வீதியில் அமைந்துள்ள ஆசிரம சூழலில் கொட்டப்படும் குப்பைகளால்,இப்பகுதி மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். இவ்வாறு குப்பைகள் கொட்டப்படுவதால் கிணற்று நீரும் மாசுபடுகின்றது.இப்பகுதியிலுள்ள பாழடைந்த வீதிகளூடாக குப்பை லொறிகள் வருவதால்,மேலும் வீதிகள் மோசமடைவதாகவும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

# கிழக்கின் குரல்



## தேசிய உற்பத்திக்கு பங்களிக்கும் வகையில் கூட்டுறவு சங்கங்கள் செயற்பட வேண்டும்

### கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஈஸ்வானா

(பாலமுனை விசேட நிருபர்)



நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு நல்கும் வகையில் உணவு உற்பத்தியிலும் உணவு பாதுகாப்பிலும் விசேட கவனம் செலுத்தி கூட்டுறவு சங்கங்கள் உற்பத்தி செயற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டும் என கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.ஈஸ்வானா தெரிவித்தார்.

சம்மாந்துறை 3 கிழக்கு சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கத்தின் விசேட பொதுச் சபைக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை (7) சங்கத் தலைவர் ஏ.முகைதீன்பாவா தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதே அரசாங்கத்தின் திட்டமாகும். கூட்டுறவு சேவையில் உணவு வழங்கலும் விநியோகமும் அத்தியாவசிய சேவையாக இருப்பதனால், நாட்டின் தேசிய உற்பத்திக்கு பங்களிக்கும் வகையில் கூட்டுறவுச் சங்கங்கள் செயற்பட வேண்டும்.

1955 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கம் கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பிரிவில் முதன்மை சங்கமாக செயற்பட்டு வருகின்றது. கால்நடை வளர்ப்பை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை இச்சங்கம் முன்னெடுத்திருப்பது பாராட்டத்தக்கது. இதனூடாக அங்கத்தவர்களது பொருளாதாரத்தில் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும் என்றார்.

இந்நிகழ்வில் கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.ஜாபீர், சங்கத்தின் அங்கத்தவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## விபுலானந்த அடிகளாரின் 99வது துறவற தினவிழா

(காரைதீவு குறூப் நிருபர்)



முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் 99ஆவது துறவற தின விழா கடந்த வெள்ளிக்கிழமை (6) காரைதீவு சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்த மணிமண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

முன்னதாக நந்திக் கொடியேற்றம், சுவாமி பிறந்த இல்லத்தில் பூசை வழிபாடு, சுவாமியின் திருவுருவச் சிலைக்கு காவி வஸ்திரம் அணிவித்தல், புஸ்பாஞ்சலி,துறவற கீதம், ஈசன் உவக்கும் இன் மலர் மூன்று வேத பாராயணம் என்பன இடம் பெற்றன.

சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணிமன்ற முன்னாள் தலைவர் வி.ரி.சகாதேவராஜா தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக காரைதீவு பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மன்றத் தலைவர் வெ.ஜெயநாதன், கணக்காய்வாளர் வி.குலேந்திரன் உள்ளிட்ட பணிமன்ற நிருவாகிகள் மற்றும் நடன மாணவர்கள், பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

பணிமன்ற செயலாளர் கு.ஜெயராஜி நன்றியுரையாற்றினார்.

அதேவேளை, காரைதீவு விபுலானந்தர் சதுக்கத்தில் உள்ள சுவாமி விபுலானந்தரின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்தலும் புஸ்பாஞ்சலியும் இடம்பெற்றது.

## கோபுரத்திலுள்ள மணிக்கூண்டை திருத்துமாறு வேண்டுகோள்

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் மட்டக்களப்பு நெடுஞ்சாலை ஏ15 வீதியில் புளியடிச்சந்தியில் அமைந்துள்ள மணிக்கூட்டு கோபுர மணிக்கூடு நீண்ட காலமாக பழுதடைந்து காணப்படுவதால், இக்கோபுரத்தின் அழகிற்கு இது பெரும் குறையாக உள்ளதாக பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும் மூதூர் நகர்புறத்தில் உள்ள நான்கு வட்ட சுற்றுவட்டச் சந்தியில் இம்மணிக்கூட்டு கோபுரம் காணப்படுகிறது. இதில் பொருத்தப்பட்டுள்ள மணிக்கூடு தற்போது செயலிழந்து மிக நீண்ட காலமாக இயங்காது உள்ளது.

எனவே இது குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனம் செலுத்தி உரிய மணிக்கூட்டை இயங்கச் செய்யுமாறும் பொது மக்கள் வேண்டுகின்றனர்.

## பின்தங்கிய திறமையான மாணவிகளுக்கு புலமைப் பரிசில்

(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)



பொருளாதாரத்தில் பின்தங்கிய திறமையான மாணவிகளுக்கு உதவுவதற்காக லங்கெயர் இன்க் (அவுஸ்திரேலியா) Lankare Inc. Australia நிறுவனம் புலமைப்பரிசில் வழங்குவதற்கான எல்லா ஒழுங்குகளையும் மேற்கொண்டு வருகின்றது.

விஞ்ஞானம், வணிகம் மற்றும் கலைப் பிரிவுகளில் கற்கும் க.பொ.த உயர்தர மாணவிகளுள் தகுதியான மாணவர்களைத் தேர்வு செய்யும் பொருட்டு நேர்முகத்தேர்வு சென்றவாரம் ஆயிஷா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

லங்கெயர் நிறுவனத்தின் ஸ்தாபகத் தலைவர் பொறியியலாளர் ஜாபிர் இஸ்மாயில் தலைமையில் நடைபெற்ற இந் நேர்முகப் பரீட்சையின் போது, அமைப்பின் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் பொறியியலாளர் எம்.எல் ரமீஸ் மற்றும் பாடசாலை ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

இது தொடர்பான எல்லா ஒழுங்குகளையும் அதிபர் திருமதி நஜீமா ஹருடீன் மேற்கொண்டிருந்தார்.

இலங்கை பல்கலைக்கழகங்களிலும், பல்வேறு தொழில்நுட்ப கல்லூரிகளிலும் மற்றும் உயர்தர பாடசாலைகளில் பயிலும் தகுதியான மாணவ மாணவியர்களுக்கு லங்கெயார் இன்க் (அவுஸ்திரேலியா) கடந்த காலங்களிலும் இது போன்ற உதவிகளை வழங்கிவருவது குறிப்படத்தக்கது.

## பொத்துவிலில் ஒசுசல மருந்தகத்தை திறக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

(ஒலுவில் விசேட நிருபர்)

பொத்துவில் நகரில் அரச மருந்தாக்க கூட்டுத்தாபனத்தின் (ஒசுசல) கிளை ஒன்றினை திறக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொத்துவில், லாகுகல, பாணம, கோமாரி ஆகிய பிரதேசங்களில் சுமார் 70 ஆயிரத்திற்கு மேற்பட்ட மூவின மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இப் பிரதேசங்களில் வாழும் மக்கள் அவர்களுக்கு தேவையான மருந்து வகைகளை பெருமளவில் தனியார் மருந்து விற்பனை நிலையங்களிலேயே கொள்வனவு செய்து வருகின்றனர்.

அரச ஒசுசல கிளை ஒன்று இல்லாமையினால் தமக்குத் தேவையான மருந்துகளை பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக சுட்டிக் காட்டியுள்ளனர்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்கவேண்டியநிலைக்குதள்ளப்பட்டுள்ளதோடு, அவசரத் தேவைகளுக்கு மருந்துகளை பெற்றுக் கொள்ள முடியாத நிலை எற்பட்டுள்ளது.

நோயாளிகள் அரச ஒசுசலவில் மருந்தைக் கொள்வனவு செய்வதற்கு சுமார் 40 கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள அக்கரைப்பற்று, நிந்தவூர் ஆகிய பிரதேசங்களுக்குச் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் நோயாளர்கள் பல அசௌகரிகங்களை எதிர்கொள்வதோடு பொருளாதார ரீதியாக பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## நூல் அறிமுக நிகழ்வு

(திராய்க்கேணி தினகரன் நிருபர்)

கலாநிதி ரவூப் ஸெய்ன் எழுதிய "இலங்கை முஸ்லிம்களின் தேசிய பங்களிப்பு" எனும் நூலின் அறிமுக விழா சனிக்கிழமை (06) மாளிகைக்காட்டில் நடைபெற்றது.

இவ்விழாவில் சுற்றாடல் உத்தியோகத்தர் எம்.ஐ.எம். இஸ்ஹாக் (நளீமி) வரவேற்புரையையும் அறிமுக உரையையும் நிகழ்த்தியதோடு, தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறை சிரேஷ்ட பேராசிரியர் எம். றமீஸ் அப்துல்லாஹ் நூல் பற்றிய அறிமுகத்தையும் "இலங்கை முஸ்லிம்களின் தேசிய பங்களிப்பு" எனும் தலைப்பில் கலாநிதி ரவூப் ஸெய்ன் விசேட உரையையும் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் உலமாக்கள், வைத்திய அதிகாரிகள், கல்விமான்கள், அரசியல் பிரமுகர்கள், துறைசார் பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## அக்கரைப்பற்று வைத்திய அத்தியட்சகருக்கு பாராட்டு



(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எம்.ஐ.உதுமாலெப்பையின் ஏற்பாட்டில், அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் ரீ.எஸ்.ஆர். ரீ.ஆர். ரஜாப் ஞாயிற்றுக்கிழமை (07) ஒலுவில் கிறீன் விழாவில் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

இந் நிகழ்வில் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் ஆலோசகரும், அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக அண்மையில் கடமை ஏற்ற டாக்டர் ரஜாப் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் பிரதம ஆலோசகர் எஸ்.எல்.ஆதம்பாவா, அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் அதிபர் எம்.ஐ. எம்.றியாஸ், அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் நம்பிக்கையாளர் சபையின் தவிசாளர் எம்.எம். அஜ்வத் என பலரும் கலந்து கொண்டனர்.

## மருதமுனையில் மாபெரும் இரத்ததான முகாம்



(பெரியநீலாவணை விசேட நிருபர்)

வெசாக் தினத்தை முன்னிட்டு மருதமுனை மனாரியன்ஸ் பல்கொன்ஸ் சமூக அமைப்பு, கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை இரத்த வங்கியோடு இணைந்து, ஏற்பாடு செய்த இரத்ததான முகாம் மருதமுனை அல் மனார் தேசிய பாடசாலையின் ஆரம்பப் பிரிவு வளாகத்தில் சனிக்கிழமை (06) நடைபெற்றது.

மன்னாரியன்ஸ் பல்கொன்ஸ் சமூக அமைப்பின் தலைவர் எம்.எப். வஹாபுல் பஹத் தலைமையில் நடைபெற்ற இவ் இரத்ததான முகாமில், பெரியநீலாவணை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி ஆர்.டி.சி.எஸ். ரத்னநாயக்க தலைமையிலான விசேட அதிரடிப்படை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினர்.

இரத்ததான முகாமில் பாடசாலை அதிபர் ஐ.எல். உபைதுல்லா, மஸ்ஜிதுல் நூர் ஜும்ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத் தலைவர் எம்.ஐ.எம். முஹர்ரப் உட்பட மனாரியன்ஸ் பல்கொன்ஸ் அமைப்பின் உறுப்பினர்கள், ஊர் பிரமுகர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## கஞ்சாவுடன் கைதான இருவருக்கு விளக்கமறியல்

(பாலமுனை தினகரன் நிருபர்)

கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட இருவரை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா உத்தரவிட்டுள்ளார்.

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒருவர் 1050 மில்லிகிராம் கஞ்சாவை ஆயிரம் ரூபா பணத்திற்கு விற்பனை செய்தமை மற்றும் 3150 மில்லிகிராமை தன்வசம் வைத்திருந்தமை ஆகிய குற்றங்களுக்காக பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து உப பொலிஸ் பரிசோதகர் ஹஸீர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசங்களுக்கு சென்று நபர்களை கைது செய்து திங்கட்கிழமை (08) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போதே, சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல் வழங்கப்பட்டுள்ளது.

## பச்சை மிளகாய் விலை வீழ்ச்சி; செய்கையாளர்கள் கவலை

(மண்டூர் தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் களுதாவளை பிரதேசத்தில் பச்சை மிளகாயின் விலை குறைந்துள்ளதாக மிளகாய் செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்னர்.

அதிகளவிலான முதலீடுகளை இட்டு தங்களால் செய்கை பண்ணப்பட்ட பச்சை மிளகாய் விலை குறைவடைந்துள்ளதாகவும், மொத்த வியாபாரிகள் 1 கிலோ கிராம் மிளகாயை 90 ரூபா முதல் 100 ரூபா விற்கு பெற்றுச் செல்வதாக தெரிவிக்கின்றனர்.

தாங்கள் செய்கைக்காக இட்ட முதலீடுகளை விடவும் குறைவான விலைக்கே விற்பனை செய்வதாக அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

களுதாவளை பிரதேசத்தில் அமைந்துள்ள பொருளாதார மத்திய நிலையம் செயற்படாமையே இதற்கான காரணம் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் தங்களின் பச்சை மிளகாய்களை நியாயமான விலைக்கு விற்பனை செய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோருகின்றனர்.

## அல்–குர்ஆனை மனனம் செய்த இரு மாணவிகளுக்கு உம்ரா கிரியைக்கு நிதி

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

அட்டாளைச்சேனையில் குறுகிய காலத்தில் அல்குர்ஆனை மனனம் செய்த இரு மாணவியர்களைக் கௌரவித்து, புனித உம்ரா செல்ல நிதி அனுசரணை வழங்கி வைக்கப்பட்டது. அட்டாளைச்சேனை ஜும்ஆ பெரிய பள்ளிவாயலில் இந் நிகழ்வு நடைபெற்றது.

அட்டாளைச்சேனையைச் சேர்ந்த ஹாபிழாக்கள் தஸ்லிம் நுஸ்தா, இல்முடீன் சப்றா ஆகியோருக்கு இக்கௌரவம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் றோயல் தொழில்நுட்ப பல்கலைக்கழக முகாமைத்துவப் பணிப்பாளரும், ஆதிகா அல்குர்ஆன் பாடசாலை ஸ்தாபகருமான ஏ.எல்.எம். அனஸ் கலந்துகொண்டு, புனித உம்ரா கிரியைக்கான நிதியை மாணவியரின் தந்தையரான எம்.எல்.தஸ்லிம் மற்றும் எம்.பி.இல்முடீன் ஆகியோரிடம் கையளித்தார்.

## கல்முனை கூட்டுறவு சங்க தலைவராக தெரிவு

(மருதமுனை தினகரன் நிருபர்)



கல்முனை வடக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் புதிய தலைவராக ஊடகவியலாளரும் வங்கியாளருமான இராசையா ஸ்ரீவேல்ராஜா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

புதிய இயக்குனர் சபை தெரிவின் போதே இவர் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதன் உப தலைவராக இராஜகோபால் நடராஜா தெரிவு செய்யப்பட்டதுடன், இவர்களைத் தவிர ஏழு பேர் கொண்ட இயக்குனர் சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். முன்னாள் தலைவர் சுப்பிரமணியம் அரசரெத்தினம், மார்க்கண்டு லோகராஜா,கிருஷ்ணபிள்ளை நாகராஜா, அன்புமணி ராஜினி, நிபோஜனா பத்மராஜா, தவராஜா வினிதா, குணரெட்னம் கேதீஸ் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

## கோழி குஞ்சுகள் வழங்கும் நிகழ்வு

(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வேலைத்திட்டத்திற்கு அமைவாக, அக்கரைப்பற்று தக்வா ஜும்ஆ பள்ளிவாசல் நிருவாகத்தினரால் இலவசமாக பண்டைய கால அரிய இன கருங்கோழிக் குஞ்சுகள் வழங்கி வைக்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பாலமுனை பிரதேச வைத்தியசாலை பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.ஜே.எம். நௌபலின் வேண்டுகோளிற்கமைவாக, பாலமுனை பிரதேச வைத்தியசாலை வளாகத்தில் அமைந்துள்ள உள நல இடைத்தங்கல் புனர்வாழ்வு நிலையத்திற்கு, அக்கரைப்பற்று தக்வா ஜும்ஆ பள்ளிவாசல் நிருவாகத்தினரால் இலவசமாக பண்டைய கால கருங்கோழிக்குக் குஞ்சுகள் வழங்கி வைக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இணைப்பாளர் என். ரீ.மசூர், பாலமுனை பிரதேச வைத்தியசாலை தாதிய பரிபாலகர் ஐ.ஜலால்தீன், உட்பட தக்வா ஜும்ஆப் பள்ளி நிருவாக சபை உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## காத்தான்குடி பிரதேச செயலகத்தில் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

காத்தான்குடி பிரதேச செயலகத்தில் வேலைத் திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நேற்று திங்கட்கிழமை (08) காத்தான்குடி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

காத்தான்குடி பிரதேச செயலாளர் உதய சிறீதர் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இக் கூட்டத்தில் நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எம.ஜரூப், சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திருமதி பத்மா ஜெயராஜ் உட்பட கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது உணவு பாதுகாப்பு தொடர்பான ஆய்வு நடவடிக்கை முன்னேற்றம் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

உணவு பாதுகாப்பு தொடர்பான விண்ணப்பங்களை பூர்த்தி செய்யாத உத்தியோகத்தர்கள், விண்ணப்பங்களை பூர்த்தி செய்யுமாறு பிரதேச செயலாளர் உதய சிறீதர் அறிவுறுத்தல்களை வழங்கினார்.

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

### 119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

UP LK-3083 Eicher Lorry 2012, அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலை பேசி. 0714542958. 027331

### 122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

SG YV-4065 Mahindra Alfa 2011 Threewheel அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0711210810. 027330

WP YD-8105 Bajaj 2010 Threewheel அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலை பேசி. 0711210810. 027332

## வேலைவாய்ப்பு

### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

பாணந்துறை பேக்கரிக்கு சகல வேலைகளும் தெரிந்த பாஸ் மற்றும் ஹோட்டலின் சமையலறைக்கு சகல வேலை தெரிந்த பாஸ் ஒருவர் தேவை. 0382237536, 0713600004. 027314


OBSERVER JOBS

BREAKING BOUNDARIES

THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE

FOR JOBSEEKERS

www.observerjobs.lk


# பிரசித்த ஏல விற்பனை

02ம், 03ம் நவம்பர் 2022, 01ம், 02ம் டிசம்பர் 2022, 03ம், 04ம் ஜனவரி 2023, 02ம், 03ம் பெப்ரவரி 2023 01ம், 02ம் மார்ச் 2023, 03ம், 04ம் ஏப்ரல் 2023 இல் மௌபிமா, தினகரன் மற்றும் சிலோன் டுடே ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பானது. எல்.பி.பினான்ஸ் பி எல் சி இன் தங்கநகை பாதுகாப்புக்களில் வைக்கப்பட்டு பெறப்பட்ட கடன்தொகை உடன்படிக்கையினுள் நிச்சயிக்கப்பட்ட கொடுப்பனவுகள் செலுத்த தவறிய காரணங்களினால் ஏல விற்பனைக்கு தீர்மானிக்கப்பட்டுள்ள தங்க நகைகளும் கீழே தரப்பட்டுள்ள திகதிகளின் கீழ் அந்த கிளைகளில் பிரசித்த ஏல விற்பனையில் காலை 10 மணிக்கு விற்பனை செய்யப்படும் என்பதனை கடன்பெற்றோருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

| கிளைகள் | திகதி |
|---|---|
| பண்டாரவளை, நுவரெலியா, வெலிமடை, புசல்லாவை, கம்பளை, நாவலப்பிட்டி, மஸ்கெலியா, ஹட்டன, தெஹியத்தகண்டி, மஹியங்கனை, மொனராகலை, கலேவேலா, கண்டி நகரம் கிளை, மாத்தளை, கடுகஸ்தோட்டை, மெதிரிகிரிய, பொலன்னறுவை, தம்புள்ளை, கெலிஓயா, கம்பளை நகர கிளை, பிலிமத்தலாவை, கண்டி, குருநாகல், குருநாகல் நகர கிளை, குருநாகல் பிறீமியர் நிலையம், நாரம்மல, குளியாபிட்டி, ஆனமடுவ, கந்தலே, திகனா. | 24 மே 2023 |
| கோட்டே, பத்தரமுல்லை, டெல்கந்த, நுகேகொடை, கிருலப்பனை, ஹொரணை, அளுத்கம, பேருவளை, பிலியந்தலை, பொரலஸ்கமுவ, அத்திடிய, தெஹிவளை நகர கிளை, தெஹிவளை, களுத்துறை, கெசல்வத்த, பண்டாரகம, தர்கா நகர், பாணந்துறை, வாட்டுவ, பதுரலியா, எல்பிட்டிய, மத்துகம, பிட்டிகல, மொறட்டுவை, மொறட்டுமுல்லை, பதுளை, பதுளை நகர கிளை, பலாங்கொடை, இரத்தினபுரி, எம்பிலிப்பிட்டி, அம்பலாந்தோட்டை திஸ்ஸமஹாராம, ஹன்வெல்ல, அவிசாவளை, எஹலியகொட, நகர அலுவலகம், கொலன்னாவ, கல்கிச, ரத்மலான, வெள்ளவத்தை நகர கிளை, வெள்ளவத்தை. | 25 மே 2023 |
| நீர்கொழும்பு, நீர்கொழும்பு நகர கிளை, வென்னப்புவ, மாரவில, கொச்சிக்கடை, சிலாபம், மீனுவங்கொட, கம்பஹா, நிட்டம்புவ, திஹாரிய, திவுலபிடிய, கேகாலை, வரக்காபொல, மாவனல்ல, புத்தளம், கல்பிட்டிய, மட்டக்குளியா, கிரான்ட்பாஸ் சுலைமான் கொழும்பு 14, அளுத்மாவத்தை கொழும்பு 15, மோதறை, கொட்டாஞ்சேனை, கட்டுநாயக்க-அவிரிவத்த, எலகந்த, கந்தானை, ராகம, கணேமுல்லா, ஜா-எல, வத்தளை, நொச்சியாகம, அனுராதபுரம், அனுராதபுரம் நகர கிளை, மதவாச்சியா, தம்புத்தேகம, கெக்கிரவா | 26 மே 2023 |
| அம்பலாங்கொட, காலி, கராபிட்டிய, மாத்தறை நகர கிளை, தங்காலை, அக்குரஸ்ஸ, தெனியாய, நெலுவ, மாத்தறை, கடவத்தை, கிரிபத்கொடை, கிரிபத்கொடை- மாகொல, கடுவெல, தெல்கொடை, களனி, ராஜகிரிய, நாரஹேன்பிட்டி, கொட்டாவ, ஹோமாகம, மாலபே, மஹரகம, மஹரகம நகர கிளை, அத்துருகிரிய, கொத்தாடுவ புதிய நகரம், பிறீமியர் கொழும்பு 07, கொஹுவாலா, பொரளை, தெமட்டகொட, தொட்டலங்க, டீன்ஸ் வீதி கிளை, மருதானை, செட்டியார் தெரு, கிரான்ட்பாஸ், மாளிகாவத்த, டாம் வீதி கிளை, சங்கராஜ மாவத்தை, ஜம்பெட்டா வீதி கிளை, அடிமை தீவு, கார்ப்பரேட் அலுவலகம் கொழும்பு 03, தலைமை அலுவலகம் கொழும்பு 07 | 27 மே 2023 |
| யாழ்ப்பாணம், சாவகச்சேரி, சுன்னாகம், மானிப்பாய், அச்சுவேலி, வட்டுக்கோட்டை, சங்கனைஇகோப்பாய், கொடிகமம், யாழ்ப்பாணம் பிறீமியர், யாழ்ப்பாண நகரம், திருநெல்வேலி, நெல்லியடி, பரிதித்துறை, புதுக்குடியிருப்பு, வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மல்லாவி, மன்னார், அம்பாறை, சம்மாந்துறை, சாய்ந்தமருது, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, திருக்கோவில், ஆரையம்பதி, கல்முனை, கொக்கட்டிக்சோலை, களுவாஞ்சிக்குடி, மத்திய முகாம், கிரண், சேருநுவர, பொத்துவில், திருகோணமலை நகர கிளை, பேசாலை, மட்டக்களப்பு, கிண்ணியா, திருகோணமலை, வாழைச்சேனை, செங்கலடி, எறாவூர, வகாரை | 30 மே 2023 |

எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளி போடவோ எல்.பீ. ∴பினான்ஸ் பி.எல்.சி. நிறுவனத்திற்கு உரிமம்

LB FINANCE

உதவி பொது மேலாளர் - தங்கக் கடன் பிரிவு
275Æ75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.


**The largest Job Market in Sri Lanka**

**www.observerjobs.lk**




**Widest reach for your employment advertisement**

**Email : info@observerjobs.lk Hotline: 1949**

**For more information**

**0777270012 / 0112429314**



Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.


# பிரசித்த ஏல விற்பனை

21ம், 22ம் பெப்ரவரி 2023 01ம், 02ம் மார்ச் 2023, 06ம, 07ம் ஏப்ரல் 2023 இல் மௌபிமா, தினகரன் மற்றும் சிலோன் டுடே ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பானது. மல்டி பினான்ஸ் பி எல் சி இன் தங்கநகை பாதுகாப்புக்களில் வைக்கப்பட்டு பெறப்பட்ட கடன்தொகை உடன்படிக்கையினுள் நிச்சயிக்கப்பட்ட கொடுப்பனவுகள் செலுத்த தவறிய காரணங்களினால் ஏல விற்பனைக்கு தீர்மானிக்கப்பட்டுள்ள தங்க நகைகளும் கீழே தரப்பட்டுள்ள திகதிகளின் கீழ் அந்த கிளைகளில் பிரசித்த ஏல விற்பனையில் காலை 10 மணிக்கு விற்பனை செய்யப்படும் என்பதனை கடன்பெற்றோருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

| கிளைகள் | திகதி |
|---|---|
| மாத்தறை, மருதானை, கண்டி, குருநாகல, இரத்தினபுரி, கம்பஹா, அனுராதபுரம். | 23 மே 2023 |

மல்டி பினான்ஸ் பிஎல்சி எந்த அறிவிப்பும் இல்லாமல் ஏலத்தை ரத்து செய்வதற்கும் ஒத்திவைப்பதற்கும் உரிமையை கொண்டுள்ளது.

MULTI FINANCE

இல.275/75, பேராசிரியர். ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

අල්ලස් හෝ දූෂණ චෝදනා විමර්ශන කොමිෂන් සභාව
இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு
COMMISSION TO INVESTIGATE ALLEGATIONS OF BRIBERY OR CORRUPTION

# கேள்விக்கான அழைப்பு

**இரண்ட வருட மாதாந்த வாடகை அடிப்படையில் மூன்று (03) வேன்களை பெற்றுக்கொள்ளல்**

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பெறுகைக்குழுத் தலைவராக அதன் பணிப்பாளர் நாயகத்தினால் மாதாந்த வாடகை அடிப்படையில் மூன்று (03) வேவன்களை பெற்றுக்கொள்வதற்காக தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**நிபந்தனைகள் மற்றும் விதிகள் :**

01. வாகன வகை - என்ஜின் கொள்ளளவு 2500CC மற்றும் 3000CC இற்கு இடைப்பட்ட 03 வேன்கள்
02. வாகன நிலை - வாகனங்கள் புதிய நிலையில் அல்லது வாடகைக்கு பெறும் வேளையில் ஓட்டதூர அளவு 125000 கி.மீ.மேற்படாத வாகனமாக இருத்தல் வேண்டும்.
03. ஒப்பந்த காலம் - இருபத்தி நான்கு மாதங்கள் (24)
04. தகைமையுள்ள வழங்குநர்கள், அங்கீகரிக்கப்பட்ட வாகன குழு நாமத்தில் பட்டய வாகன முகவர் நிறுவனங்கள் அல்லது இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவுசெய்துள்ள நிதி நிறுவனங்கள் அல்லது மோட்டார் வாகனங்களை வாடகைக்கு வழங்கும் சேவைக்காக பதிவுசெய்துள்ள நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
05. வழங்க வேண்டிய சேவைகள் :

மூன்று வாகனங்களுக்கும் அவசர ஆபத்து பழுதுபார்த்தல் செலவுகள் வழங்குநரால் மேற்கொள்ளப்படல் வேண்டும். வேன் ஒன்றை பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு விடயங்களுக்காக 24 மணி நேரத்திற்கு மேற்பட்ட காலம் எடுப்பதாயின் வழங்குநரால் அவ் வேனிற்கு சமமான வகையான வேன் ஒன்றை வழங்குதல் வேண்டும்.

மேலதிக விபரங்களை வார நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 இற்கிடையில் 2023.05.29 வரை இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் கணக்காளர் (பெறுகை) தொலைபேசி இல - 011-2588004 மூலம் பெற்றுக்கொள்ளலாம். ஆங்கிலமொழியில் தயாரிக்கப்பட்ட குறித்த கேள்விப் பத்திரங்களை 2023.05.10 மு.ப.9.00 முதல் 2023.05.29 பி.ப.2.00 வரை மீளளிக்கப்படாத ரூபா - 1500.00 வைப்பை செலுத்தி இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பிரதம கணக்காளரிடம் எழுத்து மூல வேண்டுதலை மேற்கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

மீளளிக்கப்படாத வைப்புத்தொகையை கொழும்பு - 07, மலலசேக்கர மாவத்த, இல.36 இல் அமைந்துள்ள இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் புதிய கட்டிடத்தின் 03 ஆம் மாடியின் காசாளரிடம் காசாக செலுத்துதல் வேண்டும்.

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகளை தலைவர், பெறுகைக்குழு, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, இல.36, மலலசேக்கர மாவத்த, கொழும்பு - 07 என்ற முகவரிக்கு 2023.05.30 பி.ப.2.00 இற்கு முன் பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது இந்த ஆணைக்குழுவின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விலைமனுக்களை உள்ளடக்கிய உறையின் இடதுபக்க மேல் மூளையில், “வாடகை அடிப்படையில் 03 வேன்களை பெற்றுக்கொள்ளல்” என்று குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் நிராகரிக்கப்டும்.

கேள்வி ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் உங்களுக்கு அல்லது உங்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர் - பெறுகைக்குழு,**
**இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப்**
**புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு,**
**இல-36, மலலசேக்கர மாவத்த, கொழும்பு - 07**
**தொலைபேசி : 0112582864, 0112596365 பெக்ஸ் : 0112058346.**

# வலயக் கல்வி அலுவலகம் - ஹொரண

## விலைமனுக்கோரல்

ஹொரண வலயக் கல்வி அலுவலகத்திற்கான கணனிகள் மற்றும் கணனி தொடர்பான பாகங்கள் மற்றும் மின் சாதனங்களை கொள்வனவு செய்வதற்காக மேல் மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட விநியோகஸ்தர்களிடமிருந்து **2023.05.30** ஆம் திகதிக்கு **பி.ப.1.00** மணி வரை முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

**01. கணினிகள் மற்றும் பிற பாகங்கள்**

மேசை கணினிகள் / அச்சு இயந்திரம் / நகல் எடுக்கும் இயந்திரம் / வெப் கேமராக்கள், கணினி ஒலிபெருக்கிகள்

**02. மின் சாதனங்கள்**

FM ஒலிவாங்கிகள், ஒலிவாங்கிகள் (கம்பி), தடுப்பு

மேலே பட்டியலிடப்பட்டுள்ள ஒரு பொருளுக்கான விலைகளை மேற்கோள் காட்ட முடியும். மீள் அளிக்கப்படாத கட்டணமான **ரூ.1,000.00** ஐ வலயக் கல்வி அலுவலகத்தில் சரப்பிடம் செலுத்தி கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டினை ஆசிரியர் நிர்வாக கிளையின் கொள்முதல் பிரிவில் சமர்ப்பித்த பின்னர் மனுக்களை பெற்றுக்கொள்ள முடியும்.

**மனு ஆவணங்கள் வழங்கப்படும் திகதி**

**2023.05.09** ஆம் திகதி முதல் **2023.05.29** ஆம் திகதி **மு.ப.9.00 தொடக்கம் பி.ப.2.45** வரை (வாரத்தில் வேலை நாட்களில் மட்டும்)

**2023.05.30 ஆந் திகதி பி.ப.1.00 மணிக்கு** மனுக்கள் திறக்கப்படும்.

பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை **2023.05.30 ஆம் திகதி பி.ப.1.00 மணிக்கு** முன்னர் தலைவர், கொள்வனவுக் குழு, வலயக் கல்வி அலுவலகம், ஹொரண எனும் முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக ஆசிரியர் நிர்வாக கிளையில் வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் இடுதல் வேண்டும். முழுமையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களை நிராகரிக்கும் உரிமையினை டென்டர்குழு கொண்டுள்ளது.

மனுக்கோரல்கள் திறக்கப்படும் நேரத்தில் நீங்கள் அல்லது உங்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி கலந்து கொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு 034-2265372 தொலைபேசி ஊடாக பிரதி கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) தொடர்பு கொள்ளவும்.

**தொலைபேசி / Fax : 034 - 2262 663**

**2023.05.09**

**தலைவர்,**
**கொள்வனவுக் குழு,**
**வலயக் கல்வி காரியாலயம்,**
**ஹொரண.**


www.adz.lk
it's what you want


# பெறுகைத்திட்ட அறிவித்தல்

## மாவட்ட செயலகம் - அம்பாறை

இக் காரியாலயத்தினூடாக நடைமுறைப்படுத்தப்பட திட்டமிடப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கு பொருத்தமான விளம்பரதாரரிடமிருந்து விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

| செயற்றிட்டத்தின் பெயர் | நிர்மாண வகை | அங்கீகரிக்கப்பட்ட தரம் | மீண்டும் செலுத்தப்படாத விளம்பரக் கட்டணம் | விலைமனு பிணையின் பெறுமதி | செயற்றிட்டத்தின் சராசரி மதிப்பீட்டுச் செலவு |
|---|---|---|---|---|---|
| அம்பாறை மாவட்ட செயலகத்தின் புதிய கட்டிடத்தின் கூரையினை நிர்மாணித்தல் | கட்டிடம் | C5 அல்லது C4 | ரூபா 10,000.00 | ரூபா 365,000.00 | ரூபா 365 மில்லியன் |

02. என்னால் வழங்கப்படும் மதிப்பீட்டிற்கு ஏற்ப இச் செயற்றிட்டத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ள வேண்டியதுடன் நிர்மாணப்பணி காலம் 270 நாட்களாகும்.
03. தேசிய போட்டித்தன்மை வாய்ந்த விலைமனு முறையின் கீழ் ஒப்பந்தக்காரர் ஒருவர் தெரிவு செய்யப்படுவதுடன், விலைமனுதாரர்கள் கறுப்புப்பட்டியலில் உள்வாங்கப்படாத கீழே குறிப்பிடப்படும் தகைமைகளை உடையவர்களாகவும் இருக்க வேண்டும்.
    1. நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் கட்டிடங்கள் தொடர்பான விடயத்திற்குரிய C5 அல்லது C4 பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
    2. அதற்குரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
    3. கடந்த மூன்று வருடத்தினுள் அரச, அரச சார்ந்த அல்லது உள்ளூராட்சி நிறுவனத்திற்காக ரூபா 30 மில்லியன் அல்லது அதற்கு மேலதிகமான பெறுமதியினை உடைய மேலே குறிப்பிடப்பட்ட செயற்றிட்டத்தின் நிர்மாணப்பணிகளுக்கு சமமான செயற்றிட்டங்களில் ஒன்று அல்லது அதைவிட மேலதிகமாய் நடைமுறைப்படுத்தி இருத்தல் (எழுத்து மூலமான சாட்சிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்)
04. விளம்பர ஆவணங்களை 2023.05.09 ஆம் திகதி தொடக்கம் 2023.05.26 ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 மணிவரை விளம்பர பத்திரங்களுக்கான உரிய கட்டணத்தினை மாவட்ட செயலாளர் அம்பாறை எனும் கொடுப்பனவின் மேற்கொண்ட பின்னர் இக்காரியாலயத்தின் கணக்குப் பிரிவில் இருந்து விளம்பர பத்திரங்களை பெற்றுக் கொள்ள முடியும்.
05. விளம்பர பத்திரங்களை சமர்ப்பிக்கும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் “புதிய கட்டிடத்தின் கூரையினை அமைப்பதற்கான விளம்பரம் கோரல்” என குறிப்பிட வேண்டும்.
06. 2023.05.29 திகதி மு.ப 10.00 மணிவரை விளம்பர பத்திரங்கள் பாரமெடுக்கப்படுவதுடன் அன்றைய தினம் விளம்பர பத்திரங்கள் பாரமெடுத்தல் முடிவடைந்த உடனேயே விளம்பரப்பத்திரங்கள் திறக்கப்படும்.
07. விளம்பரப்பத்திரங்களை திறக்கும் சந்தர்ப்பத்தில் விளம்பரதாரருக்கு அல்லது அவர் சார்பாக பிரதிநிதித்துவம் செய்யும் நபருக்கு அதில் கலந்து கொள்ளக் கூடிய முறையான அதிகாரமளிக்கப்பட்ட கடிதமானது அப்பிரதிநிதியிடம் இருக்க வேண்டும்.
08. விளம்பர பத்திரம் திறக்கும் சந்தர்ப்பத்தில் தேவை ஏற்படின் விளம்பரதாரர் அல்லது அவரது பிரதிநிதி ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தேசிய அடையாள அட்டை/வெளிநாட்டு கடவுச்சீட்டு/ செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பிக்க வேண்டும்.
09. ஒரு விளம்பராதரருக்கு ஒரு விளம்பரபத்திரத்தை மாத்திரமே சமர்ப்பிக்க முடியும்.
10. மேலதிக தகவல்களுக்கு தொ.இல 063-2224458, 063-2222233 Ext.132
11. இவ் பெறுகைத்திட்ட பணி தொடர்பான இறுதி முடிவானது பெறுகைத்திட்ட குழுவினைச் சார்ந்ததாகும்.

**ஜே.எம்.ஏ.டக்ளஸ்,**
**மாவட்ட செயலாளர்,**
**பெறுகைத்திட்ட குழு தவிசாளர்,**
**மாவட்ட செயலகம் அம்பாறை.**

# தேசிய கல்வி நிறுவகத்தின் மீபே கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவப் பீடத்தின் சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்வதற்கான விலைமனு கோரல்

தேசிய கல்வி நிறுவகத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் தேசிய கல்வி நிறுவனத்தின் மீபே வளவில் அமைந்துள்ள கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவப் பீடத்தின் சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட சிற்றுண்டிச்சாலை / ரெஸ்டுரண்ட் / ஹோட்டல் உரிமையாளர்களிடமிருந்து கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

தேசிய கல்வி நிறுவகப் பணிப்பாளர் நாயகத்தின் மஹரகம - இலங்கை வங்கியில் 607626 (BA சங்கேத இலக்கத்தின் கீழ் - சங்கேத இலக்கம் தொடர்பான விபரங்களை கேள்விப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்) எனும் கணக்கிலக்கத்திற்கு மீளளிக்கப்படாத 500.00 ரூபா வைப்பை செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை பெறுகை அலுவலருக்குச் சமர்ப்பிப்பதன் பேரில் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை கேள்வி மாதிரிப் படிவங்கள் மற்றும் சகல விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் படிவ விநியோகம் 2023-05-29ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு நிறைவுறும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை முத்திரைக் குறி பொறித்து 2023-05-30ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம், மஹரகம எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம், நிதி மற்றும் உதவிச் சேவைகள்) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கேள்விப் படிவங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “NIE/LP/2023/21 - மீபே கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவப் பீடத்தின் சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்வதற்காக சேவை வழங்குநரொருவரைத் தெரிவு செய்தல்” எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

2023-05-30ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு கேள்விப் படிவங்கள் திறக்கப்படும்.

இந்த பெறுகை செயற்பாடுகள் தொடர்பிலான இறுதித் தீர்மானம் தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமாகும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு **011-7601799 / 011-7601797** எனும் தொலைபேசி எண்களைத் தொடர்பு கொள்ளவும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய கல்வி நிறுவகம்,**
**மஹரகம.**
**2023-05-09.**


The Housewives' companion
Classifieds on
Daily News

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு
போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு

## கேள்விக்கான அழைப்பு (IFB)

| உருப்படி இல. | ஒப்பந்தத்தின் பெயர் |
|---|---|
| 01 | தெற்கு அதிவேக வீதி நீடிப்பு பிரிவில் பாலடுவ முதல் மத்தள ஹம்பந்தோட்டை வரையான பகுதியில் மின் பராமரிப்பு விடயங்கள் மற்றும் பரவாகும்புக்க மத்தள ஹம்பாந்தோட்டை வரையான பகுதியில் யானை வேலி பராமரிப்பு மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகள் சார்பாக தகைமையுள்ள ஒப்பந்தக்காரர்களை ஒப்பந்த அடிப்படையில் வழங்குதல் |

மேற்படி திட்டத்திற்காக தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமையின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு 2023 மே 09 முதல் 2023 மே 30 வரை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மற்றும் போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் இணைய தளமான www.rda.gov.lk இற்கு பிரவேசிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

தலைவர்,
அதிவேக வீதி பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் பெறுகைக்குழு,
வீதி அபிவிருத்தி அதிகார சபை.

CSIAP THE WORLD BANK

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
கமத்தொழில் அமைச்சு

**National Competitive Bidding**
**Climate Smart Irrigated Agriculture Project (CSIAP)**
**Project No: P163742 | IFB No: 2022/04**

### கேள்வி அழைப்பின் இறுதி திகதி நீடிப்பு

கடந்த 2023.04.20ஆம் திகதியன்று தினகரன் பத்திரிகையில் பிரசுரமான மேற்குறித்த கேள்வி அழைப்பு தொடர்பான விளம்பரத்தில் விண்ணப்பிக்கும் இறுதி நாள் 2023 மே 18ம் திகதி என குறிப்பிடப்பட்டிருந்தது.

ஏனினும் தற்போது, மனுதாரர்கள் கேள்வி விண்ணப்பங்களை தயாரித்து சமர்ப்பிக்க போதுமான காலத்தை வழங்கும் வகையில் விண்ணப்பிக்கும் திகதியானது 2023 மே மாதம் 25ஆம் திகதி வரை நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது என்பதை தயவாக அறியத்தருகிறோம்.

Chairman,
Regional Procurement Committee (Northern Province)
Climate Smart Irrigated Agriculture Project,
Deputy Project Director's Office (Northern Province),
Kovinthankadai Junction, Wilson Road, Kilinochchi.

The Housewives' companion
Classifieds on
Daily News

# கேள்வி கோரல் அறிவித்தல்

மத்திய மாகாண சுகாதார அமைச்சு

## பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை மாத்தளை ஆரம்ப சுகாதார அமைப்பை வலுவூட்டும் செயற்றிட்டம் 2023

1. மாத்தளை எம்.சி. வீதி பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் பணிமனையின் பெறுகைக்குழுவின் தலைவரால் கீழ்க்காணும் நிர்மாணங்கள் மற்றும் பழுது பார்த்தல்களுக்காக தகைமையுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2019.05.08ம் திகதிய அரச நிதி சுற்று நிருப இல. 04/2016 (ii), 04/2016(iv) இன் பிரகாரம் தேசிய போட்டி முறையின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. பொறியிடப்பட்ட கேள்விகள் 2023.05.30 மு.ப. 10.00 வரை ஏற்கப்படும் அவ்வாறே கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் விலைமனுக்களுடன் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுமகளிக்கலாம்.
2. குறித்த கேள்விப்படிவக் கட்டணங்களை மாத்தளை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் காசாளரிடம் செலுத்திய பின்பு குறித்த கேள்விப் பத்திரங்களை 2023.05.09 முதல் 2023.05.29 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை பெற்றுக் கொள்ளலாம்.
3. கேள்விப் பிணையை சமர்ப்பிக்கும் போது நிர்மாண பாதுகாப்பு நிதி (CGF) மத்திய வங்கியினால் அனுமதிக்கப்படட வர்த்தக வங்கியிலிருந்து அல்லது காப்புறுதி நிறுவனத்திலிருந்து மாத்தளை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளரின் பெயரில் குறித்த மாதிரிக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு இல்லையெனில் குறித்த தொகையை மாத்தளை பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் பணிமனையின் கணக்காளரிடம் செலுத்தி அப்பற்றுச்சீட்டின் உறுதி செய்யப்பட்ட போட்டோ பிரதியொன்றை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி விண்ணப்பங்களை மாத்தளை எம்.சி வீதி பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் உள்ள கேள்விப் பெட்டியில் வைப்பு செய்தல் அல்லது தலைவர், பெறுகைக் குழு, பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் பணிமனை, எம்.சி. வீதி, மாத்தளை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். 2023.05.30 மு.ப. 10.00 இற்கு பின்பு கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
5. கிடைக்கப்பெறும் கேள்விகளில் எந்தக் கேள்வியையும் தேர்ந்தெடுக்கும் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழுவிற்கு உரியது.
6. இது பற்றிய மேலதிக விபரங்களை இவ் அலுவலகத்தின் மருத்துவ அதிகாரி (திட்டமிடல்) மூலம் பெற்றுக் கொள்ளலாம். (தொ. பே. 066-2226504)
7. கேள்விகள் மூலப்பிரதி மற்றும் இரண்டாம் பிரதியை பூர்த்தி செய்து வேறுவேறு உறைகளில் இட்டு சகலதையும் ஒரே உறையில் இட்டு அவ் உறையின் இடது பக்கம் குறித்த கைத்தொழிலின் பெயர் மற்றும் தொடர் இலக்கத்தைக் குறிப்பிட்டு பொறியிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
8. கேள்வி ஆவணங்களில் கோரியுள்ள தொழில்நுட்ப நிதி மற்றும் ஏனைய தகைமைகளுடன் ஆவணங்களின் உறுதி செய்த பிரதியை கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
9. சகல கேள்வியினதும் பெறுமதி ரூபா 05 மில்லியனுக்கு மேற்படும் வேளையில் ஒப்பந்தம் வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு சித்திகரமான கேள்விதாரரால் 1987 இல.3 பொது ஒப்பந்த சட்டத்தின் 8ம் பந்தியின் கீழ் கம்பனிகள் பதிவாளரால் விநியோகிக்கப்படும் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.
10. இக் கேள்வி அழைப்பு தேசிய போட்டி கேள்வி கோரல் (NCB) முறையில் செயற்படுத்தப்படும். இதன் கீழ் பெறுகை மேற்கொள்ளப்படும் கைத்தொழில்களில் வரி இன்றிய மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 50 மில்லியனுக்கு குறைவாவதுடன் 2021.02.18ம் திகதி அரச நிதி சுற்று நிருப 04/2016 (iii) இன் பிரகாரம் CIDA தரம் குறிப்பிடப்படுதல் மற்றும் பிரதேச கேள்விதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
11. இது பற்றிய கேள்விக்கு முன்னரான கூட்டம் 2023.05.18 வியாழக்கிழமை மு.ப. 10.00 இற்கு மாத்தளை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் கேட்போர் கூடத்தில் நடைபெறும். இவ் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநதிகளுக்க சமுமகளிக்கலாம்.

| தொடர் இல. | நிர்மாணம் மற்றும் பழுது பார்த்தல்கள் | தேவைப் படும் பதிவு மற்றும் தரம் (CIDA Grade) | பொறியியல் அளவுப் பத்திர தொகை (வெட் இன்றி) (ரூ.) | மீளளிக்கப் படாத தொகை (ரூ.) | கேள்விப் பிணையின்பெறுமதி காசாக (ரூ.) | கேள்விப் பிணையின்பெறுமதி காசாக இல்லையெனில் (ரூ.) | கேள்விப் பிணை செல்லுபடி கால |
|---|---|---|---|---|---|---|---|
| PSSP - 2023 திட்டமிடல் | | | | | | | |
| 01 | தேவஹுவ பிரதேச வைத்திய சாலையின் வெளி நோயாளர் பிரிவு புதிய மலசல கூட தொகுதி மற்றும் அங்கவீன மானோருக்கான மலசல கூட நிர்மாணம் | C9, C8 அல்லது C7 | 2811,200.50 | 5000.00 | 28250.00 | 56250.00 | 2023.09.26 |
| 02 | வில்கமுவ பிரதேச வைத்தியசாலையின் புதிய பிரிவுகளின் நிர்மாணம் மற்றும் மலசல கூடத்தை பழுது பார்த்தல் | C9, C8 அல்லது C7 | 3828,366.95 | 5000.00 | 38300.00 | 76600.00 | 2023.09.26 |
| 03 | சீகிரிய பிரதேச வைத்தியசாலையின் பழைய வெளி நோயாளர் பிரிவு கட்டிடம் மீள் நிர்மாணம் மற்றும் புதிய வெளி நோயாளர் பிரிவிற்கு உள்ள கொரிடோவை நிர்மாணித்தல் | C8, C7 அல்லது C6 | 5199,322.27 | 5000.00 | 52000.00 | 104000.00 | 2023.09.26 |
| 04 | ஹெந்துன்கடுவ பிரதேச வைத்தியசாலையின் கூரை மீள் நிர்மாணம் மற்றும் தீந்தை பூசுதல் | C9, C8 அல்லது C7 | 2117,702.00 | 5000.00 | 21200.00 | 42400.00 | 2023.09.26 |
| 05 | ரத்தொட்ட பிரதேச வைத்திய சாலையின் சமையலறையை மீள் நிர்மாணம் செய்தல் | C9 அல்லது C8 | 1138,0009.35 | 5000.00 | 11400.00 | 22800.00 | 2023.09.26 |
| 06 | ரத்தொட்ட பிரதேச வைத்தியசாலையின் வார்ட் மலசல கூடத்தின் மீள் நிர்மாணம் | C9, C8 அல்லது C7 | 4361,038.92 | 5000.00 | 43700.00 | 87300.00 | 2023.09.26 |
| 07 | தம்புள்ள மாவட்ட ஆதார வைத்தியசாலையில் காணப்படும் மின் விநியோக அமைப்பை மீண்டும் தயாரித்தல் | C6, C7 அல்லது C8 | 5014.620.00 | 5000.00 | 50150.00 | 100.300.00 | 2023.09.26 |
| 08 | இலுக்கும்புர பிரதேச வைத்தியசாலையின் புதிய நீர் தாங்கி ஸ்டான்ட் ஐ நிர்மாணித்தல் | C9, C8 அல்லது C7 | 3074,946.20 | 5000.00 | 30750.00 | 61500.00 | 2023.09.26 |
| 09 | வில்கமுவ சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் பணிமனை மற்றும் கராஜை மீள் நிர்மாணம் செய்தல் | C9, C8 அல்லது C7 | 4079,422.14 | 5000.00 | 40800.00 | 81600.00 | 2023.09.26 |

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் பணிமனை,**
**மாத்தளை.**

2023.05.08

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, வவுனியா**

## மருத்துவ உபகரணங்கள் வழங்கல்

கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள மருத்துவ உபகரணங்கள் வழங்கக்கூடிய பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

மருத்துவ உபகரணங்கள்

| S.No | Bid Number | Description | Non- refundable fee | Refundable Bid Bond/Validity |
|---|---|---|---|---|
| 01 | NP/04/43/02/ME/ PSSP/2023/01 | Height measuring board-04, ECG machine (Single channel)-03, Length board for infant-03, Aneroid BP-20, Nebulizer-06, Bathroom scale-24, Emergency drug trolley-03, Dressing trolley-03, Weight scale for infant-06, Autoclave (60l)-01, AED Defibrilator-02, Evisceration table-01, Dissection table-01 | 2,000.00 | 66,500.00 05/09/2023 |
| 02 | NP/04/43/02/ME/ PHC/2023/01 | ECG Machine-01, Height measuring board-02, Length board for infant-01, Hand held doppler-09 | 2,000.00 | 12,000.00 08/08/2023 |

2. ஒவ்வொரு பிரிவுக்காகவும் எழுத்துமூலமான விண்ணப்பத்தை வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு (தொ.பே இல 0242224865, தொலைநகல் 024 2222892) சமர்ப்பிப்பதுடன் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தை பணிமனையின் கணக்கு கிளையில் செலுத்தி 09.05.2023 தொடக்கம் 22.05.2023 வரை மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 15.00 மணி வரை ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றினை பெற்றுக்கொள்ளலாம்.
3. விலைமனுக்கள் தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, மன்னார் வீதி, வவுனியா என்ற முகவரிக்கு 23.05.2023 அன்று மு.ப 10.00 மணிக்கு முன்னதாக சேர்த்தல் அல்லது பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும், பங்கேற்கும் விலைமனுதாரர்களின் முன்னிலையில் 23.05.2023 (செவ்வாய்க்கிழமை) அன்று மு.ப 10.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும்
4. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் 3ல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம் அத்துடன் வேலை நாட்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 மணி வரை விலைமனுக்களை பரீட்சிக்க முடியும்.
5. விலைமனுவுக்கு முந்திய மாநாடு 2ல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் 16.05.2023 அன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்.
6. அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவலின்படி மீளளிக்கப்படக்கூடிய விலைமனுப் பிணையை கொண்டதாக விலை மனுக்கள் இருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை**
**வவுனியா**
**09.05.2023**

# பெறுகை அறிவித்தல்

## கதிர் பாதுகாப்பு உருப்படிகளை கொள்வனவு செய்தல் மற்றும் 2023/2024ம் ஆண்டிற்கு உணவகத்தை நடத்திச் செல்லல் கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை – றாகம

கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலைக்கு கதிர் பாதுகாப்பு உருப்படிகளை கொள்வனவு செய்தல் மற்றும் 2023/2024 ஆண்டிற்கு வைத்தியசாலைகளில் உணவகத்தை நடத்திச் செல்வதற்காக பிரதேச பெறுகைக் குழுத் தலைவரால் தகைமையுள்ள வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| ஒப்பந்தத்தின் பெயர்/உருப்படி | அளவு | பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள் | கேள்விப் பிணை ரூ. | கேள்வி ஆவணக் கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|
| 01. கதிர் பாதுகாப்பு உருப்படி | 29 | ● CDDA/NMRA பதிவுச் சான்றிதழ் | 160,0000.00 | 2500.00 |
| i. X-ray protective Skirt & Vest (Small, Medium, large) | | | | |
| ii. X-ray protective hat medium | 3 | | | |
| iii. X-ray protective lead Goggles | 5 | | | |
| iv. Thyroid Collar W/lead Protection | 14 | | | |
| 02. கொழும்பு வடக்கு போதனா வைத்திய சாலையின் உனவகத்தை நடத்திச் செல்லல் | | குறைந்தபட்சம் மூன்று வருட அனுபவம் | 50,000.00 | 1000.00 |

02. தேசிய போட்டி கேள்வி கோரல் மூலம் வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்கள் நியமிக்கப்படுவர்.

03. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற தகைமையுள்ள எந்தக் கேள்விதாரருக்கும் முகவருக்கும் அல்லது பெயர் குறிப்பிடப்படும் நபருக்கும் கீழ்க்காணும் விடயங்களை சமர்ப்பித்து 2023.05.09ம் திகதி முதல் 2023.05.29 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.30 முதல் பி.ப. 2.30 வரை கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் நிதிப் பிரிவிலிருந்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

- கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் பிரதம கணக்காளரிடம் எழுத்துமூல விண்ணப்பம்
- வியாபார பதிவுச் சான்றிதழின் உறுதி செய்த பிரதியொன்று
- ரூபா 05 மில்லியனுக்கு மேற்பட்ட கேள்விக்காக 1987 இல. 03 பொது ஒப்பந்த சட்டத்தின் கீழான கம்பனி பதிவாளர் திணைக்களத்தின் பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

04. 2023.05.30 மு. ப. 10.30 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு பொறியிடப்பட்ட கேள்விகளை கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுத் தலைவருக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் பிரதம கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் விண்ணப்பதாரிக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

05. சகல கேள்விகளும் இரு பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் 'மூலப்பிரதி' மற்றும் 'நகல் பிரதி' என்று குறிப்பிடப்படல் வேண்டும். கேள்வி உள்ளிடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த பெறுகையின் பெயர் மற்றும் திறக்கப்படும் திகதியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

(தொ. பே. இல. 011-2959261/2 நீடிப்பு 722/173)

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை,**
**றாகம.**

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want
Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067
E-mail - classified@lakehouse.lk
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
BOC Lake House Branch
Acc. No. 000000377






கொழும்பு கம்பன் கழகம் நடத்தும் "நிருத்தோற்சவம் 2023" 6ஆம் திகதி மாலை கொழும்பு இராமகிருஷ்ணா மிஷன் மண்டபத்தில் கம்பவாரிதி இ. ஜெயராஜ் தலைமையில் 3ஆம் நிகழ்வு நடைபெற்றது. சட்டத்தரணி ஜெயந்தி வினோதன் மங்கள விளக்கேற்றி வைப்பதையும், செல்வி. தில்ஷா கிருஷ்ணகுமார் கடவுள் வாழ்த்து பாடல் இசைப்பதையும், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் சசி மகேந்திரன் தலைமை உரையாற்றுவதையும், பெரும்தலைவர் ஜெ. விஸ்வநாதன் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும், "ஞானம் ஓர் வடிவாகி" நிர்த்தன சங்கமம்" நடன நிகழ்விற்கு அபிநயஷேத்ரா நடனப்பள்ளி ஆசிரியர் கலாசூரி திவ்யா சுஜேன், நிர்த்தனா நடனப்பள்ளி ஆசிரியர் கலைமாணி சிவானந்தி ஹரிதர்ஷன் ஆகியோர் நட்டுவாங்கம் வழங்குவதையும் கலந்து கொண்டோரையும் காணலாம்.

## ஆசிரியப் பணியில் அர்ப்பணிப்புமிக்க சேவையாற்றிய கிருபாதேவி இராமலிங்கம்

### அரசசேவையில் இருந்து அடுத்தவாரம் ஓய்வு

ஆசிரியப் பணியை சிறப்பாக மேற்கொண்டு சமூகத்தின் மத்தியில் நற்பெயரைப் பெற்றுக் கொண்ட கல்முனை சேனைக்குடியிருப்பைச் சேர்ந்த ஆசிரியை திருமதி கிருபாதேவி இராமலிங்கம் எதிர்வரும் 2023.05.15 ஆம் திகதி ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வு பெறுகின்றார்.

கல்முனை சேனைக்குடியிருப்பைச் சேர்ந்த அமரர் முருகுப்பிள்ளை மற்றும் பூமணி தம்பதியினருக்கு முதலாவது மகளாக 1963.05.16 ஆம் திகதி பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை கல்முனை சேனைக்குடியிருப்பு கணேஷா மகாவித்தியாலயத்திலும், இடைநிலை மற்றும் உயர் கல்வியை கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையிலும் (தேசியப் பாடசாலை) கற்றார்.

1990.06.11ஆம் திகதி ஆரம்பக் கல்வி ஆசிரியையாக நியமனம் பெற்ற இவர், தனது கிராமத்திலுள்ள கமு/கமு/ கணேஷா மகா வித்தியாலயம் மற்றும் கமு/கமு/ நற்பிட்டிமுனை சிவசக்தி மகாவித்தியாலயம், கமு/கமு/துரைவந்தியமேடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை என்பவற்றில் முப்பத்து



மூன்று வருட காலம் சேவையாற்றியுள்ளார்.

இவர் சேவையாற்றிய பாடசாலைகளில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் சித்தி பெற பாடசாலை நேரம் தவிர்ந்த வேளைகளிலும் அர்ப்பணிப்புடன் கல்வி பணியை மேற்கொண்டு கல்வி அதிகாரிகள், அதிபர்கள் மற்றும் பெற்றோரின் நன்மதிப்பை பெற்றுள்ளார்.

இவை தவிர பாடசாலை மாணவர்கள் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளில் ஈடுபட்டு சாதனைகள் படைக்கவும் உழைத்துள்ளார். பாடசாலை நாட்களில் லீவு பெறாமல் அர்ப்பணிப்புடன் கருமமாற்றிய இவரை கண்ணியப்படுத்தும் வகையில் கல்வி அமைச்சின் உயர் நியமங்களுக்கமைய வழங்கப்படும் உயர்விருதான 'குரு பிரதீபா பிரபா' விருது அறிமுகம் செய்யப்பட்ட முதலாவது வருடத்தில் (2011 ஆம் ஆண்டு) அந்த விருதை கல்முனை கல்வி வலயத்தில் இருந்து பெற்ற அதிபர்கள் ஆசிரியர்களில் இவரும் ஒருவர்.

தேசிய கல்வி நிறுவத்தின் கல்முனைப் பிராந்திய தொலைக் கல்வி நிலையத்தில் 1991 தொடக்கம் 1995ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஆசிரிய பயிற்சியை நிறைவு செய்து தொழில் தகைமையைப் பெற்றார்.

சித்த வைத்திய மற்றும் சோதிடம் சார்ந்த குடும்பப் பின்னணியில் உள்ள இவர், அத்துறைகளிலும் அதீத ஈடுபாடு மிக்கவர். இவர் சமய சமூக செயற்பாட்டாளராகிய அரசரெத்தினம் இராமலிங்கத்தின் பாரியாராவார்.

**செல்லையா பேரின்பராசா**
(துறைநீலாவணை நிருபர்)

## மடத்தடி மாட்டுப்பளை மீனாட்சியம்மன் ஆலயத்தின் வருடாந்த தீர்த்தோற்சவம்




வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நிந்தவூர் மடத்தடி மாட்டுப்பளை மீனாட்சியம்மன் ஆலய வருடாந்த தீர்த்தோற்சவம் சித்ரா பௌர்ணமி தினத்தில் பல்லாயிரக்கணக்கான பக்தர்களோடு மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

கடந்த 26 ஆம் திகதி ஆரம்பமாகிய முதலாவது வருடாந்த அலங்கார உற்சவ கிரியைகள் சித்ரா பௌர்ணமியன்று காலை ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள், குரு சிவஸ்ரீ கோவர்த்தன சர்மா வழிகாட்டலில் திருப்பொற்சுன்னம் இடிக்கும் நிகழ்வுடன் ஆரம்பமாகின.

ஆரம்பத்தில் ஆலய பரிபாலன சபை தலைவர் கி. ஜெயசிறில், ஆலோசகர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் முதலில் சுன்னம் இடித்து பின்னர் பூஜையுடன் வீதியுலா வந்தனர். பின்னர் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் அம்பாள் மற்றும் பக்தர்கள் சமுத்திரத்தை நோக்கி சுமார் இரண்டு கிலோ மீட்டர் தூரம் ஊர்வலமாக நடையில் சென்றனர். கடற்கரையில் அம்பாளுக்கு விஷேட அபிஷேகம் செய்து குருக்கள் நிருவாகிகள் முதலில் தீர்த்தமாட பின்னர் பக்தர்களும் தீர்த்தமாடினர். மீண்டும் ஆலயத்திற்கு வந்து திருவூஞ்சல் பாடி அன்னதானத்துடன் நிறைவடைந்தது.

பத்து திருவிழா பூசைகளை அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில், கல்முனை, நற்பிட்டிமுனை, கல்முனை, சேனைக்குடியிருப்பு, சம்மாந்துறை வீரமுனை, அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, காரைதீவு, திருக்கோவில், விநாயகபுரம், அட்டப்பள்ளம், நாவிதன்வெளி பிரதேச மக்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

இறுதி தின பூசை ஆலய நிர்வாகத்தினரால் மிகவும் சிறப்பாக ஒழுங்குப்பட்டிருந்தது.

**வி.ரி.சகாதேவராஜா**
காரைதீவு குறூப் நிருபர்

## சதாசிவம் உதயசாந்தனுக்கு "விஸ்வகீர்த்தி" விருது

களுத்துறை சுழற்சி நிருபர்



இலங்கை சமாதான நீதவான் பேரவை களுத்துறை மாவட்ட அகலவத்தை, டார்டன்பீல்ட் தோட்டத்தைச் சேர்ந்த அதி சிறந்த சமூக தன்னார்வ செயற்பாட்டாளர் கலாவிபூசணம், சதாசிவம் உதயசாந்தனுக்கு "விஸ்வகீர்த்தி" விருது வழங்கி கௌரவித்துள்ளது.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த மகாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற "நம்மால் முடியும்" என்ற நிகழ்வின் போது இலங்கை சமாதான நீதவான் பேரவையின் தேசிய பணிப்பாளர் டாக்டர் இளங்கோ காந்தியினால் இந்த விருது வழங்கி வைக்கப்பட்டது.

களுத்துறை அகலவத்தை கணபதி அறநெறி பாடசாலை பொறுப்பு ஆசிரியரான எஸ். உதயசாந்தன் விசேட தேவைகளை கொண்டவர் எனினும் களுத்துறை மாவட்டத்தில் இயங்கி வரும் சில அறநெறி பாடசாலைகள் உட்பட பெருந் தோட்ட பகுதியில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்ந்து வரும் குடும்பங்கள் பலவற்றினதும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு உதவிகளையும் செய்து வருகின்றார்.

## அகில இலங்கை சமாதான நீதவானாக அப்துல் காதர் அர்சாத்

ஒலுவில் மத்திய விசேட நிருபர்



அக்கரைப்பற்றைச் சேர்ந்த அப்துல் காதர் அர்சாத் அகில இலங்கை சமாதான நீதவானாக அக்கரைப்பற்று மாவட்ட நீதிபதி எம்.எச். முகம்மட் ஹம்ஸா முன்னிலையில் அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

அக்கரைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினராகவும், மார்க்ஸ் மேன் விளையாட்டுக் கழகத்தின் ஆலோசகராகவும் இவர் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தொழிலதிபராக இருக்கும் இவர் சிறுவயதில் இருந்தே சமூக, அரசியல் செயற்பாடுகளில் அர்ப்பணிப்புடன் செயற்படுவதுடன் பல்வேறு சமூக நலத் திட்டங்களையும் இன்றுவரை மேற்கொண்டு வருகின்றார்.

இவர் நிந்தவூர் மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையில் கடமையாற்றுவதும் குறிப்பிடத்தக்கது.

## வழிதவற வாய்ப்புகள் இருந்தும் நேர்வழியில் நடப்பவர்களை போற்ற வேண்டும்

### -அங்கஜன் இராமநாதன் எம்.பி தெரிவிப்பு

சாவகச்சேரி விசேட நிருபர்



வழிதவறிச் செல்ல ஏராளம் வாய்ப்புகள் இருந்தும், நேர் வழியில் பயணிப்பவர்கள் போற்றப்பட வேண்டியவர்கள் என, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை (07) வட வரணி யாழ். ஒளி விளையாட்டுக்கழகத்தில் இடம்பெற்ற கரப்பந்தாட்ட சுற்றுத்தொடரின் இறுதிப் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் உரையாற்றிய போது,

"இளைஞர்கள் பலரும் இன்று சுய கட்டுப்பாட்டுடன் விளையாட்டுத் துறையில் அதிக அக்கறை காட்டி வருவது மகிழ்ச்சியளிக்கின்றது. இன்று வழி தவறிச் செல்ல ஏராளமான வாய்ப்புகள் காணப்படுகின்றன. ஆனால், அவற்றில் சிக்கிக் கொள்ளாமல் நேர் வழியில் பயணிக்கும் இளைஞர், யுவதிகள் போற்றப்பட வேண்டியவர்கள். அதை நினைத்து நான் பெருமைப்படுகிறேன்.

விளையாட்டுத் துறையானது, தவறான வழிகளில் இளைஞர், யுவதிகள் செல்லாமல் இருக்க உதவுவதுடன், சமூகத்தில் மிகப் பெரிய பிணைப்பையும் ஏற்படுத்துகிறது. அந்தப் பிணைப்பும் ஒற்றுமையும் சமூகத்தை மேலும் முன்னோக்கிக் கொண்டு செல்ல உறுதுணையாக அமையும்" என்றார்.




இந்து மக்களின் முக்கியமான விரதத்தில் "சித்திரா பௌர்ணமி" விரத தினம் நாடு முழுவதும் வெள்ளிக்கிழமை (5)இந்து ஆலயங்களில் அனுஷ்டிக்கப்பட்டது. இதன் போது ஆண்டிமுனையில் அமைந்துள்ள ஸ்ரீ கன்னியம்மன் ஆலயம், உடப்பு ஸ்ரீ திரௌபதியம்மன் ஆலயம், உடப்பு ஸ்ரீ வீரபத்திரகாளியம்மன் ஆலயம் போன்றவற்றில் பூஜைகள் சிறப்பாக இடம்பெற்று முளைக்கொட்டும் நிகழ்வும் இடம்பெற்று நிறைவடைந்தது. படம்: உடப்பு குறூப் நிருபர்




கொழும்பு முகத்துவாரம் ஸ்ரீ வெங்கடேஸ்வர விஷ்ணு கோவிலின் வருடாந்த வசந்தோற்சவ இரத பவனி திருவிழாவில் ஸ்ரீ பூமி நீளா பத்மாவதி சமேத வெங்கடேஸ்வர பெருமாள் தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு காட்சியருளுவதை படங்களில் காணலாம்.
( படம்-வடகொழும்பு தினகரன் நிருபர் )

## தேற்றாத்தீவு கொம்புச் சந்திப்பிள்ளையார் ஆலய உற்சவம்

இலங்கையின் மிக உயரமான சுதை விக்கிரகத்தைக் கொண்ட 64 அடி உயர இராஜகோபுரத்தினையுடைய ஆலயம் மட்டக்களப்பு தேற்றாத்தீவு கொம்புச் சந்திப்பிள்ளையார் ஆலயம். இந்த ஆலயத்தில் பிரமோற்சவம் கடந்த 26.04.2023 திகதி புதன்கிழமை காலை களுதாவளை சுயம்புலிங்க பிள்ளையார் ஆலயத்தில் இருந்து கொடியேற்றத்துக்கான கொடிசீலை எடுத்து வரும் பவனியை தொடர்ந்து காலை 11.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. அன்றைய தினம் மாலை விசேட யாகாரம்பம் மூலமூர்த்தி அலங்காரபூஜை, தம்ப பூஜை, வசந்த மண்டப அலங்காரபூஜை, சுவாமி உள்வீதி வெளி வீதி வருதல் என்பன இடம்பெற்றன. பிள்ளையார், சிவன் பார்வதி, விஷ்ணு, வள்ளி தெய்வானை சமமேத முருகப்பெருமான் மற்றும் சண்டேஸ்வர் ஆகிய பஞ்ச மூர்த்திகள், திருவிழா காலங்களில் பவனி வருகை தொடச்சியாக ஒன்பது தினங்கள் இடம் பெற்றது. பத்தாம் நாள் தீர்த்த உற்சவம் இடம்பெற்றது. பிரமோற்சவ



திருவிழா காலங்களில் புஸ்பாஞ்சலி திருவிழா, கர்ப்பூரஜோதித் திருவிழா, சதுர்வேத கோஷத் திருவிழா, பஞ்சமுக அர்ச்சனை திருவிழா, திராவிடதோத்திர விழா, மாம்பழத் திருவிழா, வேட்டைத்திருவிழா, சப்பரத்திருவிழா இடம்பெற்றுவந்த நிலையில் பத்தாம் நாளாகிய சித்திரா பௌர்ணமியன்று தீர்த்தோற்சவம் இடம்பெற்றது. இது ஆலய புனிதகங்கையான பாலாறு பால புஸ்கரணியில் இடம் பெற்றது. தீர்த்தோற்சவத்தின் போது இலங்கையின் பல்வேறு பகுதியில் இருந்து அடியார்கள் கலந்து கொண்டனர்.




# றினோன் தலைவர் சம்பியன்ஷிப் கிண்ணம் சாஹிரா கல்லூரி வசம்



ஹமீட் அல் ஹுஸைனி கல்லூரிக்கு எதிரான 18 வயதுக்கு உட்பட்ட பிரிவு 1 இற்கான றினோன் தலைவர் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் ஆறு கோல்களைப் புகுத்தி கொழும்பு சாஹிரா கல்லூரி கிண்ணத்தை வென்றது.

சுகததாச அரங்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (07) நடைபெற்ற இறுதிப் போட்டியில் சாஹிரா முழு ஆதிக்கம் செலுத்தியது. 7 ஆவது நிமிடத்தில் ஏ. ஆகில் தலையால் முட்டி அந்த அணிக்கு முதல் கோலை பெற்றுக்கொடுத்தார்.

இதன்போது ஹமீட் அல் ஹுஸைனி பெனால்டி வாய்ப்பை மொஹமட் முஷ்தாக் அபாரமாகத் தடுத்தார். பின்னர் சாஹிராவுக்கு கிடைத்த பெனால்டியை மொஹமட் ஷாஹில் கோலாக மாற்றினார். தொடர்ந்து ஷாஹில் 41ஆவது நிமிடத்தில் மற்றொரு கோலை பெற்றதோடு முதல் பாதி முடியும் நேரத்தில் ஆகிலும் தனது இரண்டாவது கோலை புகுத்தினார்.

போட்டியை திசை திருப்பும் எதிர்பார்ப்போடு ஹமீட் அல் ஹுஸைனி இரண்டாவது பாதியில் மாற்று வீரர்கள் சிலரை இறக்கியபோதும் அது கை கொடுக்கவில்லை. ஷாஹில் அந்த எதிர்பார்ப்பை சிதறடித்து 49ஆவது நிமிடத்தில் தனது ஹட்ரிக் கோலை புகுத்தினார்.

ஹமீட் அல் ஹுஸைனி சில வாய்ப்புகளை உருவாக்கியபோதும் எதிரணி கோல் காப்பாளர் முன் அது கைகூடவில்லை.

இந்நிலையில் இலங்கை 17 வயதுக்கு உட்பட்ட அணி வீரரான பரீத் அஹமட் 67 ஆவது நிமிடத்தில் சஹாரி கல்லூரி சார்பில் ஆறாவது கோலை புகுத்தினார்.

# ரக்பி இடைக்கால நிர்வாகத்தை ஒலிம்பிக் குழு ஏற்பதற்கு மறுப்பு



இலங்கை ரக்பி நிர்வாகத்திற்கு சட்டபூர்வமாக நியமிக்கப்பட்ட ரிஸ்வி இல்லியாஸின் தலைமையிலான நிர்வாகக் குழுவை மாத்திரமே இலங்கை தேசிய ஒலிம்பிக் குழு அங்கீகரிக்கும் என்றும் வேறு முறைகளில் நியமிக்கப்பட்ட குழுக்களை ஏற்பதில்லை என்றும் தேசிய ஒலிம்பிக் குழுவின் தலைமைச் செயலாளர் மெக்ஸ்வெல் டி சில்வா சர்வதேச ரக்பி சங்கத்திற்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளார்.

விளையாட்டு அமைச்சு நியமிக்கும் இடைக்கால சபைகளை சர்வதேச ஒலிம்பிக் குழு மற்றும் ஆசிய ஒலிம்பிக் குழு ஏற்பதில்லை என்றும் இலங்கை ரக்பி சங்கத்தின் செயற்பாடுகள் அதன் யாப்பின் கீழ் நிர்வகிக்கப்பட வேண்டும் என்றும் தேசிய ஒலிம்பிக் குழுவின் செயலாளர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த சங்கங்களின் தேர்தல்களை நடத்தும் போது ஒலிம்பிக் குழு மற்றும் விளையாட்டு சட்டத்திற்கு அமைய மேற்கொள்ள வேண்டும் என்றும் மெக்ஸ்வெல் டி சில்வா அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் சர்வதேச ஒலிம்பிக் குழு மற்றும் ஆசிய ஒலிம்பிக் குழு உட்பட ஏழு தரப்பினருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க கடந்த ஏப்ரல் 11 ஆம் திகதி ரிஸ்வி இல்லியாஸ் தலைமையிலான ரக்பி நிர்வாகத்தை கலைத்து ரக்பி நிர்வாகத்திற்கு இடைக்கால சபை ஒன்றை நியமித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இத்தாலி தடகள போட்டியில் தங்கம் வென்றார் அபேகோன்



இத்தாலியில் நடைபெற்ற பிரென்சே ஸ்பிரின்ட் பெஸ்டிவெல் போட்டியில் பங்கேற்ற இலங்கையின் நட்சத்திர குறுந்தூர ஓட்ட வீரரான யுபுன் அபேகோன், ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலிடம் பெற்று தங்கப் பதக்கம் வென்றார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (07) நடைபெற்ற இந்த போட்டியில் 200 மீற்றர் தூரத்தை 20.60 விநாடிகளில் ஓடி முடித்த யுபுன் அபேகோன், 2023 மெய்வல்லுனர் பருவகாலத்தை வெற்றியுடன் ஆரம்பித்துள்ளார்.

இதில் இத்தாலியின் நட்சத்திர குறுந்தூர ஓட்ட வீரர்களான மார்கோ ரிச்சி (20.88) மற்றும் ப்ரான்சிஸ்கோ ரிபேரா (21.08) முறையே 2ஆவது, 3ஆவது இடங்களைப் பிடித்தனர்.

கடந்த ஆண்டு இத்தாலியில் நடைபெற்ற 12ஆவது கெஸ்டிக்லியோன் சர்வதேச மெய்வல்லுனர் தொடரில் பங்குபற்றிய யுபுன் அபேகோன், ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டியை 20.37 விநாடிகளில் ஓடிமுடித்து இலங்கை சாதனையையும், தெற்காசிய சாதனையையும் முறியடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆண்களுக்கான 60 மீற்றர் (6.59), ஆண்களுக்கான 100 மீற்றர் (9.96), ஆண்களுக்கான 200 மீற்றர் (20.37) மற்றும் ஆண்களுக்கான 150 மீற்றர் (15.16) ஓட்டப் போட்டிகளில் இலங்கை மற்றும் தெற்காசிய சாதனைகளுக்கு சொந்தக்காரராக யுபுன் அபேகோன் உள்ளார்.

இதில் ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்போட்டியை 10 விநாடிகளுக்குக் குறைவான காலத்தில் பூர்த்தி செய்த ஒரே தெற்காசிய வீரராகவும் யுபுன் உள்ளார்.

இந்த ஆண்டில் உலக தடகள சம்பியன்சி மற்றும் ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ள நிலையில் யுபுனுக்கு அதிக போட்டிகள் கொண்ட ஆண்டாக இந்த ஆண்டு அமையவுள்ளது. இதில் குறிப்பாக 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் அவர் பதக்கம் வெல்வார் என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

# சாஹிரியன்ஸ் அணி சம்பியன்



பேருவளை, தர்கா நகரில் ஹம்ஸா மற்றும் மஸி குழுவினரின் ஏற்பட்டில் நடைபெற்ற ரமழான் வெற்றிக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் ஸாஹிரியன்ஸ் அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

16 அணிகள் பங்கேற்ற இந்தத் தொடர் அண்மையில் தர்கா நகர் ஸாஹிரா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதன் இறுதிப் போட்டியில் தர்கா நகர் ரோயல் கிங்ஸ் அணியை எதிர்கொண்ட ஸாஹிரியன்ஸ் அணி 10 ஓவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட 93 ஓட்ட இலக்கை 8ஆவது ஓவரில் எட்டியது.

நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட தர்கா நகர் ரூமிகாசிம் கல்வி நிலையத்தின் ஸ்தாபகர் கலாநிதி ரூமி ஹாசிம் மற்றும் அந்த நிலையத்தின் செயலாளர் ஜெஸூக் அஹமட் ஆகியோர் வெற்றிபெற்ற அணிக்கு கிண்ணத்தை வழங்கினார்கள்.

## சர்வதேச செய்திகள்

### 'சே'குவேராவை பிடித்தவர் மரணம்



கியூபப் புரட்சியாளர் எர்னஸ்டோ சேகுவேராவை பிடித்த பொலிவிய ஜெனரல் கரி பிராடோ சல்மொன் 84 வயதில் மரணித்துள்ளார்.

அமெரிக்க இரகசிய சேவையின் ஆதரவுடன், 1967இல் சல்மொன் தலைமையிலான இராணுவ நடவடிக்கை ஒன்றிலேயே செகுவேராவின் ஏற்பாட்டில் நடந்த கம்யூனிச கிளர்ச்சி ஒன்று தோற்கடிக்கப்பட்டது.

அப்போது பொலிவியாவில் வலதுசாரி இராணுவ அரசு ஒன்றே ஆட்சியில் இருந்தது.

இந்நிலையில் ஆர்ஜன்டீனாவில் பிறந்த செகுவேரா கைது செய்யப்பட்ட மறு நாளே இராணுவ அதிகாரி ஒருவரால் கொலை செய்யப்பட்டார். இதில் செகுவேராவை கொன்றவர் என நம்பப்படும் பொலிவிய அதிகாரி மரியோ டெரான் கடந்த ஆண்டு மரணித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### அரபு லீக்கில் சிரியாவை மீண்டும் இணைக்க முடிவு



அரபு லீக் அமைப்பில் ப த்து ஆண்டுகளுக்கு முன் இடைநிறுத்தப்பட்ட சி ரி யாவை மீண்டும் அந்த அமைப்பில் இணைப்பதற்கு அ தன் உறுப்பு நாடுகளின் வெ ளியுறவு அமைச்சர்கள் இடையே இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

கெய்ரோவில் உள்ள தலைமையகத்தில் கடந்த ஞாயிறன்று (07) இடம்பெற்ற வாக்கெடுப்பிலேயே சிரியாவை இணைக்க ஆதரவு கிடைத்துள்ளது.

எதிர்வரும் மே 19 ஆம் திகதி சவூதி அரேபியாவில் நடைபெறவுள்ள அரபு லீக் உச்சிமாநாட்டை ஒட்டியே இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதோடு சிரியாவுடனான பிராந்திய நாடுகளின் உறவு அண்மைக்காலத்தில் இயல்பு நிலைக்கு திரும்பி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அரபு லீக்கின் இந்த முடிவுக்கு அமெரிக்கா மற்றும் பிரிட்டன் கண்டனம் தெரிவித்துள்ளன.

ஜனநாயக ஆதரவு ஆர்ப்பாட்டக்காரர்களை ஒடுக்க கடந்த 2011 மார்ச் மாதத்தில் சிரிய ஜனாதிபதி பஷர் அல் அஸாத் உத்தரவிட்டதை அடுத்தே அரபு லீக் சிரியாவை இடைநிறுத்தியது. இந்த ஒடுக்குமுறை சிரியாவில் சிவில் யுத்தமாக வெடித்தது.

இந்த யுத்தத்தில் கிட்டத்தட்ட அரை மில்லியன் பேர் கொல்லப்பட்டு மேலும் 23 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்தனர்.

சிரியாவின் உள்நாட்டுப் போரால் உருவான நெருக்கடிக்கு இன்னமும் தீர்வுகாணப்படாத நிலையிலேயே அது மீண்டும் அரபு லீக்கில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

அரபு லீக் தலைமைச் செயலாளர், ஜோர்தான், சவூதி அரேபியா, ஈராக், லெபனான், எகிப்து ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கொண்ட அமைச்சர் நிலைக் குழு அமைக்கப்படும். அது சிரியாவுடன் பேசி நெருக்கடிக்குத் தீர்வுகாண முயலும்.

பிராந்திய பிரச்சினைகள் உட்பட, பூசலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான பெருந்திட்டத்தை ஜோர்தான் வரைந்துள்ளது. நெருக்கடிக்கு அரசியல் தீர்வுகாண்பதில் சிரியா ஆர்வம் காட்ட வேண்டும் என்று ஜோர்தான் வலியுறுத்தியது.

### கொங்கோ வெள்ளம் : பலி 400ஐ தாண்டியது



கொங்கோ ஜனநாயக குடியரசில் கடந்த வாரம் இடம்பெற்ற கடும் மழை மற்றும் மண் சரிவில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 401ஆக அதிகரித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை ஏற்பட்ட கடும் மழையில் 200 பேர் வரை உயிரிழந்ததாக நிர்வாகம் முன்னதாக குறிப்பிட்டிருந்தது. இந்நிலையில் கிவு ஏரிக்கு அருகில் இருக்கும் பல கிராமங்களில் உள்ள மக்கள் வெறுங்கையால் சேற்று மண்ணை அகற்றி சடலங்கை மீட்டு வருகின்றனர்.

இந்நிலையில் உயிரிழப்பு 400ஐ தாண்டி இருப்பதாக தெற்கு கிவு மாகாண ஆளுநர் தியோ நிவா பிட்ஜே காசி நேற்றுத் தெரிவித்தார்.

தனது கணவர் உயிர் தப்பி மருத்துவமனையில் இருந்தபோதும் அனைத்துக் குழந்தைகளும் காணாமல்போயிருப்பதாக நியாமுகுபி கிராமத்தைச் சேர்ந்த தாய் ஒருவர் குறிப்பிட்டார். “அது உலகம் அழிந்தது போல் இருந்தது” என்று குறிப்பிட்ட 27 வயது கன்டிலே நஜிமானா தனது பெற்றோர்கள் மற்றும் சோகதரிகளையும் இழந்துள்ளார்.

பலகையால் கட்டப்பட்ட வீடுகள் சேற்று மண்ணால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

கிவி ஏரியின் மற்றப் பக்கம் அண்டை நாடான ருவண்டாவில் கடந்த வாரம் ஏற்பட்ட வெள்ளத்தில் 130க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தனர்.

### பஸ் தரிப்பிடம் மீது கார் மோதி எண்மர் உயிரிழப்பு



அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தில் வீடற்றவர்கள் மற்றும் குடியேறிகளுக்கான முகாம் ஒன்றுக்கு அருகில் உள்ள பஸ் தரிப்பிடத்தில் காத்திருந்தவர்கள் மீது கார் ஒன்று மோதியதில் எட்டுப் பேர் கொல்லப்பட்டு மேலும் பத்துப் பேர் காயமடைந்துள்ளனர்.

மெக்சிகோ நாட்டுக்கு அருகில் உள்ள பிரோன்ஸ் வில்லே நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.


வாகன ஓட்டுநர் கைது செய்யப்பட்டிருப்பதோடு இது வேண்டுமென்று நடத்தப்பட்ட தாக்குதலா என்பது உறுதி செய்யப்படவில்லை.

எனினும் இது திட்டமிட்ட தாக்குதல் என்று பொலிஸாரை மேற்கோள் காட்டி அமெரிக்க ஊடகங்கள் முன்னதாக செய்தி வெளியிட்டிருந்தன.

வேகமாக வந்த கார் சுமார் 200 அடி வரைக்கு தனது வழியில் சிக்கிய அனைத்தையும் மோதித் தள்ளியதாக பார்த்தவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பிரோன்ஸ் வில்லே நகரில் அண்மைக் காலத்தில் சட்டவிரோத குடியேறிகளின் வருகையில் வேகமாக அதிகரித்திருப்பதாக அமெரிக்க எல்லைக் காவல் அதிகாரிகளை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

### வியட்நாமில் சாதனை வெப்பம்



வியட்நாமில் இதுவரை இல்லாத அளவுக்கு 44 செல்சியஸ் சாதனை வெப்பநிலை பதிவாகி இருப்பதோடு காலநிலை மாற்றம் காரணமாக விரைவில் வெப்பநிலை மேலும் அதிகரிக்கக் கூடும் என்று நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

வடக்கு மாகாணமான தான் ஹோவிலேயே இந்த வெப்பநிலை பதிவாகி இருப்பதோடு வெப்பமான நேரத்தில் மக்கள் உட்புறங்களில் இருக்கும்படி அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் மத்திய ஹா டின் மாகாணத்தில் 43.4 செல்சியஸ் வெப்பம் பதிவானதே வியட்நாமின் முந்தைய சாதனையாக இருந்தது.

பிராந்தியத்தின் ஏனைய நாடுகளும் கடும் வெப்பத்தை உணர்ந்து வருகின்றன. தாய்லாந்தின் மேற்கு மாகாணமான மார்க்கில் 44.6 செல்சியஸ் வெப்பம் பதிவாகி இருப்பதோடு மியன்மாரின் தெற்கு நகர் ஒன்றில் ஒரு தசாப்தத்தில் அதிகபட்சமாக 43.8 செல்சியஸ் வெப்பம் பதிவாகி இருப்பதாக அந்நாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

கைத்தொழில் யுகம் ஆரம்பித்தது தொடக்கம் உலக வெப்பநிலை சுமார் 1.1 செல்சியஸ் அதிகரித்திருப்பதோடு அரசுகள் பசுமையில்ல வாயு உமிழ்வுகளை குறைக்க நடவடிக்கை எடுக்காத வரை வெப்பநிலை தொடர்ந்து அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### ஹொங்கொங்கில் இயல்பு நிலை



கொவிட் பெருந்தொற்று கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளதைத் தொடர்ந்து ஹொங்கொங் இயல்பு நிலைக்கு திரும்பிவிட்டதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

சுற்றுலாத்துறை மேம்பாடு தொடர்பில் விடுத்துள்ள விசேட செய்தியிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் இவ்வறிவிப்பை பொருளாதார சுட்டிகள் உறுதிப்படுத்தக்கூடியதாக உள்ளன. சில்லறை விற்பனை அதிகரித்துள்ளதோடு உள்நாட்டு உற்பத்தியில் வளர்ச்சியும் ஏற்பட்டுள்ளது.

வேலையின்மை 3.1 வீதமாகக் குறைவடைந்துள்ளது. இவ்வருடத்தின் முதல் காலாண்டில் மாத்திரம் 4.41 மில்லியன் பேர் ஹொங்கொங்கிற்கு விஜயம் செய்துள்ளனர். இதனை கடந்த வருடத்தின் முதலாவது காலாண்டுடன் ஒப்பிடும் போது 12 மடங்கு அதிகரிப்பாகும்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 மே மாதம் 9ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.